www.padippakam.com



5

# பெண்கள் சந்திப்பு மலர்

1996

படிப்பகம்

www.padippakam.com

போராடும் பெண்களே தம் வாழ்வை வாழ்கின்ற
பெண்கள்

**ජීවත් වන්නේ අරගල කරන කාන්තාවන් ය**

Frauen, die kämpfen, sind Frauen, die leben

படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் சந்திப்பு மலர்

## 1996

Jahreszeitschrift des Frauenforums

"Penkalchanthippu"
Mehringhof
Gneisenaustr -2a
Aufgang iii, 2.Stock
10961 Berlin
GERMANY

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே

பக்கம்
▼


3 குழந்தை வளர்ப்பில் பால் வேறுபாடு
11 பெண்கள் தொடர்பான கருத்தியல்கள், மீறல்கள்
19 பெண்களை இழிவுபடுத்தும் சொற்பதங்கள், பழமொழிகள்
23 குரல் (வ.கீதாவுடன்...)
29 வன்முறைக்கு ஆதரவளிக்கும் நீதியின் கரங்கள்
33 சிறிமாவும் பெண்களும்
35 தீவிரப் பெண்ணியம்
43 வளரும் குழந்தை
52 என்ன செய்யலாம்?

*சிறுகதைகள் :*

'ஒத்தைத் தண்டவாளமும்' ஒரு கறுப்பு நீள முடியும் 15
பச்சோந்திகள் 45

*கவிதைகள் :*

யுத்தகால இரவொன்றின் நெருக்குதல் 18
நம்பிக்கைச் சித்திரம் 28
பரமபிதாக்களே 42
அர்த்தங்கள் –


▲
பக்கம்


☆
நன்றி!
படங்கள் (அட்டைப்படம் உட்பட) : "Sangharsh"
ஓவியங்கள் (பக். 15,45) : சிவா (டென்மார்க்)





படிப்பகம்

www.padippakam.com

– தயாநிதி (நோர்வே)

# குழந்தை வளர்ப்பில் பால் வேறுபாடு

குழந்தைகள் சிறுபராயத்திலேயே தம்முடைய பால் பற்றியும், சமூகத்தில் பெற்றிருக்கும் அந்தஸ்தினையும் (ஆண்,பெண்) வளர்ந்தவர்களுடன் இருக்கும் போது தெரிந்து கொள்கின்றனர். பெண் குழந்தை தாயுடனும் ஆண் குழந்தை தந்தையுடனும் தன்னை அடையாளப்படுத்தி இனம்கண்டு கொள்கின்றது. வளர்ந்தவர்கள் இதற்கு வழிகாட்டியாகவும் இருந்து உதவுகின்றார்கள். இன்றும் எம்மில் பல பெற்றோர்கள் பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளையும் முதல் குழந்தையாக ஆண் குழந்தை பிறப்பதையும் பெரிதும் விரும்புகின்றனர். ஆண் குழந்தை முதல் குழந்தையாக இருக்கவேண்டும் என்பதற்கான காரணம் என்னவென திட்டவட்டமாக தெரியாத போதிலும் வேட்டையாடுதல், போரிடுதல், சொத்துகளுக்கு வாரிசு போன்றவற்றிற்காக இருக்கலாம். பெண் குழந்தைகளினால் பலன் ஏதும் இல்லை; எப்படியும் திருமணம் செய்து வேறு இடத்திற்குச் செல்ல வேண்டியவர்கள்; சீதனமும் கொடுக்க வேண்டும் போன்றன அன்றிலிருந்து இன்றுவரை நியமமாக இருக்கிறது. பொருளாதார மற்றும் ஏனைய காரணங்களினால் பச்சிளம் பெண் குழந்தைகள் அப்போதும் இப்போதும் அநாதரவாக விடப்பட்டனர்/படுகின்றனர். ஆண் குழந்தைகள் பற்றி, 'வளர்ந்து பெரியவனாவான்'





படிப்பகம்

என்ற எதிர்பார்ப்பும், பெண்குழந்தை பற்றி வளர்த்து ஒருவனிடம் ஒழுக்கத்துடன் ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணமும் ஆரம்பத்திலேயே மனதில் பதிக்கப்பட்டு விடுகிறது.

குழந்தைகளை நாம் ஆரம்பத்திலேயே பாகுபடுத்தி விடுகிறோம். சமூகத்தில் நிலவும் இந்தப் பால்வேறுபாடு காரணமாக பெரும்பாலான பெண்கள் ஆண்குழந்தை கிடைக்கவில்லையே என்று ஏங்குகின்றனர். பலர் தமது பெண்குழந்தைக்கு ஆண்குழந்தைகள் அணியும் உடைகளணிந்து ஆண்குழந்தைகளாக உருவகித்துப் பார்க்கின்றனர். இந்தத் தன்மை ஆரோக்கியமானதா? குழந்தைகள் மனிதர்களாக வளர்த்தெடுக்கப்பட வேண்டுமே தவிர, வேறுபட்ட பால்களாக அல்ல. இந்த பாலிரீதியான வேறுபாடு மிகச் சாதுரியமாக நுட்பமான முறையில் ஆரம்பிக்கப்படுகிறது. இந் நிகழ்வு எம்மில் பலருக்கு தெரியாமல் கூட இருக்கலாம். உ-ம்: 'என்ன இந்தத் தடவையும் பெண்குழந்தையா_' என்ற சலிப்பான குரலும் 'என்ன ஆம்பிளைப் பிள்ளையோ' என்ற உற்சாகம் ததும்பம் குரலும் நாம் நாளாந்தம் சந்திப்பவை. குழந்தை ஆணா பெண்ணா என்ற விடயம் எல்லா விடயங்களிலும் கருத்திலெடுத்துக் கொள்ளப்படுகிறது. உடைகள் வாங்கும்போது, ஏன் சூப்பி வாங்கும்போது கூட என்ன குழந்தை என்று ஆராயப்படுகிறது. பாகுபாடு 0-1 வயதிலேயே ஆரம்பித்து விடுகிறது. ஆண் குழந்தைகளுக்கான தன்மைகள், பெண் குழந்தைகளுக்கான தன்மைகள் என்பன சிறுபருவத்திலேயே எதிர்பார்க்கப்படுகிறது. ஆண் சிறுவர்கள் பலமான, எல்லா விடயங்களையும் அறியும் ஆர்வமுடைய, சுறுசுறுப்பான, துடியாட்டமானவர்களாகவும், தம்மையொத்த வயதுடைய பெண்சிறுவர்கள் மீது அதிகாரம் செலுத்துபவர்களாகவும் இருக்கவேண்டும் எனவும் பெண் சிறுவர்கள் மென்மையானவர்கள், கீழ்ப்படிவுடையவர்கள், வசீகரிக்கக் கூடியவர்களாகவும், அமைதியானவர்களாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பெண் குழந்தையொன்றுக்கு ஆண் குழந்தை அணியும் உடையணிந்து விளையாட்டுத் திடலில் விளையாட விடும்போது பார்ப்பவர்களுக்கு அவள் ஆண் குழந்தையாகத் தான் தென்படுகிறாள். அவளது விளையாட்டுத்திறன் விளையாடும் பாங்கு யாவும் கூடவே விளையாடும் ஏனைய ஆண் குழந்தைகளிடமிருந்து அவளை பாகுபடுத்தாமையை அவதானிக்கலாம். அதேநேரம் பெண்குழந்தை என்று தெரிய வந்ததும் 'ஆண் குழந்தைகள்' மாதிரி சுறுசுறுப்பாக இருக்கிறாள் என்று கூறுவதையும் நாம் கேட்கிறோம்.

விளையாட்டுப் பொருட்களை எடுத்துக் கொண்டால் ஆண், பெண் சிறுவர்களுக்கு வேறுபட்டதாக இருக்கிறது. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் எந்த நிலையத்தினை எடுத்துக் கொண்டாலும் பெண் சிறுவர்களுக்கான பகுதியில் பொம்மைகள், தேனீர் தயாரித்து விளையாடத் தேவையானவை, சமைத்து விளையாடத் தேவையானவவை, குழந்தையை குளிப்பாட்டத் தேவையானவை, குழந்தை வண்டில், மெலிந்த இடை மெலிந்த உருவத் தோற்றமுடைய நீண்ட தலைமயிரையுடைய 'பார்பி' பொம்மைகளாகவும், ஆண் சிறுவர்களுக்கான பகுதியில் வகைவகையான கார்கள், ஹெலிகொப்டர்கள், விமானங்கள், துப்பாக்கிகள், F 16, போர்விமானங்கள், கட்டிடங் கட்டுவதற்கான பகுதிகள், ரயிலும் தண்டவாளங்களும், மோட்டார் சைக்கிள்கள் போன்றவையாகவும் இருக்கக் காணலாம். இப் பிரிவில் காணப்படும் பொம்மைகள் கூட Superman, மோட்டார்சைக்கிளில் அமர்ந்த கம்பீரமான ஆண்கள் போன்றவைதான்.

பெண் சிறுவர்கள் பொம்மையுடன், ஆண் சிறுவர்கள் துப்பாக்கி போன்றவற்றுடன் விளையாடுவதில் என்ன தவறு என எம்மில் பலர் கேட்கலாம். பெண் சிறுவர்களை நாம் தாய் என்ற பாத்திரத்திற்கு தயார்படுத்துகிறோம். பராமரிப்பு தேவையானவர்களுக்கு உதவ வேண்டும் என்பதை ஆரம்பத்திலேயே ஊட்டுகிறோம். ஆனால் ஆண் குழந்தைக்கு இவற்றை நாம் செய்வதில்லை. இலை துளிர்த்து வெயில் தொடங்கியவுடன் பூங்காக்களில் சிறுவர்களை அவதானித்தால் உரத்த குரலில் சத்தமிட்டு விளையாடுவதைக் காணலாம். ஆண் சிறுவர்கள் ஆண்சிறுவர்களுடனும் பெண் சிறுவர்கள் பெண்சிறுவர்களுடனும் விளையாடுவதையும் அவதானிக்கலாம். வீதியில் தாய் குழந்தையை வண்டிலில் வைத்து உருட்டிச் செல்வதையும் அருகே சிறிய குழந்தை வண்டியொன்று உருளுவதையும் பார்க்கலாம். தாயின் வண்டிலில் உறங்குகின்ற குழந்தைபோல பொம்மை ஒன்று அலங்கரிக்கப்பட்டு படுத்திருப்பதையும் காணலாம். ஆண்சிறுவர்கள் பொம்மைகளுடன்

www.padippakam.com

விளையாடுவதையோ, அவற்றை சீராட்டு வதையோ யாரும் ஊக்குவிப்பதில்லை. பராமரிப்பு உதவி தேவையானவர்களைக் கவனிக்க வேண்டும் என்ற செய்தி அவர்களுக்கு கூறப்படுவது குறைவு என்று கூறலாம். இதனால் ஆண் சிறுவர்களிடம் அன்பு காட்டுதல், பராமரித்தல் போன்ற திறமைகள், இயல்புகள் விருத்தியடைய வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கின்றன.

பெண் சிறுவர்கள் மீது அழகுப் பொருளாக காட்சியளிக்க வேண்டும் என்ற ஒருவகை எதிர்பார்ப்பு திணிக்கப்படுகிறது. ஆடைகளை அழுக்காக்குவது விரும்பப்படுவதில்லை. இதனால் விளையாடும் இடம், விளையாட்டுக்கள் மட்டுப் படுத்தப்படுகிறது. ஆண் சிறுவர்கள் உடைகளை அழுக்காக்குபவர்களாகவும், தூசிபடிந்தவர்களாகவும் விளையாடுபவர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முடிவில் பெண்சிறுவர்கள் அமைதியான விளையாட்டுக்களைத் தெரிவு செய்கின்றனர். சிறுபராயத்திலேயே மாறுதலற்ற, சுவாரசியமற்ற, மிகக்குறைந்த சிருஷ்டிக்கும் திறனுடைய வேலைகள் மனதில் பதிய வைக்கப்பட்டு எதிர்காலத்தில் இவ்வாறான வேலைகளை செய்வதற்கு தயார்படுத்தப்படுகின்றனர். இவர்களின் வயதையொத்த ஆண்சிறுவர்கள் ஓடிவிளையாடுதல், உதைபந்தாட்டம், சண்டைபோட்டு யார் பலமானவர் என்பதை நிரூபிப்பவர்களாகவும் தயார்படுத்தப்படுகின்றனர்.

***ஆண் குழந்தைகளுக்கான தன்மைகள், பெண் குழந்தைகளுக்கான தன்மைகள் என்பன சிறுபருவத்திலேயே எதிர்பார்க்கப்படுகிறது. ஆண் சிறுவர்கள் பலமான, எல்லா விடயங்களையும் அறியும் ஆர்வமுடைய, சுறுசுறுப்பான, ஓடியாட்ட மானவர்களாகவும், தம்மையொத்த வயதுடைய பெண்சிறுவர்கள் மீது அதிகாரம் செலுத்துபவர் களாகவும் இருக்கவேண்டும் எனவும் பெண் சிறுவர்கள் மென்மையானவர்கள், கீழ்ப்படிவு டையவர்கள், வசீகரிக்கக் கூடியவர்களாகவும், அமைதியானவர்களாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.***

பெண் சிறுவர்கள் தங்களின் தாம் ஒவ்வொரு நாளும் கண்ணாடிக்கு முன்னால் நேரத்தைச் செலவிடுவதையும், கண்ணாடியின் முன் தாமின் செயற்பாடுகளையும் மிகக் கவனமாக அவதானிக் கின்றனர். 4-5 வயதிலேயே பெண்சிறுவர்கள் தங்களது வெளித்தோற்றத்தில் மிகவும் கவனம், ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள். உடைகள் பற்றியும் தலையலங்காரம் பற்றியும் கதைத்துக் கொள்கிறார்கள். பெண் சிறுவர்கள் பெண்களுக்கு உரிய அலங்காரத்தை பின்பற்றுவதையிட்டு வளர்ந்தவர்களிடமிருந்து மிகப் பெரிய வரவேற்புக் கிடைக்கிறது. இவர்கள் பாராட்டையும் உற்சாகப்படுத்தலையும் பெறுகின்றனர். பெண்களின் பரந்ததல்லாத, மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்கள் கொண்ட வட்டத்திற்குள் இழுக்கப்படுகின்றனர். பெரும்பாலான பெற்றோர் இதை விரும்புகின்றனர். பெண் சிறுவர்களின் ஆர்வம் காட்டும் துறைகள் மட்டுப்படுத்தப்படுகின்றது. இவர்கள் தாம் எவ்வாறு தோற்றம் அளிக்கிறோம் என்பதிலும் பொம்மைகளுடன் விளையாடுவதிலும் அவற்றை அழகுபடுத்துவதிலும் அதிக கவனத்தைச் செலுத்துகின்றனர். இவர்கள் வளர்ந்த பெண்களின் அச்சுத்தப்பாத பிரதியாக்கப்படுகிறார்கள்.

ஆண் சிறுவர்களின் உலகம் மாறுபட்டது. சண்டையிடுதல், தம்மைவிட வயதில் குறைந்த வர்களுடன் கட்டிப்புரள்தல் போன்றவற்றில் ஆர்வமுடையவர்களாகின்றனர்.

''நாங்கள் என்ன செய்யலாம்; ஆண் சிறுவர்கள் இயற்கையிலேயே இப்படித் தானே'' என்று வளர்ந்தவர்கள் உற்சாகப்படுத்துகிறார்கள். 3-4 வயதுப் பருவத்திலேயே, பெரும்பாலான ஆண் சிறுவர்கள் பெண் சிறுவர்களுடன் விளையாடுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. இவர்கள் தந்தை தாயை எவ்வாறு நடத்து கின்றார், எவ்வாறு அலட்சியப்படுத்துகின்றார் என்பதையும் மற்றப் பெண்களை எவ்வாறு நடத்துகின்றனர் என்பதையும் உன்னிப்பாகக் கவனிக்கின்றனர். தொலைக்காட்சி மற்றும் ஏனைய மக்கள் தொடர்புச் சாதனங்களிலும் ஆண் மேலானவன் என்ற கருத்து பரப்பப்பட்டு பதியவைக்கப் படுவதோடு, பெண் சிறுவர்களை விட -வளர்ந்த பெண்களை விடக்கூட- மேலானவன் என்ற தன்மைக்கு வரவேற்பளிக்கப்படுகிறது.



படிப்பகம்

அரிதாகவே ஆண் சிறுவர்கள் பெண் சிறுவர்களுடன் விளையாடுகின்றனர். விளையாட்டின் போதும் பெண் சிறுவர்களை கேலி செய்வதும், தம்மை கெட்டிக்காரர்களாகக் காட்டிக் கொள்ளவும், உடலியல் பலத்தை நிரூபிக்கவும் முயல்கின்றனர்.

பெண் சிறுவர்கள் பாரம்பரிய குழந்தை வளர்ப்பினால் உடல் அமைப்பு, உடலில் உள்ள தசை நார்களின் செயற்பாடுகள், அவற்றைப் பயன்படுத்தல், பயிற்சிக்குட்படுத்தல் என்பவற்றுக்கு பழக்கப்படுத்தப்படுவது மிகமிகக் குறைவு. உடற்பலம் தேவைப்படும் வேலைகளைச் செய்ய முடியாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். ஆண்சிறுவர்கள் தங்களுடைய உடல் பலத்தை விளையாட்டுக்கள் மூலமும், சண்டையிடுவதன் மூலமும் விருத்தி செய்கின்றனர். உடற்பலம் தேவைப்படும் வேலைகளை ஆண்கள் செய்வதன் மூலம் உடலரீதியாக பலமானவர்கள் என்பதைக் காட்டிக் கொள்கின்றனர்.

பெண் சிறுவர்கள் மிகவும் சிறிய பருவத்திலேயே ஆண் சிறுவர்களுக்குக் கீழ்ப்படியவும், சகித்துக் கொண்டு பொறுமையாக பழகிக் கொள்ளவும் பயில்கின்றனர். உரத்த குரலில் ஆண் சிறுவர்கள் கதைத்தால் பெண்சிறுவர்கள் அமைதியாக பதிலளிக்கின்றனர். ஆண்சிறுவர்கள் ஆத்திரத்துடனும் கொடுமையாகவும் நடந்து கொண்டால், பெண்சிறுவர்கள் மௌனமாகவும் உற்சாகமின்றியும் நடந்து கொள்கின்றனர். ஆண் சிறுவர்கள் தாம் ஏமாற்றம் அடைந்த ஆத்திரமான நிலையிலும் பெரும்பாலும் மிக தந்திரமாகவும், குறுகிய மனப்பான்மையுடனும் நடந்து கொள்கின்றனர். இதனால் பலருக்கு ஆண்சிறுவர்கள் பெண் சிறுவர்களைவிட கவர்ச்சியுடையவர்களாகத் தென்படுகின்றனர். பெண் சிறுவர்கள் குழந்தைப் பருவத்திலேயே உளவியல் ரீதியிலான அடக்குதல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதேவேளை ஆண் சிறுவர்கள் உயர்ந்தவர்கள், சுதந்திரமானவர்கள் என்ற தெளிவான கருத்துகளுடனும் நிதானமானவர்கள், 'வசீகரமானவர்கள்' எனவும் வர்ணிக்கப்பட்டு உலா வருகின்றனர். ஆண்சிறுவர்கள் தமக்குக் கிடைத்துள்ள சலுகைகளையும், தனிச் சுதந்திரத்தையும் மிகத் தெட்டத் தெளிவாக உணர்ந்து கொள்கின்றனர்.

சிறுவர்களின் வெளித் தோற்றத்தில் வேற்றுமைகளை தெளிவாக அவதானிக்கலாம். பெண்சிறுவர்கள் பெண்களுக்குரிய சிகையலங்காரத்தையும், நீண்ட தலைமயிரையுடையவராகவும் இருக்கின்றனர். நீண்ட தலைமுடி பெண்ணுக்குரிய அம்சமாகக் கருதப்படுகிறது. பெற்றோர்களில் பெரும்பாலானோர் தமது பெண் குழந்தைகள் பெண்ணுக்குரிய அலங்காரத்தில் இருப்பதை விரும்புகின்றனர். சட்டை அணிவது சாதாரணமாக இருந்தாலும் பாவாடை சட்டை பெண் சிறுவர்களுக்கு மிகவும் அழகாக இருப்பதாக அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டு பாவாடை சட்டை அணிவிப்பதும், தாயைப் போல நிறத்தில்/அமைப்பில் (பற்றன்) உடையணிவதையும் நாம் காண்கிறோம். மொத்தத்தில் நாம் பெண் சிறுவர்களை சிறிய பெண்ணாக தோற்றமளிக்கச் செய்கிறோம். ஆண் சிறுவர்களுக்கு தந்தையைப் போல உடையலங்காரம் செய்வதும், இப்போது 3-4வயதிலேயே கோட் சூட் அணிந்து/வேட்டி நாஷனல் அணிந்து கட்டையாக வெட்டப்பட்ட தலை அலங்காரத்துடன் குட்டி ஆணாகக் காட்சிப்படுத்துகிறோம். பட்டுப் பாவாடை சட்டை, தலையலங்காரம், நீண்ட தலைமுடி, பூ பொட்டுடன் குட்டிப் பெண்ணாக அலங்கரிப்பதும் மிகச் சர்வசாதாரணமாகும். ஆண் சிறுவர்கள் பெண் சிறுவர்களை வெளித் தோற்றத்தில் ஒத்தவர்களாக இருப்பதில்லை. ஆண்சிறுவர்கள் நீண்ட தலைமுடியுடன் இருப்பது வெட்கத்திற்குரியது.

பெண்சிறுவர்களுக்கு சுதந்திரமான, தன்னம்பிக்கையுள்ள தனிநபராக வளர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாத போதிலும் அவர்களை சமூகத்திற்கு பொருத்தமானவராக்கும் படிமுறைகளை (Socialization) போராட்டமின்றி ஏற்றுக் கொள்கின்றார்கள் என்று கூற முடியாது. பலர் தங்களின் நிலைமை, பெண்களுக்கு சமூகத்தில் வழங்கப்பட்டிருக்கும் பாத்திரங்கள் போன்றவற்றிற்கு எதிராகப் போராடுகிறார்கள்; சமூகத்தில் பால்ரீதியாக வேறுபட்ட தொழிற்பாடுகள் எதிர்பார்க்கப்படுவதை எதிர்க்கிறார்கள். உ-ம் பெண் சிறுவர்களுடன் விளையாடுவதை விடுத்து ஆண்சிறுவர்களுடன் விளையாடுபவர்களாகவும், (ஆண்சிறுவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்ற) சுறுசுறுப்பு உடையவர்களாகவும் சண்டைபிடிப்பவர்களாகவும் 'வன்மையானவர்களாகவும்' சிலவேளைகளில் வயதையொத்த ஆண்சிறுவர்களைவிட 'வன்முறை' கூடியவர்களாகவும் ஆகின்றனர். இம்மாதிரியான

www.padippakam.com

பெண் சிறுவர்களை 'ஆண்மாதிரி' என்றும், வயதுக்கோளாறு என்றும், வயது வரும்போது புரிந்து கொள்வார்கள் என்றும் கூறி ஒதுக்கி விடுவதுண்டு. ஆனால் இந்தப் பெண் சிறுவர் வளர்ந்தவர் தன்மீது திணிக்கும் பெண் பாத்திரத்தையும் அந்த பாத்திரத்திற்குரிய செயற்பாடுகளையும் வெறுக்கிறாள். அத்தோடு எதையும் எதிர்க்காத மந்தமான தனது சிநேகிதிகளையும் அலட்சியப்படுத்துகிறாள். அவள் தான் ஒரு 'ஆண்குழந்தையாக பிறந்திருக்கலாம்; எல்லா சுதந்திரங்களையும் பெற்றிருக்கலாம்' என்று எண்ணுகிறாள். Freud இன் காலத்திலிருந்து உளவியல் பகுப்பாய்வுகளில் கூறப்படுவது போன்று 'ஆண் சிறுவர்களிடம் இருக்கும் ஆண்உறுப்பு' இல்லையே என்ற கவலையோ, பொறாமையோ அடையவில்லை. மாறாக சமூகத்தில் ஆண் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சலுகைகள், அந்தஸ்து பற்றியே ஆதங்கமடைகிறாள். சமூகம் - அதிலுள்ள வளர்ந்த அங்கத்தவர்கள் - எதிர்பார்க்கும் நபராக அல்லாமல், தனக்கு பிடித்தமான படியும் சுதந்திரமாகவும் இருப்பதற்காகப் போராடுகிறாள். பாரம்பரியங்கள், சமூகத்தில் வழக்கிலுள்ள எழுதப் பட்ட/எழுதப்படாத ஒழுக்கவிதிகள், வரையறைகள் என்பன பெண்-ஆண்களின் நடவடிக்கைகளை மிகவும் கவனமாக ஒழுங்குபடுத்துகிறது.

வாலிபப் பருவம் இருபாலாருக்குமே பரிச்சயமற்ற, வினோதமான, தெளிவற்ற விடயங்களை பகுத்து அறிய விரும்புகின்ற காலமாகும். இருபாலாரிடமும் பருவத்திற்குரிய ஓமோன்களின் தொழிற்பாடுகள் அதிகரிக்கின்றன. இப் பருவத்தில் இருபாலாருக் குமே கட்டுப்பாடு தேவைப்படுகிறது. ஆண் சிறுவர்கள் தவறான வழிகளில் தங்களுடைய பாலியல் தேவையை பூர்த்தி/திருப்தி செய்யவும், துடிப்பாகச் செயற்படவும், தைரியத்துடன் ஆரம்பிப் பவர்களாகக் கற்றுக் கொள்கின்றனர்.

பெண்களுக்கு வாலிபப் பருவம் வேறு விதமானது. அவர்களைப் பொறுத்தவரையில் ஆண்வாலிபர்களால் கவரப்பட வேண்டும் என்பதே எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்களுக்கு வாலிபப் பருவத்தில் வெளித்தோற்றம் முக்கிய பங்கினை வகிக்கின்ற போதிலும், பெண்களுக்கு வாலிபப் பருவத்தில் வெளித்தோற்றம் வேறுபட்ட பாரிய பங்கினை வகிக்கிறது. பத்திரிகைகள், சஞ்சிகைகள், திரைப்படங்கள், விளம்பரங்கள் யாவற்றிலும் பெண் எப்படி உடையணிய வேண்டும், வெளித்தோற்றம் எவ்வாறு இருக்க வேண்டும், எவ்வாறு காட்சி தருவதின்மூலம் ஆண் வாலிபர்களின் கவனத்தை ஈர்க்கலாம் போன்ற விடயங்கள் திணிக்கப்படுகிறது. பெண்கள் தமது வாலிபப் பருவத்தில் தம்மைச் சூழ காணப்படும் இயற்கையல்லாத அழகுத் தோற்றங்களுடன் தம்மை ஒப்பிட்டு (ஐரோப்பாவில் யூலியா றொபேட்சன், இந்தியாவில் சிறிதேவி?) தாம் அழகாக காட்சியளிக்காவிட்டால் பெண் என்ற பாத்திரத்தை வகிக்க முடியாமல் வாழ்வில் சந்தோசம் இன்றிப் போய் விடுவோமோ என்று அஞ்சுகின்றனர். (எம்மிடையே நிறம்குறைவு, உடல் பருமன் கூடியவர், பல்லு மிதப்பு என்ற பாகுபாடு உண்டு.) இந்த அச்சத்தினால் பெண்கள் பல மணித்தியாலங்களை கண்ணாடியின் முன்னால் செலவிடுவதிலும், அழகுக் குறிப்புகளைத் தேடி வாசிப்பதிலும், எவ்வகையான உணவுப் பொருட்களை உண்பதன் மூலம் பருமனற்ற உடலமைப் பெறலாம், எந்த மாதிரியான உடையில் மெலிவாக அழகாகத் தென்படலாம் என்பவற்றை ஆராய்வதிலும் கழிக்கின்றனர்.

பெண்கள் வாலிபப் பருவத்தில் கல்விகற்று ஓர் சுய தொழிலை பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்ற கருத்தை ஊக்குவிப்பதற்கு மாறாக, வாழ்வின் அதியுயர் இலட்சியம் திருமணம் செய்தலே என்ற கருத்திற்கு ஒழுங்கு படுத்தப்படுகிறாள். பெண்கள் மீது ஆண்கள் காட்டும் 'தாம் மேலானவர்கள்' என்ற தன்மை வாலிபப் பருவத்தில் மேலும் விருத்தியடைகிறது. இப்போது இவர்கள் கல்வியறிவு, உடற்பலத்தில் கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய கருத்துக்களும் விமர்சனங்களும் பெண்களது முடிவுகளாகின்றன. அமைதியான, அழகான, வசீகரமான வாலிபப் பருவ பெண்கள் ஆண்களுடன் பழகுவதற்கு இலகுவாக வாய்ப்புக் கிடைக்கிறது. அதேவேளை அறிவாற்றலும் புத்திக்கூர்மையுமுடைய 'அழகு குறைந்த' வாலிபப் பெண்ணாக இருப்பது வாலிப ஆண்களிடையே வரவேற்பைப் பெறுவதில்லை. வாலிபப் பெண்கள் வாலிப ஆண்களுடன் பழகும் போது தம்முடைய ஆற்றல்களை , விடயங்கள் பற்றிய அறிவை மறைத்து வைத்திருக்க அழுத்தப்படுகின்றனர். புத்திசாதுரியமுடைய பெண் 'பெண்ணல்லாதவள்' என்று வர்ணிக்கப்படுவதோடு, கேலிக்குள்ளாக்கவும் படுகிறாள். இவற்றைத் தவிர்க்க வேண்டுமானால், பிரமிக்கத்தக்க



படிப்பகம்

www.padippakam.com

அழகுடையவளாக இருக்க வேண்டும். 'உண்மையில்' வாலிப ஆண்கள் நம்மை மீறிந்த ஆர்வத்துடன் பூசிக்கின்ற பெண்களை பெரிதும் விரும்புகின்றனர். வாலிப ஆண்களின் ஆபாசமான பகிடிகளுக்கு பெண்கள் மரியாதையாக சிரிப்பதோடு இவர்கள் ஆபத்தான 'ஆண்கள்' என்ற கருத்தினை உருவாக்க துணைபோகின்றனர். ஆண் வாலிபப் பருவத்திலும் தனது நடவடிக்கைகள், செயற்பாடுகள் சரியானவை என்ற கருத்துடன் அவற்றை மேலும் வளர்த்துக் கொள்கிறான்.

குழந்தை வளர்ப்பில் ஆண் குழந்தைகளுக்கு எதிர்க்கும் பழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது. 'சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை', 'அவனால் முடியும்', 'அவன் தப்பித்துக் கொள்வான்' போன்ற 'விற்றமின் மாத்திரைகள்' நாளுக்கு நாள் ஊட்டப்படுவது எமக்குத் தெரிந்ததே. 'ஆண்' என்பதற்கு சமூகம் வழங்கும்/எதிர்பார்க்கும் இயல்புகளை/தன்மைகளை விரும்பாத, ஏற்காத, மற்றவர்களை நசுக்க மறுக்கின்ற, சுயநலத்திற்காக செயற்பட மறுக்கின்ற பலர் இருக்கின்றனர். தமது உடற்பலத்தை நிரூபிக்க விரும்பாது, மற்றவர்களிடம் அடிவாங்கப் பயந்த, வெட்க சுபாவம் உடையவரும் இருக்கின்றனர். இவர்களுக்கு 'பொம்பிளை மாதிரி' என்ற நாமம் சூட்டப்படுகிறது. இந்த ஆண் சிறுவர்கள் 'உண்மையான' ஆண் சிறுவர்களால் இழிவாக மிகமிகக் கேவலமாக நடத்தப்படுவதோடு, கேலிக்கு உள்ளாக்கவும் படுகின்றனர். இந்த ஆண் சிறுவர்கள் 'உண்மையான' ஆண் சிறுவர்களுக்கு ஓர் அச்சுறுத்தலாக இருக்கின்றனர். ஏனெனில் இவர்கள் ஆண்கள் பற்றி பெண்கள் வைத்திருக்கும் எண்ணங்களை உடைத்துவிடலாம் எனவும் பயப்படுகின்றனர்.

பெண் சிறுவர்களுக்கு ஆண் சிறுவர்களை விட கூட்டாகச் சேர்ந்து செயற்படுதல், வேலையைப் பங்கிடுதல் போன்றவற்றை வளர்த்தெடுக்க வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. பெண் சிறுவர்கள் ஒருவருடன் ஒருவர் நட்புடன் பழகுகின்றனர். இவர்களது நட்பு பொறாமை, போட்டி போன்றவற்றை உள்ளடக்கியதல்ல. பெரும்பாலும் நீண்டகால, ஆழமான நட்பினை ஏற்படுத்திக் கொள்கின்றனர். ஒருவரை ஒருவர் பாராட்டுபவர் களாகவும், உண்மை நேர்மையுடன் நடந்து கொள்கின்றனர். உள்ளார்த்தமாக பெண் சிறுவர்கள் ஆண் சிறுவர்களின் மேலான நிலையை அலட்சியம் செய்கின்ற போதிலும், அதை வெளிக்காட்டி கூடியளவிற்கு தயாரான முதிர்வினை உடையவர் களாக இல்லாமல் இருக்கின்றனர். ஆண் சிறுவர்களுடன் விளையாடுவதை இவர்கள் பெரிதும் விரும்புவதில்லை. அநேகமாக விளையாட்டு சண்டையிலோ அடிபிடியிலோ கட்டிப்புரள்வதிலோ முடிவடையும் என்பதாலாகும்.

**பெண்கள் வாலிபப் பருவத்தில் கல்விகற்று ஓர் சுய தொழிலை பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்ற கருத்தை ஊக்குவிப்பதற்கு மாறாக, வாழ்வின் அதியுயர் இலட்சியம் திருமணம் செய்தலே என்ற கருத்திற்கு ஒழுங்குபடுத்தப் படுகிறாள்.**

பெண் சிறுவர்கள் தமக்குப் பிடித்த விளையாட்டுக்களை தமக்கு விருப்பமான முறையில் விளையாடுவதையே விரும்பு கின்றனர். பெண் சிறுவர்கள் கூட்டாக செயற்படுகின்ற தன்மையானது கடுமையான போட்டியுடனும் சண்டையுடனும் சுயநலவாதி யாகின்ற தன்மையை விட ஆரோக்கியமான தாகும். பெண்குழந்தை வளர்ப்பில் காணப்படுகின்ற சாதகமான விடயங்கள் ஆண் குழந்தை வளர்ப்பிலும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். ஆண்குழந்தை வளர்ப்பு முறையானது ஒரு வகையில் தன்னியல்புவாதிகளை உருவாக்க துணைசெய்கிறது. இவர்கள் வர்க்க வேறுபாடுடைய சமூகத்திற்கான மிகச் சரியான முன்னுதாரணங்களாவர். இவர்கள் மற்றவர்களை அடக்குவதற்கான பயிற்சியைப் பெற்றவர்கள். இருபாலாரிடமும் கூட்டாகச் சேர்ந்து செயற்படும் தன்மையை ஊக்குவிப்பது முன்னேற்றமானது. இத்தன்மை அதிகாரத்திற்கான மோதலை தவிர்த்துக்கொள்ள உதவுவதோடு மனிதர் களிடையே காணப்படும் செயற்கையான பிரிவு களைக் களையவும் உதவுகிறது.

மக்களை நிரந்தரமாகப் பிணைத்திருக்கும் பாரம்பரியங்கள், சமூகத்தில் வகிக்கும் பாத்திரம் என்பன பால், வர்க்கம் என்பவற்றில் தங்கியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இது சந்ததி வழியாக காவப்பட்டு வருகிறது. பெண்கள் தமது அடக்குமுறை, சுதந்திரமற்ற தன்மை முதலியவற்றை தமது பெண் சிறுவர்களுக்கு வழங்குகின்றனர். அத்துடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எவையெவற்றைச் செய்யலாம்/செய்யக்கூடாது என்பவற்றையும் போதிக்கின்றனர்.

> ***வளர்ந்த ஆண்களிடமும், பெண்களிடமும் காணப்படும் சிந்தனை, மனநிலை மிகவும் வேறுபட்டதே. உண்மையிலே எம்முடைய சிந்தனை எமது இயற்கையானது அல்ல. நாம் வாழ்கின்ற சமூகத்திற்கு பொருத்தமானவர்களாக எம்மை மாற்றுகின்ற செயற்பாட்டின் மூலம் ஏற்பட்ட திரிக்கப்பட்ட குரூரமான வடிவமாகும்***

'உண்மையான' பெண் சிந்தனை என்ன என்பதையும் போதிப்பதோடு வீட்டுவேலைகளில் பங்கெடுத்தல், வெளித்தோற்றத்தில் ஆர்வம் செலுத்தப்பழகுதல், அமைதியாகவும் அன்பாகவும் பணிவாகவும் நடந்து கொள்ளுதல், உடைகளை அழுக்காக்காது பொம்மைகளுடன் விளையாடுதல் போன்றவற்றை வரவேற்று உற்சாகப்படுத்துகின்றனர். பெண் சிறுவர்களுக்கு சமையல், தையல், பின்னல் வேலைகளை பழக்குவதில் முன்நின்று ஊக்குவிக்கின்றனர். ஒரு நல்ல மனைவி எவ்வாறு இருக்கவேண்டும், குடும்பத்தில் அமைதி நிலவவும் குடும்பம் பிரிந்து போகாமல் இருக்க எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் போதிக்கின்றனர்.

தந்தை சகல அதிகாரங்களையும் கொண்ட குடும்பத்தின் தலைவனாக இருக்கின்ற நிலையை சுட்டிக்காட்டி, அச்சுறுத்தி தனது பெண் குழந்தைகளை ஆணுக்கு மரியாதையாக இருக்க வேண்டும் என்ற பயத்தை விதைக்கிறாள் தாய். ஆண் சிறுவர்களை வீட்டு வேலைகளில் கலந்து கொள்ள அனுமதிப்பதில்லை. அதோடு அவர்களுக்கு பெண் சிறுவர்களை விட சலுகைகள் வழங்கப்படுகிறது. பெண்சிறுவர்கள் கண்ணாடிப் பொம்மைகளை கண்காணிப்பது போல கவனித்துக் கொள்ளப் படுகிறார்கள். ஆனால் ஆண்சிறுவர்கள் விளையாடுவதையோ வெளியில் திரிவதையோ பெரிதுபடுத்துவதில்லை என்று கூறலாம்.

எம்மில் பலர் பெண்களின் அடக்குமுறைக்குத் துணைபோகிறோம். எம்முடைய இரண்டாந்தரமான நிலைக்கு காரணம் என்ன? ஏன் இப்படி ஏற்பட்டது? என்ற ஆய்வுக்குள்ளும் தம்மை இட்டுக் கொள்ளாது ஆண் மேலாதிக்க சமூகத்திலுள்ள பெண் பற்றிய தவறான கருத்துக்களை அப்படியே பெண் குழந்தைக்கு ஊட்டுகிறோம்.

- நாம் உண்மையிலேயே இப்போதிருக்கின்ற சமனற்ற நிலைமையை மாற்றவேண்டும் என்று விரும்பினால் நாம் எமது குழந்தைகளுக்கு போதிப்பவற்றின் உள்ளடக்கம் பற்றி சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

- நாம் ஆண்குழந்தைகளுக்கும் பெண்குழந்தைகளுக்கும் சமவாய்ப்புக்களை வழங்கவேண்டும். பழக்க வழக்கங்கள் ஒழுக்க நெறிகளை ஒரேமாதிரி நடைமுறைபடுத்த வேண்டும்.

- ஆண்சிறுவர்களுக்கும் பெண்சிறுவர்களுக்கும் காணப்படும் இயல்புகளை ஒரே மாதிரி பார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

- குழந்தைகளுக்கு நிற, வடிவமைப்பு வேறுபாடற்ற ஆடைகளை அணிவிப்பதோடு வேறுபாடற்ற விளையாட்டுப் பொருட்களை வழங்கவேண்டும்

- நாம் பெண்சிறுவர்களையும் ஆண்சிறுவர்களைப்போல சுதந்திரமான தனிமனிதர்களாக பார்க்க/ஏற்க கற்றுக் கொள்ள வேண்டும்.

- கல்வி வாய்ப்புக்கள், உடற்பயிற்சிக்கான வாய்ப்புக்களை சமமாக வழங்கவேண்டும்.

காலம் காலமாக இருந்துவரும் கருத்தான பெண்குழந்தைகளும் ஆண்குழந்தைகளும் வித்தியாசமான 'இயற்கையான இயல்புகளை' கொண்டவர்கள் என்ற கருத்து பிற்போக்கானது எனவும், வதந்தியாகவும் அதைப் பார்க்க வேண்டும். இந்தப் பாரம்பரியமான குழந்தை வளர்ப்பு என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை சீர்தூக்கிப் பார்க்க தவறக்கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

வளர்ந்த ஆண்களிடமும், பெண்களிடமும் காணப்படும் சிந்தனை, மனநிலை மிகவும் வேறுபட்டதே. உண்மையிலே எம்முடைய சிந்தனை எமது இயற்கையானது அல்ல. நாம் வாழ்கின்ற சமூகத்திற்கு பொருத்தமானவர்களாக எம்மை மாற்றுகின்ற செயற்பாட்டின் மூலம் ஏற்பட்ட திரிக்கப்பட்ட குருமான வடிவமாகும்.

பொதுவாக பெண்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள எல்லைப்படுத்தப்பட்ட வாய்ப்புகளினால் வேதனையை அனுபவிக்கின்றனர். நாம் சோம்பலான, சிருஷ்டிக்கும் திறன் குறைந்த, ஒரே வேலையை திரும்ப திரும்ப செய்வதற்கு பழக்கப்பட்ட சலிப்பான வாழ்க்கையை வாழ்கிறோம். குழந்தை வளர்ப்பானது இந்த வாழ்க்கை முறைக்கு உந்து சக்தியாகவும், வழிகோலுவதாகவும் இருக்கிறது. இந்த வளர்ப்புமுறை எதிர்காலத்தில் பெண்கள் கழுவுதல், சலவை செய்தல், குழந்தை பராமரித்தல், உணவுப் பொருட்களை பெட்டியில் அடைத்தல், நெசவு, பெல்ற்றில் வரும் பொருட்களை எண்ணிக் கணக்கெடுத்தல், லேபல் ஒட்டுதல் போன்ற சுவாரசியமற்ற சம்பளம் குறைந்த வேலைகளை தெரிவு செய்ய வழிதூர் உதவுகிறது.

இலங்கையுடன் ஒப்பிடும்போது நாம் குடிபுகுந்திருக்கும் நாடுகளில் எமக்கு சாதகமான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றே நான் நம்புகிறேன். எமக்கு கிடைக்காத வாய்ப்புக்கள் எமது குழந்தைகளுக்கு கிடைக்கலாம். நாம் பால்வேறுபாடின்றி எமது குழந்தைகளை வார்த்தெடுக்க முயலவேண்டும்.

✘

---

## பெண்ணியம் சம்பந்தமான சில நூல்கள் . . .

**அரசு-குடும்பம்-பெண்ணியம்**
(தொகுப்பு : அ.மார்க்ஸ்,
இ.ரவிக்குமார்,பெ.வேல்சாமி)
வெளியீடு :
விடியல் பதிப்பகம்
3, மாரியம்மன் கோவில் வீதி,
உப்பிலிப்பாளையம்,
கோவை - 641 015

**பெண்ணியம்**
(ஆய்வுக் கட்டுரைக்கள்)
தொகுப்பு : பேரா.டாக்டர் சு. சண்முகசுந்தரம்
KAAVYA
Publishers & Booksellers
16, 17th E Cross,
Indira Nagar
Bangalore - 560 038

**பெண்ணியமும் கலை இலக்கியப் பிரதிகளும்**
தொகுப்பாசிரியர் : சண்முகசுந்தரம்
KAAVYA

**பெண்ணெனும் படைப்பு**
(சில மானுடவியல் குறிப்புக்கள்)
தமிழாக்கம் : டாக்டர். க. பஞ்சாங்கம்
வெளியீடு : செல்வன் பதிப்பகம்
25, 'காசி இல்லம்'
20 வது குறுக்குத் தெரு,
அவ்வை நகர்,
புதுச்சேரி - 605008.

**இந்துர் பெண்ணியம்**
(தி. ஜானகிராமன் நாவல்கள்)
முனைவர் க. பரிமளம்
வெளியீடு சமுதாய சிந்தனை செயல் ஆய்வ மையம்
(ஐடியாஸ்)
26 யு, வாழைத்தோப்பு,
சிந்தாமணி ரோடு,
மதுரை - 625 001.

**பெண்ணிலைச் சிந்தனைகள்**
சித்திரலேகா மௌனகுரு
வெளியீடு :
பெண்கள் கல்வி ஆய்வு நிலையம்
17A, Park Avenue,
Colombo -5



படிப்பகம்

www.padippakam.com

(௨௧.10.95 அன்று சுவிஸில் நடைபெற்ற 'பெண்கள் சந்திப்பு' இல் வாசிக்கப்பட்ட கட்டுரை இது)

இந்தக் கட்டுரையை வாசிக்கத் தொடங்கும்போதே 'நாம் பெண்கள்' என்று ஓர் அறிமுக உரையோடுதான் தொடங்கவேண்டியிருக்கிறது. இத்தகையதொரு நிலைமை ஆண்களுக்கு ஏற்படுவதில்லை. அதாவது 'நாம் ஆண்கள்' என்று அவர்கள் தொடங்குவதில்லை -அதற்கான அவசியம் ஏற்படுவதுகூட இல்லை. அந்தளவுக்கு சமூகத்தின் பொதுக் கருத்தாக அவர்கள் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன அல்லது ஏற்கச் செய்யப்பட்டிருக்கின்றன.

''மனிதன் தன் பகுத்தறிவால் மிருகங்களை வென்றான்''

''மனிதன் சந்திரனில் காலடி வைத்தான்''

— இப்படியே பொதுமையான கூற்றிலெல்லாம் 'மனிதன்' என்ற ஆண்நிலைச் சொல்லே மனித சமூகம் முழுமைக்குமான பொதுச் சொல்லாக நிறுவப்பட்டுவிடுகிறது. இது ஒரு உதாரணம் மட்டுமே.

இப்படியே பொதுக் கருத்தியல்களை (பழமொழிகள் உட்பட) நாம் ஊன்றிக் கவனித்தால் இந்த உண்மை நன்கு புலப்படும். மிக முக்கியமாக சமூகக் கட்டுப்பாடுகள், ஒழுங்குகள் என்பனவெல்லாம் இவ்வகைப்பட்டதே. அதாவது ஆண்களால் ஆண்களுக்காகப் புனையப்பட்டவையே என்று இலகுபடுத்திச் சொல்லலாம். இவையே சமூகத்தின் பொதுக் கருத்துக்களாக நிலவுகின்றன. இவை மரபு ரீதியாக அதாவது காலங்காலமாக நிலைநிறுத்தப்பட்டு மனித ஜீவியாகப் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் பிறந்தநாளிலிருந்து ஊட்டப்படுகிறது. ஆண், பெண் உயிரியல் வேறுபாடுகள்மீது ஆண்மை, பெண்மை என்ற பண்புகள் வார்க்கப்படுகின்றன. மனிதஜீவி இரண்டு படிநிலைகளில் நிலைப்படுத்தப் படுகிறார்கள். ஆண் 'அதிகாரம் செலுத்துதல்' என்ற படிநிலையிலும் பெண் 'பணிந்துபோதல்' என்ற படிநிலையிலும் பாத்திரம் ஏற்கிறார்கள். இது மனித நடத்தைகளை தீர்மானிக்கிறது.

## கருத்தியல்கள், மீறல்கள்

இந்த இடத்தில் நாம் நின்று நிதானிக்க வேண்டியிருக்கிறது.

உண்மையில் பல சமயங்களில் என்ன சிந்திக்கிறோமோ அதைச் செய்வதற்குப் பதிலாக, என்ன செய்கிறோமோ அதற்கேற்பவே சிந்திக்கிறோம். கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் மனைவி 'பணிந்துபோதல்' என்ற வழிநின்றே சிந்திக்கிறாள். எழும் சச்சரவுகள்கூட இதன்வழியே எழுவதும், தீர்வு வழங்கப்படுவதுமாக இருக்கிறதே ஒழிய, இந்தப் 'பணிதலை' கேள்விகேட்பதில்லை. ஒரு தாய்கூட தனது மகளை அசல் 'பெண்ணாக' வார்த்தெடுக்க பிரயத்தனப்படுகிறாள் என்பதை நாம் இந்த அடிப்படையில் புரிந்துகொள்ள முடியும்.

எனவே நாம் இப்போ சுதந்திரமான சிந்தனையுள்ள பெண்களாக எம்மை உருவகித்து இங்கே உட்கார்ந்திருப்போம். கணவனாலோ, தந்தை அல்லது சகோதரனாலோ நிர்வகிக்கப்படும் ஒரு பெண்ணாக இருக்கும் நிலையில் நாம் யாராவது இருந்தால், அதை சற்று நேரம் மறந்துவிட்டு உட்கார்ந்திருப்போம். இதுவே நாம் 'பணிதலை' கேள்வி கேட்பதை இலகுவாக்கும்.



-தஞ்சி-
(சுவிஸ்)



படிப்பகம்

www.padippakam.com

முதலில் 'மனித நடத்தை' பற்றி நாம் பேசிக் கொள்வது அவசியமாகிறது. மனித இனத்தின் நடத்தை வெளித்தோற்றத்தில் இறுக்கமானது போல் தோன்றினாலும், உண்மையில் அது அப்படியில்லை. அது மாறக்கூடியது. வேறுபட்ட சூழலுக்கு ஏற்ப வேறுவேறான தன்மையைப் பெறுகின்றன. கண்டிப்பு, அதிகாரம் செலுத்துதல் என்பனவெல்லாம் வெளிப்படையில் காணும் தோற்றம் போலன்றி, 'போலி ஆற்றலாகவே' இருக்கிறது. உண்மையில் தனது இருப்பின்மீது ஏற்படும் அச்சமே மற்றவரைக் கண்டிப்பதிலும் மற்றவர்மீது அதிகாரம் செலுத்தவும் காரண மாகின்றன. எனவேதான் -இதன் வெளித்தோற்றம் ஒரு ஆற்றல்போலத் தோன்றினாலும்- அதன் உள்ளடக்கம் போலியானது.

இதனடிப்படையில் சமூகக் கட்டுப்பாடுகள், ஒழுங்குகள் என்பனவும்கூட வெளியில் இறுக்க மானது போலவும் உள்ளுடனில் பலமற்றதாகவும் இருக்கின்றன. ஆண்கள் தங்களது இருப்பின் மீதான அச்ச உணர்விலேயே இவ்வாறான சமூகக் கட்டுப் பாடுகள், ஒழுங்குகளை உருவாக்கி பெண்கள்மீது மிக அதிகமாகத் திணிக்கின்றனர். எனவே ஆண்மை என்பது அடிப்படையில் பலவீனமானது என்றாகிறது. நிலவும் தந்தைவழிச் சமூக அமைப்பே இவர்கள் அதிகாரம் செலுத்தும் களமாகிறது.

எனவே நிலவும் சமூகக் கட்டுப்பாடுகள், ஒழுங்கு கள் உள்ளிட்ட சமூக நடத்தை மாற்றப்படக்கூடியதே என்பதைப் புரிந்துகொள்ளலாம். அதாவது 'இயற்கையானது' என தோன்றும் இவை புனையப்பட்ட ஒன்றுதான்; மாற்றப்படக்கூடியது. இந்த விசயத்தைப் புரிந்துகொண்டு இனி சமூகத்துள் இவற்றின் உள்ளியக்கம் எப்படி யிருக்கிறதென்ற விசயத்துக்கு வருவோம்.

சமூகம் ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டிருக்கும் (சமூகக் கட்டுப்பாடுகள், ஒழுங்குகள் உள்ளிட்ட) சமூக நடத்தையின் அடிப்படையில் சமூகம் இயக்க முடையதாக இருக்க நியாயமில்லை. அப்படி அப்படியே இவைகளை ஏற்றுக்கொள்ளும் மக்களைக் கொண்ட சமூகம் அவற்றின் அடிப்படையில் இறுகிப்போய்விடுவதே நிகழ முடியும். ஆனால் அப்படி நடப்பதில்லை. அது எப்போதுமே இயக்கமுடையதாக இருக்கிறது. புதிய சூழ்நிலைகளை உருவாக்குவது, தான் உருவாக்கிய புதிய சூழ்நிலைக்கு ஏற்ப மாறிக் கொண்டு வாழ்வது... என்று அது இயக்கமுடைய தாகிறது. இதுவே மனித இனத்தின் குணமாக உள்ளது. இப்படி மாறிக்கொண்டு வாழ்வதென்பது நிலவும் (சமூகக் கட்டுப்பாடுகள், ஒழுங்குகள் உள்ளிட்ட) சமூக நடத்தையை மீறுதல் என்பதை முன்நிபந்தனையாக்குகிறது. மனித இனத்தின் வரலாறு பூராவும் இது நிகழ்கிறது. இந்த 'மீறலை' மனித இனத்தின் பொதுக் குணமாக வரை யறுக்கலாம்.

இந்த மீறல் இயக்கமுடையது. நிலவும் ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் மீறப்படுவதும்... புதிய ஒழுங்குகள், கட்டுப்பாடுகள் உருவாக்கப் படுவதும்... பின்னர் மீறப்படுவதும்... புதியன உருவாகுவதும்... என ஒரு தொடர்ச்சி பேணப் படுவதே வரலாறாக உள்ளது. ஆரம்பத்தில் பெண்கள் வேலைக்குப் போகக்கூடாது; மாதவிடாய்க் காலங்களில் வீட்டின் ஒதுக்கப் பட்ட பகுதிக்குள் முடங்கிக் கிடக்கவேண்டும்... என்பன போன்ற ஒழுங்குகள்/கட்டுப்பாடுகள் எல்லாம் காலப்போக்கில் மீறப்பட்டு, பின் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எனவே இந்த மீறல் என்பது பாவப்பட்ட செயலல்ல. பெண்கள் இந்தவகை மீறல்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கும் போது பதைபதைக்கும் ஆண்களால் இலகுவாகவே இவற்றை நடைமுறைப்படுத்த முடிகிறது. சேறுகண்ட இடத்தில் காலைவிட்டு தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிவிட்டுப் போகும் ஆண்கள் அதை பெண்களுக்கு அனுமதிப்பதில்லை. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என ஆண்மையை வகுத்தவர்கள் பல சந்தர்ப்பங்களில் பெண்களை ஒரு மனிதஜீவி என்றளவுக்குக்கூட நடத்துவதில்லை.

எனவே பெண்களின் முன்னேற்றத்திற்கும் சுதந்திரத்துக்கும் தடையாக இருக்கும் சமூகக் கட்டுப்பாடுகளை, ஒழுங்குகளை மீறுவது என்பது பெண்களைப் பொறுத்தவரை ஒரு போராட்ட மாகவே இருக்கும்.

இந்த அடிப்படையில்,
ஆண்/பெண் தொடர்பாக புனையப்பட்ட கருத்துக்களையும், நிலவும் கருத்தியல்களையும்,
- புரிந்து கொள்ளல்
- எதிர்கொள்ளல் என்பதும்



படிப்பகம்

www.padippakam.com

- பெண்ணியப் பார்வையில் மறு உருவாக்கம் செய்தல் என்பதும்
மிகப்பெரிய பணிகளாகின்றன.

இந்தப் பணியில் நாம் பங்கேற்பதுகூட ஆண்களால் சகித்துக்கொள்ளப்படாமல் இருக்கும் என்றாகிலும்,

ஆண்களின் இடத்தில் பெண்களை வைப்பதான ஒரு 'மேலாதிக்கப் பிரச்சினையாக' இதை நாம் எளிமைப்படுத்திவிடக்கூடாது. சாராம்சத்தில் அதிகாரப் படிநிலையைத் தகர்ப்பதற்கானதாகவே இருக்க வேண்டும்.

**சமூகம் எப்போதுமே இயக்கமுடையதாக இருக்கிறது. புதிய சூழ்நிலைகளை உருவாக்குவது, தான் உருவாக்கிய புதிய சூழ்நிலைக்கு ஏற்ப மாறிக் கொண்டு வாழ்வது... என்று அது இயக்கமுடைய தாகிறது. இதுவே மனித இனத்தின் குணமாக உள்ளது. இப்படி மாறிக்கொண்டு வாழ்வதென்பது நிலவும் (சமூகக் கட்டுப்பாடுகள், ஒழுங்குகள் உள்ளிட்ட) சமூக நடத்தையை மீறுதல் என்பதை முன்நிபந்தனையாக்குகிறது. மனித இனத்தின் வரலாறு பூராவும் இது நிகழ்கிறது. இந்த 'மீறலை' மனித இனத்தின் பொதுக் குணமாக வரையறுக்கலாம்.**

இவ்வாறான கருத்தியல் தாக்குதல்கள் இலக்கியம், மதம், குடும்பம், பாலியல், கல்வி, பண்பாடு, அரசியல்... என எல்லாத் தளங்களிலும் நிகழ்த்தப்பட வேண்டியே இருக்கிறது. இவற்றின் மீது நிலவும் ஆண்நிலைக் கருத்தியல்கள் அப்படியே இருக்க, பெண் சமத்துவம் பற்றிப் பேசுவது... பெண்களின் இரண்டாந்தர நிலையை உத்தரவாதப்படுத்தியதாகவே முடியும். சாதியத்தின் கருத்தியல்மீது தாக்குதல் தொடுக்காமலே த.வி.கூட்டணியினர் 'சமபந்தி போசனம்' நடத்தியது சாதியத்தை "உத்தரவாதப் படுத்தியதிலேயே போய் முடிந்தது இதற்கொரு உதாரணமாகும்.

## கலை, இலக்கியம் :

இலக்கிய மதிப்பீடுகளை மரபுகளை வடிவமைப்பவர்கள் ஆண்களே. ஆண் எழுத்தாளர்கள் ஆண் வாசகர்களை முன்னிறுத்தியே தமது படைப்புக்களை உருவாக்குகின்றனர். தொலைக்காட்சி விளம்பரங்களில் அதிகளவில் பெண்களே காட்சிப்படுத்தப் படுகின்றனர். அதாவது ஆண் பார்வையாளர்களை மனதில் கொண்டே விளம்பரங்கள்கூட உருவாக்கப்படுகிறது. இவற்றைத் தொடர்ந்து பார்க்கும் (அல்லது வாசிக்கும்) பெண்கள்கூட பழக்கத்திற்குள்ளாகும் உளவியல் கூறுகளின் செயற்பாட்டினால் தாமும் ஆண் பார்வையாளர்கள் போல் இயங்கும் வாய்ப்பு நேர்கிறது. இதை இன்னொரு வடிவில் சொல்வதானால் ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஆண் ரசிகன் (அல்லது வாசகன்) ஆக்கிரமித்து இடம்பிடித்துள்ளான். இதனாலேயே ஆணாதிக்க போக்கைத் தொடர்ந்து கொண்டுசெலுத்த முடிகிறது. பெண் எழுத்தாளராக நின்று இயங்கும்போதுகூட பெண்களை வர்ணனைப் படுத்துவதில் ஒரு ஆண் எழுத்தாளராக நின்று இயங்கும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

## மதம் :

கடவுள் படைப்பில் பெண் தாழ்ந்தவள் என்கிறது மதம்.
மாதவிடாய் என்ற உயிரியல் நிகழ்வை தீட்டு, விலக்கு... என்று கற்பித்தும்,
விதவை, மலடி, வேசி... என்றெல்லாம் பாகுபடுத்தி வரையறைகள் செய்தும்,
சாத்திரங்கள், சம்பிரதாயங்களில் பெண்கள் பொதுவாகவே ஒதுக்கப்படுகிறார்கள்.

"பெண்கள் மனதை அலைபாய விடுபவள்.
எந்நேரமும் வீட்டு வேலையில் மூழ்கியிருப்பதுதான் நல்லது.
குழந்தைப் பருவத்தில் தந்தையாலும் இளமைப் பருவத்தில் கணவனாலும் முதுமைப் பருவத்தில் மகனாலும் பெண்ணைப் பாதுகாக்க வேண்டும்.

கற்றறிந்த சான்றோராயினும் பெண்ணிடத்தில் தனித்து இருக்கக்கூடாது; பெண் இயல்பிலேயே மன உறுதி குறைந்தவள்; நம்பத்தகாதவள்; பலரோடும் பாலுறவு கொள்ள நாடுபவள்." என்பன 'மனுநீதி' இலுள்ள வாசகங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

விஷ்ணு புராணமோ,

''பெண்கள் மன உறுதி அற்றவர்கள், பேராசை பிடித்தவர்கள், சுயநலமிகள், ஒழுக்கக் குறைவானவர்கள்....'' என்கிறது.

மகாபாரதம், மார்க்கண்டேய புராணம் என்பன,

''பெண்களுக்கு பாலியல் ஊக்கம் அதிகம்; இது அழிக்கும் ஆற்றல் உடையது.

பாலியல்தான் உலக அழிவுக்குக் காரணம்.

பெண்கள் இயல்பிலேயே மிகையான பாலியல் உணர்வு கொண்டவர்களாதலால் பல ஆண்களோடு பாலுறவு கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.''

என்று கொச்சைப்படுத்துகிறது.

ஆக இந்து புராண இதிகாச தர்ம சாத்திரங்கள் எல்லாமே திரும்பத் திரும்ப பெண்களை ஒடுக்கும் கருத்தியல்களையே கூறுகின்றன.

## குடும்பம் :

ஆண் தலைவனாகவும் பெண் சேவகம் செய்பவளாகவும் கொண்டு இயங்கும் ஒரு அமைப்பே குடும்பம் என்பதற்கேற்ப கருத்தியல்கள் உருவாக்கப் பட்டுள்ளன. அதற்கேற்ப அன்பு, பாசம், கற்பு— என்பன புனையப்பட்டு உளவியல் ரீதியில் ஏற்கச் செய்யப் பட்டுள்ளன. தாய் பாசம் உள்ளவளாயும் தந்தை கண்டிப்பு உள்ளவராயும் உருவகிக்கப்பட்டு, அவர்கள் அந்தப் படைப்பாகவே மாறி, அவரவர் பாத்திரங்களை ஏற்று நடிக்கின்றனர்.

குடும்பத்துக்கு குத்துவிளக்கேற்றி வைக்கும் 'குடும்பப் பெண்' க்குரிய வரைவிலக்கணங்கள் கற்பிக்கப்படுகின்றன. சமையல், பிள்ளை வளர்ப்பு போன்ற பெரும் பணிகள் சுமத்தப்பட்டு, அதற்கேற்ப கருத்தியல் உருவாக்கப்படுகிறது.

''தாயைப்போல பிள்ளை நூலைப்போல சீலை''

''தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்'' என்பன சாதாரணமாகக் கேட்கும் வாசகங்கள்.

மொத்தத்தில், குடும்பத்துள் நிலவும் ஜனநாயக மற்ற தன்மையிலிருந்தே குடும்ப அலகுக்குள்ளான கருத்தியல்களில் எந்தளவு ஜனநாயகத் தன்மை இருக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

## பாலியல் :

பெண்ணின் உடல் ஒரு பாலியல் பொருள் என்பதாகவும் கணவன் உடலளவிலான சுகங்களை வழங்குவது அவன் கடமையாகவும், பெறுவது தன் உரிமையாகவும் கருதுகிறாள். இதன்மூலம் தனது சுயத்தினை இழந்துவிடுகிறாள். அவளது முழு வாழ்க்கையும் தனது கணவனின் ஆசைக்குரிய பாலியல் பொருளாக தனது உடலை ஆக்கிக் கொள்வதில் 'பதிவிரதை' என்பதை தகுதியாக்குகிறாள். கற்பு பற்றிய கருத்துரு வங்களை புனிதமாக ஏற்றுக் கொள்ளுகிறாள். தனது உடலோடு தொடர்புடைய வீடு, செல்வம், நகைநட்டு முதலான பொருட்களே வெறுமையாக வுள்ள தனது சுயத்தினை மூடிமறைக்கின்ற அடையாளங்களாகின்றன. பாலியல் ரீதியில் (ஆண்கள் போலவே) ஒரு உணர்ச்சியுள்ள ஜீவி என்பதற்குப் பதிலாக பாலியல் சுகத்தைப் பெற்றுக் கொள்ளும் உடலையுடைய ஒரு ஜீவியாக பெண் உருவகப்படுத்தப்பட்ட கருத்தியல்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறே எமது கல்வி, பண்பாட்டு நிலைகளிலும்,

''பெண்கள் கடினமான உழைப்புக்குத் தகுதியற்றவர்கள்

மிகவும் பலவீனமானவர்கள்

உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள்

நரம்புக் கோளாறு உடையவர்கள்

பாதுகாப்புத் தேவை என்ற நிலையில் இருப்பவர்கள்

தர்க்கபூர்வமாகச் சிந்திக்கத் தெரியாத வர்கள்

ஓவியம் வரைய முடியாதவர்கள்

இலக்கியம் படைக்க இயலாதவர்கள்...''

என்பன போன்ற மரபு ரீதியான பார்வைகள் நிலவுகின்றன.

முடிவாக,

மீண்டும் சொல்லிக் கொள்வதானால்....

சமூகத்தின் எல்லாத் தளங்களிலும் நிறுவப்பட்டுள்ள ஆண்,பெண் தொடர்பான கருத்தியல்களைப்

- புரிந்து கொள்ளல்
- எதிர்கொள்ளல் என்பதையும்
- பெண்ணியப் பார்வையில் மறு உருவாக்கம் செய்தல் என்பதையும்

எமது முக்கிய பணிகளாகக் கொள்ளலாம்.

✘

நன்றி : தொகுப்பு - 'இந்துப் பெண்ணியம்', 'பெண்ணெனும் படைப்பு'



படிப்பகம்

www.padippakam.com

நான் அடுத்த ரயிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறன். இன்னும் வரக்காணம், என்ர மேலில ஒட்டியிருக்கிற ரத்தப் பிசுபிசுப்பை மிதிச்சு எடுத்துக் கொண்டு போனால்தான் என்ர படபடப்பு கொஞ்சமாவது அடங்கும். அதை நினைச்சாலே ஈரக்குலை நடுங்கும். 'bபானொ:ப்' இல நிண்ட எல்லாருமே, அலறலோட வந்த கோரத்தைப் பார்த்ததும் வாயடைச்சுப் போய் நிண்டிட்டுதுகள். அவையின்ர வாழ்நாளில இப்பிடியொரு கொடூரத்தை கண்டிருப்பீனமோ என்னவோ 'bபானொ:ப்' சுவர், தண்டவாளத்தடி எல்லாமே ஒரே ரத்த சிதறலும், துண்டுதுண்டா தெறிச்சுக் கிடக்கிற சதைத்துண்டுகளும், அலங்கோலமா முழிதள்ளியபடி எங்கயோ பார்த்துக் கொண்டு கிடக்கிற தலையும் எல்லாரையும் நிலைகுலையச் செய்தது. என்னையும் தான்.

நிண்ட சனத்தில கொஞ்சம் அழறதும், மயங்குறதும் தலைசுற்றி வாயடைச்சுப் போய் நிற்கிறதுமா இப்படியொரு சம்பவமே இந்த 'bபானொ:ப்' இல நடக்கேல்ல. இரும்புப் பிணைச்சலைக் கொண்டு சிலிப்பர் கட்டையோட இணைச்சு மற்ற தண்டவாளத்தோட சேரவிடமா பூட்டி என்ர மேலில ரயில் எவ்வளவு காலமாக ஓடிக்கொண்டிருக்குது. இவ்வளவு காலத்தில இதைப்போலொரு கோரத்தை, அதுவும் சின்னப்புள்ளையையும் கொண்டு அவள் ரயிலுக்கு முன்னால பாய்ஞ்சதை எண்ணண்டு சொல்லுறது. என்ர மேலெல்லாம் தெறிச்சு பிசுபிசுண்டு ஒட்டிக் கொண்டிருக்கிற சூடான ரெத்தம், அதோட கூழாகிடக்கிற கறுப்பு தலைமுடியும் என்ர நெஞ்சை உறைய வைக்குது. ஏன் வந்து விழுந்தாள் எனக்கு மேல. என்ர வாழ்நாள் முழுதும் என்னை உறுத்திக் கொண்டிருக்கப் போகிறதே. அவள் தன்முடிவை தேடுவதற்கு நான் கிடக்கும் இடமா கிடைச்சுது.

அவள் விழுந்த ரயில் கொஞ்சம் மெதுவா இந்த 'bபானொ:ப்'ஐ கடந்திருக்கக் கூடாதா. அவர்களை முற்றா இப்படி இழந்திருக்க தேவையில்லாமல் போயிருக்கும். காயந்தோடயாவது தப்பியிருப்பினம். சிலவேளை பிள்ளையாவது தப்பியிருக்கும். அந்த சின்னக் குழந்தை என்ன குற்றம் செய்தது. அதுக்கேன் இவ்வளவு பெரிய தண்டனை. என்ர மேல் விளிம்பெல்லாம் ரத்தம் காய்ஞ்சு பிசுபிசுத்து ஒட்டிக் கொண்டிருக்குது. நான் அடுத்த ரயிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறன். இன்னும் வரக் காணேல்ல. என்ர மேலில கொட்டி யிருக்கிற ரத்தத்தை எடுத்துக் கொண்டு போக இன்னும் காணேல்ல. இதெல்லாம் நடக்குமெண்டு யார் எதிர் பார்த்தார்கள். பாழாய்ப்போன 'சினோ' (snow) நிக்காம கொட்டிக் கொண்டிருக்கு. அதுகூட என்னைக் கழுவிவிட முயற்சி செய்யேல்லை. ஒடுக்கமான தேய்ஞ்ச வழவழப்பான என்ர இரும்பு உடம்பின்ர தன்மையால எனக்கு மேல விழுகிற கொஞ்ச 'சினோ' கூட சிலிப்பர்க் கட்டையிலயும், கல்லிலயும் நழுவது. கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கிற 'சினோ' வையும் பக்கத்துத் தண்டவாளத்தால போற 'இன்ரசிற்றி' எடுத்து கொண்டு போகுது.



# 'ஒத்தைத் தண்டவாளமும்' ஒரு கறுப்பு நீள முடியும்

www.padippakam.com

'ந்பானோஃப் ஸ்றாசா'இல சினோவை வழிச்சு ஒதுக்குற 'வாகன்' 'சினோ'வை கரையில ஒதுக்கி மலை மாதிரி குவிச்சுக் கொண்டு போகுது. அய்ஞ்சு வருசத்துக்குப் பிறகு 'சினோ' வித்தியாசமா கொட்டிக் கொண்ருக்கு. வயலுகள், வீட்டுக் கூரை, றோட்டுகள், தண்டவாளங்கள் எல்லா இடமுமே 'சினோ'. ஒரே வெள்ளை மயம், குழந்தையள் 'சினோ'ப் பொம்மை செய்து விளையாடிக் கொண்டிருக்குதுகள். நடக்க ஏலாம கிடந்த வயது போனதுகள் கூட 'சினோ' கொட்டுறதைக் கண்டதும் தான் புது நாணமாக றோட்டில கைக்'கிளவுஸ்'உம் 'மஃப்ளர்'உம் மாட்டிக் கொண்டு வீரநடை போட்டுக் கொண்டிருக்கினம்.

இந்தமுறை 'அவுஸ்லாண்டரை' திட்ட மாட்டான் சுவிஸ்காரன். ஏனென்டா ஒவ்வொரு வருசமும் 'சினோ' குறைய கொட்டுறதுக்கும், இல்லாமல் போறதுக்கும் 'அவுஸ்லாண்டர்' வாறது காரணமென்டு சொல்லி தன்ர 'ஃபக்ரறி'

➤➤➤

*அவளை சிதைத்தவர்கள் யார்?*
*நோகடிச்சு*
*இந்த மூடிவெடுக்கப் பண்ணி வதைத்தது*
*எந்த மிருகம்?*
*உன் உணர்வுகளைக் கொத்தி சிதைத்து*
*குழியில போட்டதும் கணவனா? குடும்ப*
*உறவுகளா? சமூகமா?*
*ஏன்?*
*அவளை விரும்பிய பாதையில*
*போகவிடாமல் தடுத்தது அவளது*
*கலாச்சாரமா? அல்லது பெண்களையே*
*நாயிலும் கீழாக*
*இரண்டாம் தர பிரஜையாக உணர்வுகள்*
*அற்றவளாக புருஷனிலும் புள்ளையிலும்*
*தங்கி வாழப்பண்ணி*
*சேவகம் செய்யப்பண்ணும் மதமா?*
*ஏன் விழுந்தாள் கீழே?*
*யார் மிதித்து சிதைத்தது?*

➤➤➤

—அருதி (22.3.96)—

புகையையும், வாகனங்களின்ர நெருக்கத்தையும், காடழிப்பையும் மறக்கிறவனை என்னண்டு சொல்றது.

வழமைபோல இந்த 'bபானோஃப்' 'லோக்கல் ரெயின்' மாதிரியே இயங்கிக் கொண்டிருந்தது. ரயிலில ஏறி போவதும் வருவதுமாக வழமையாக நான் காணுகிற சனங்கள். மாதாகோயிலை ஞாபகப்படுத்துற மாதிரி ஒவ்வொரு ரயில் வர்ற நேரமும் டாங்டாங் என்ற மணிச்சத்தம். முதல்ல இந்த 'bபானோஃப்'ஐப் பற்றி கொஞ்சம் சொல்ல வேணும். அதுகும் இந்த விஞ்ஞான கொம்பியூட்டர் காலத்திலயும் எத்தனை புது வடிவில பழைய 'bபானோஃப்'களை இடிச்சு கொம்பியூட்டர் மயமாக்கின பிறகும் இந்த 'bபானோஃப்' பழைய உருவத்தோடயே பிடிச்சு வைச்ச மாதிரி கொஞ்சமும் மாற்றமும் அசைவுமில்லாம நிற்குது. இத இடிச்சு புது வடிவில கட்ட இஞ்சை உள்ள மக்களிடம் வாக்கெடுப்புக்கு விட்டாலும் 'யா'வுக்கு இடமில்லை. இடிச்சவிட மாட்டமெண்டினம் பழமை பேணுற மக்கள். அதால நானும் திருத்தலும் மாத்தமும் இல்லாம இந்த இரும்பு பிணைச்சல்கள் இறுக்க, ரெயிலுகளுக்கடியில மிதிபட்டு உலகம் முழுவதும் நீண்டு போய்க் கிடக்கிறன்.

என்ர மேலில சில்லல அமுத்தி ஓடிக் கொண்டிருக்கிற 'இன்ரசிற்றி' என்னை திரும்ப திரும்ப ரெயிலின் முன் விழுந்த அவளையும் குழந்தையையும் ஞாபகப்படுத்துது. ரெயிலால் சிதைபட்டு அவளும் குழந்தையும் கிடந்த கோலம் என்னால மறக்கமுடியாமல் உறுத்திக் கொண்டே இருக்குது. ஏன் விழுந்தாள் ரெயிலில்? அவளை இப்படி ரெயிலில் விழப்பண்ணியது எது? குடும்ப உறவுகளா? அல்லது கணவனா? இப்படி அவள் மனதை சிதையப்பண்ணியது யார்? குழந்தையுடன் விழுமளவுக்கு அவளின்ர மனசில என்ன சோர்வு?

வழமையா ரெயிலில போறதுக்கு வாற சனம் மாதிரியே அவளும் குழந்தையும் வந்தார்கள். அவளின் நீண்ட கறுப்பு தலைமுடியும் கறுப்பு உருண்ட கண்களும் அவர்கள் நாட்டு பெண்களின் 'ஸ்பெசாலிட்டி'. அது என்னை திரும்பிப் பார்க்க வைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

வந்தவள் என்னை குனிஞ்சு பார்க்கிறதும் ரயிலைப் பார்க்கிறதுமாக நின்றாள். பிறகு திரும்பி நடக்கிறதும் நிற்கிறதும் போறதும் வாறதுமாக இருந்தாள். கையில குழந்தையை பிடித்தபடி சோர்ந்த கண்களும், வாடிய முகமுமாக சோர்ந்தபடி நிண்டாள். இதுக்கிடயில ஏழெட்டு 'ரெகிஓனல் சுக்' வந்து போய்விட்டுது. எனக்கே அவளை அப்போது விளங்கவில்லை. எத்தினை மணிநேரமா 'bபானொ:ப்'இல நிண்டு கொண்டிருக்கிறாள். கொஞ்சம் குழம்பிப் போய் நிக்கிற மாதிரி எனக்குப் பட்டது. அது என் நினைவோ தெரியாது. புருஷனோட சண்டை பிடிச்சுப் போட்டு வந்திருக்கிறாளோ. எங்கை போவதென்று தெரியாமல் குழம்புறாளோ. சீ இருக்காது. ஆராவது விருந்தாளியை எதிர்பார்த்துக் கூட்டிக் கொண்டு போக நிற்கிறாளாக்கும். அதுக்கும் இவ்வளவு நேரமாவா. அவளிரின்ர நாட்டுப் பெடியனொருவன் விடிய வேலைக்குப் போறபோது அவளைக் கண்டு சிரிச்சுப் போட்டுப் போனவன். இப்ப நிண்டு அவளோட கதைச்சுப் போட்டுப் போனான்.

ஏன் இவ்வளவு நேரம் 'bபானொ:ப்'இல நிக்கிறாள் எண்டு யோசித்துக் கொண்டிருக் கேக்க 'இன்ரசிற்றி'யின்ர அதிர்வு என்ர மண்டையைக் குழப்பியது. ஆனா அவள் முடிவு எடுத்திட்டாள். கனவு கினவு கண்டேனோ தெரியாது. என்ன சுத்தி பாத்தன் இது கனவில்லையெண்டு, என்ர மேலில தெறிச்சிருக் கிற சூடான ரத்தமும் அவளின்ர 'மப்ளரோட' உறைஞ்சு கிடக்கிற சதைத் துண்டுகளும் பிள்ளையிட தொப்பியும் சாட்சி சொன்னது.

இதென்ன கோரமுடிவு? அதுவும் பிள்ளை யையும் சேர்த்துக் கொண்டு தானும் உயிரை விட்டு என்ன அவலமான சாவு? ஏன்? அவளை சிதைத்தவர்கள் யார்? நோகடிச்சு இந்த முடிவுவெடுக்கப் பண்ணி வதைத்தது எந்த மிருகம்? உன் உணர்வுகளைக் கொத்தி சிதைத்து குழியில போட்டதும் கணவனா? குடும்ப உறவுகளா? சமூகமா? ஏன்? அவளை விரும்பிய பாதையில போகவிடாமல் தடுத்தது அவளது கலாச்சாரமா? அல்லது பெண்களையே நாயிலும் கீழாக இரண்டாம் தர பிரஜையாக உணர்வுகள் அற்றவளாக புருஷனிலும் புள்ளையிலும் தங்கி வாழப்பண்ணி சேவகம் செய்யப்பண்ணும் மதமா? ஏன் விழுந்தாள் கீழே? யார் மிதித்து சிதைத்தது.

அந்தக் குழந்தைதான் என்ன செய்தது. தான் பட்ட கஸ்டமும் கவலையும் இந்தப் பூமியில் தன்ர குழந்தையும் படக் கூடாது என்று நினைத்தாளா? இந்த நாட்டுக்கு வந்து வேலை, வீடு, வீட்டுவேலை என்று உதவியும் ஒத்துழைப்பும் கைகோர்த்தவனிடம் இல்லை யெண்டு துவண்டியா? அல்லது கடன் சுமையா? ஏன் விழுந்தாள் துவண்டு இந்த மண்ணில்? அவளுக்கு இந்தக் குடும்ப வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ விருப்பமில்லாட்டா, இங்குதான் பிரிஞ்சு வாழும் பெண்கள் தனிச்சு வாழ உதவிகளும் வழியும் இருக்கிறதே? உறவை உதறி பற்றுவதற்கு இடமில்லாமல் விழுந்தாயா என்மேல்? ஏன் கோழையாய் விழுந்தாய் கீழே? என்னட்ட இருக்கிற ஒரு சிறு கேள்வி - பழமையாயும் மந்தமாயும் பழைய உருவத்துடனும் மாத்தமுமில்லாம நிற்கும் இந்த 'bபானொ:ப்'ஐ இடிச்சு புதுக் கட்டிடமாய்க் கட்ட இந்த மக்கள் வாக்குப்போட மாட்டார்களா?

யாரோ அவள் விழுந்த தண்டவாளத்துக்குப் பக்கத்தில மெழுகுதிரியும் கொழுத்தி பூவும் வைத்திருந்தார்கள். எனக்குமேல ஒட்டிக் கிடக்கும் மயிர்த் துணுக்கையும் காய்ந்து கிடக்கும் ரத்தத்தையும் சில்லுகளால் மிதித்து நசுக்கி எடுக்க காத்தையும் உந்தித் தள்ளிக்கொண்டு வரும் 'இன்ரசிற்றி'யின் அதிர்வால் மெழுகுதிரி அசைந்தாடி பூக்கள் சிதறின.

குறிப்பு :

இங்கு, பேச்சுவழக்கில் நாம் பாவிக்கும் டொச்மொழிச் சொற்கள் சில பாவிக்கப் பட்டிருக்கின்றன.

அவை,

'bபானொ:ப்' (Bahnhof) - புகையிரத நிலையம்

இன்ரசிற்றி (Intercity) - கடுகதி புகையிரதம்

'bபானொ:ப்' ஸ்ராசா (Bahnhof Strasse) - புகையிரத நிலைய வீதி

வாகன் (Wagen) - வாகனம்

அவுஸ்லாண்டர் (Auslnder) - வெளிநாட்டுக்காரர்

யா (Ja) - ஆம்

ரெகிஓனல் சுக் (Regional Zug) - உள்ளூர்ப் (வேகம் குறைந்த) புகையிரதம்

www.padippakam.com

யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்
யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்
யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்

# யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்

யுத்தகால
இரவொன்றின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்.

ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதிதோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர் நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற்சுவர்களும்
காரணமாய்
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்

நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித்த துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக் குழந்தைகளினதும் அர்த்தத்தை
இல்லாதொழித்தது

எஞ்சிய சிறிய பருவியோ
ஊமங் கொட்டையில் தேர் செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்து போயினர்

அதன் பின்னர்
படலையை நேரத்துடன் சாத்திக் கொள்ளவும்
நாயின் வித்தியாசமான குரைப்பை இனம் காணவும்

கேள்வி கேட்காதிருக்கவும்
கேட்ட கேள்விக்கு விடை இல்லாத போது
மௌனமாயிருக்கவும்.
யந்திரங்கள் போல எல்லாவற்றையும்
பழகிக் கொண்டனர்
தும்பியின் இறக்கையை பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கி யாக்கி
எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது.

யுத்த கால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
'வளர்ந்தவர்கள்' ஆயினர்.

✗

சிவரமணி

நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித்த துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக் குழந்தைகளினதும் அர்த்தத்தை
இல்லாதொழித்தது

நன்றி : சிவரமணி கவிதைகள் (வெளியீடு : விழிப்பு பெண்கள் அமைப்பு, கனடா)



படிப்பகம்

www.padippakam.com

நாளாந்த வாழ்வை இயக்கம்பெறச் செய்வதற்கான ஒரு ஊடகமாக மொழியின் பயன்பாடுள்ளது. எமது உணர்வுகளை, விருப்புகளை, கோபங்களை நாம் பெரும்பாலும் மொழியினாலேயே வெளிப்படுத்துகின்றோம். ஒரு மொழியின் வளர்ச்சி எப்போதும் அச் சமூகத்தின் வளர்ச்சியைத் தங்கியே காணப்படும்.

மனிதவினத்தின் பரிணாம வளர்ச்சியைத் தொடர்ந்து, மொழியின் பிரயோகமும் வளர்ச்சியடைந்தது. ஒரு மொழியில் பாவனையிலுள்ள சொற்கள், பதங்கள், பழமொழிகள் அச் சமூகத்தில் ஆளும் நிலையிலுள்ளவர்களின் கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே அமைகின்றன. நாம் வாழும் இவ் ஆணாதிக்கச் சமூகத்தின் சுவடுகள் எமது மொழியிலும் பதிந்திருக்கின்றன.

தமிழ் மொழியை எடுத்துக் கொள்வோமானால், நாளாந்த வழக்கிலுள்ள பழமொழிகள், சொற்றொடர்கள் யாவும் பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டு, தொடர்ந்து காலாகாலமாக கடத்தப்பட்டே வருகின்றன. இவற்றை இயற்றியவர்கள் பெரும்பாலும் ஆண்களே. பெண் புலவர்கள், கவிஞைகள் பிற்காலத்தில் தோன்றினாலும் பழைய சொற்றொடர்களையே எவ்வித மாற்றமுமின்றி அவர்கள் தொடர்ந்தும் பிரயோகித்தனர்.

# பெண்களை இழிவுபடுத்தும் சொற்பதங்கள், பழமொழிகள்

எம்மையறியாமல் நாளாந்தம் நாம் பல பழமொழிகள், சொற்றொடர்களை உபயோகிக்கின்றோம். அவற்றின் கருத்துக்கள், நோக்கங்கள், அவை ஏன் உருவாக்கப்பட்டவை என்பவற்றை நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. நாம் அவ்வாறு பிரயோகிக்கும் பல பழமொழிகளை, சொற்பதங்களைக் கூர்ந்து கவனித்தோமானால், அதில் எத்தனை பெண்களை இழிவுபடுத்தும் முகமாக அமைந்திருக்கின்றன. இவை எவ்வித ஆட்சேபனையுமின்றி பல நூற்றாண்டுகளாக வழக்கிலுள்ளன.

எமது சமூகம் பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென வரையறைகளை வகுத்துள்ளதென்பதை நாம் அன்றாடம் உபயோகிக்கும் சொற்பதங்கள் காட்டி நிற்கின்றன.

● உமா

பெண் என்றால் அடக்கமாக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அடங்காபிடாரி, அடக்கமில்லாதவள், ஆட்டக்காரி எனும் வசைமொழிகளை அவள் சந்திக்க நேரிடுகிறாள். சமூகத்தில் பலருடன் - குறிப்பாக ஆண்களோடு- சகஜமாகப் பழகினால் நடத்தை கெட்டவள், வேசி, தேவடியாள் என அழைக்கப்படுகிறாள்.

இச் சொற்பதங்கள் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, சாதாரணமாக நாளாந்த வாழ்வில் பாவனையிலுள்ளன. இவை தம்மை இழிவுபடுத்தும் சொற்கள் என்பது புரிந்தும் பெண்களும் இவற்றை தொடர்ந்தும் பயன்படுத்துகின்றனர்.

பெண் என்பவள் இளம் வயதிலேயே மணம்முடித்து தாய்மையடைய வேண்டுமென்பதே சமூகத்தின் எதிர்பார்ப்பு. திருமணமாகாத பெண்களை "அது வீட்டில முத்துது" என சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் இல்லாத பட்சத்தில் பெண்களே நிந்தனைக்குள்ளாகிறார்கள். இக் காரணத்தினால் அவள் அடிவாங்கும் சந்தர்ப்பங்களும், உறவினர்களின் வசைமொழிகளுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்களும் ஏராளம். எல்லாவற்றிற்கும் மேலாக 'மலடி' என பட்டம் சூட்டப்பட்டு சமூக ரீதியானதும் மதரீதியானதுமான வைபவங்களின் போது அவளின் பங்களிப்பு நிராகரிக்கப்படுகின்றது. சிறுவயதிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

இச் சமூகத்தில் ஊறி வளர்ந்த பெண்களுக்கு இச் செயல்கள் வேதனையைத் தருகின்றன.

எமது புராணங்கள், தொன்மை இலக்கியங்கள் யாவும் 'கற்பை' வலியுறுத்தி வருகின்றன. கணவன் என்ற பட்டத்துடன் வரும் ஆணைத் தவிர ஏனைய ஆண்களுடன் அவள் உடலுறவு கொண்டிருந்தால், அவள் 'கற்பில்லாதவள்' என அழைக்கப்பட்டு புறக்கணிக்கப்படுகிறாள். ஆனால் திருமணத்திற்கு முன்னர் பல பெண்களுடன் உறவு வைத்திருந்த ஆணுக்கு 'கற்பில்லாதவன்' என்ற பெயர் சூட்டப்படுவதில்லை. எப்போதும் பெண்களே அவ் அவப்பெயர்களைத் தாங்க வேண்டியுள்ளது.

ஒரு பெண் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்படும் போது 'கற்பழிப்பு' என்ற பெயர் கொடுக்கப்படுகின்றது. அதன்பிறகு அவளது 'கற்பு' அழிக்கப்பட்டுவிட்டதென்றே நம்புகின்றனர். இச் சொல் தமிழ் அகராதியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று நாம் தொடர்ந்தும் வலியுறுத்துவதோடு, இச் சொற்களை உபயோகிப்பதை தவிர்க்கவும் வேண்டும்.

அதேசமயம் எமது சமூகத்தில் ஆண்களை அவமானப்படுத்துவதற்காக பெண்களைக் குறிக்கும் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். ஒரு ஆணை 'பெட்டை' என அழைப்பதன் மூலம் அவனது தரத்தைக் குறைக்கலாம், இழிவுபடுத்தலாம் என நம்புகின்றனர்.

அவன் 'ஆண்மையற்றவன்', நோஞ்சல் சுபாவமுள்ளவன் என்பதைக் குறிக்க 'பெட்டை' என்ற சொல்லை உபயோகிக்கின்றனர். உதாரணத்திற்காக கவிஞர் சோலைக்கிளியின் 'பெட்டையாம் பாடல்கள்' என்ற கவிதையிலிருந்து சில வரிகள்:

*வேண்டுமென்றால்*
*பெட்டையாய் பாடல்களைப் பிரசவிப்பேன்*
*போடிங்கே இல்லாது*
*குதியையும் கூந்தலையும் நீயே வைத்துக் கொள்*
*என் ஆத்மா அழாது.*
...
....
*சத்தியமாய்*
*ஓர் ஆண்பாடல் செய்து*
*அதற்கு. இறகும் கொம்பும் வைத்தல்*
*இப்போது.*
*எந்தக் கவிஞனுக்கும்*
*இயலாது.*
....
....
*இதற்குள்ளே. நான்*
*ஆரோக்கியமான*
*ஆண்பாடல் செய்வது எப்படி?*
*உணர்ச்சி நரம்புகளில் திராட்சை பழுத்தாலும்*
*நீங் கலாம்*
*நான் ஊதாப்பு மலர்ந்து வேரும் மணத்தாலும்*
*தெண்டிக்கலாம்*
*ஆணாய் பாடல்கள் பிறக்கும். தற்செயலாய்*
*இதைப்பாடு!*

இதிலிருந்து எமது சமூகத்தின் பெண்கள் பற்றிய கணிப்பீடு தெளிவாகின்றது.

இனி,
பழமை வாய்ந்ததும், மொழியின் உயிர்நாடியெனவும் கருதப்படும் பழமொழிகள் சிலவற்றைப் பார்ப்போம்.

ஒரு பெண் எவ்வாறு இருத்தல் வேண்டுமென 'தமிழ்ப் பெரும் சமூகம்' எதிர்பார்க்கின்றதோ அக் கருத்துக்களை அப்படியே எமது பழமொழிகள் கூறி நிற்கின்றன.

பெண்ணின் அணிகலன்களாக நோக்கப்படும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றில் நாணத்தை வலியுறுத்தும் சில பழமொழிகள்:

*'நாணம் இல்லாத சிறுக்கிக்கு நாலுதிக்கும் வாசற்படி'*
*'நாணம் இல்லாத பெண் நகைப்புக்கு இடம் வைப்பாள்'*
*'நாணமில்லாக் கூத்தியாளுக்கு நாலுதிக்கும் வாசல்'*
*'பெண்டிற்கு அழகு நாணம்'*

இதுபோலவே அடக்கமும் பெண்கள் மேல் திணிக்கப்படுகின்றது. பெண்கள் என்றால் அடக்கமாக இருத்தல் வேண்டும். பெண்கள் அதிகம் கதைத்தல் கூடாது; வெளியில் செல்லக் கூடாது; சிரிக்கக் கூடாது; சொல்வதைக் கேட்க வேண்டும்; திருப்பிக் கதைக்கக் கூடாது. இக்



படிப்பகம்

www.padippakam.com

கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பின், அவள் அடக்கமான பெண்.

ஒரு பெண்குழந்தை சுறுசுறுப்பாக இருந்தால் - உதாரணமாக மரத்தில் ஏறினால், காலைத் தூக்கி மேலே வைத்தால்- ''நீ என்ன ஆம்பிளைப் பிள்ளையோ?''' என அதட்டப் படுகிறாள். அத்தகைய சந்தர்ப்பங்களில் இப் பழமொழிகள் பெரும்பாலும் பிரயோகிக்கப்படுகின்றன.

*'அடக்கத்துக்குப் பெண்ணுக்கு அழகேன்?'*
*'அடக்கமே பெண்ணுக்கு அழகு'*
*'அடக்கமற்ற பெண் அவிந்துபோன கண்'*
*'பொம்பிளை சிரிச்சால் போச்சு புகையிலை விரிச்சால் போச்சு'*
*'நன்மாட்டிற்கு ஓர் அடி நற்பெண்டிருக்கு ஒரு வார்த்தை'*
*'உதறுகாலி வந்தாள் உள்ளதும் கெடுத்தாள்'*
*'அடங்காதபிடாரி யாருக்கு அடங்குவாள்?'*



SANGHARSH

ஒரு பெண் மணமாகுவதற்கு முன்னர் பெற்றோர், சகோதரருக்கும் பின்னர் கணவனுக்கும் அடங்கி வாழவேண்டும். அவன் அடித்தாலும் அவள் தாங்கிக் கொண்டு அவனோடு வாழவேண்டும். அவனை எதிர்க்கப் போனால் அவள் நிந்தனைக்கு உள்ளாக்கப்படுவாள். இத்தகைய சந்தர்ப்பங்களில் 'பிடாரியைப் பெண்டுக்கு வைத்தது போல் . . .' என்ற பழமொழி பாவனையிலுள்ளது. இதை கீழ்வரும் தனிப்பாடல் மேலும் கூறுகின்றது:

அடுத்தமனை தொறுந்திரிவாள் - கணவனுக்கு
முக்குண்பா டக்க மில்லாள்
கருத்த மொழி பேசிடுவாள் சிறுதனத்தோடு
வளிவளைச் சுழந்து வாழ்தல்
எடுத்தவிடைக் கொடியாரோ தண்டலையா
ரேயெவர்கு மின்பமாகக்
குடித்தனமே செயவேண்டிப் பிடாரிதனைப்
பெண்வைத்துக் கொண்டதாமே.

இதே கருத்தை வலியுறுத்தும் இன்னும் சில பழமொழிகள் :
*'இராஜா மகள் ஆனாலும் கொண்டானுக்கு பெண்டு'*
*'உயிரோடு ஒரு முத்தம் தராதவள் செத்தால் உடன்கட்டை ஏறுவாளா?'*

எமது சமூகத்தின் அகராதியில் பெண்கள் எப்போதும் கெட்டவர்கள் ; ஊர்க்கதை அளப்பவர்கள் ; வம்பு பேசுபவர்கள் ; பொறாமையுள்ளவர்கள். இதற்கு உதாரணமாக சில பழமொழிகள்

*'பெண் வாழ பெண் பொறுக்கமாட்டாள்'*
*'பெண்டுகள் இருந்த இடம் சண்டைகள் பெருத்திடும்'*
*'அடுத்து கெடுப்பான் கபடன் -தொடுத்து கெடுப்பாள் மடந்தை'*

நாம் வாழும் இவ் ஆணாதிக்கச் சமூகத்தில் உயர்பதவிகளை பெரும்பாலும் ஆண்களே வகிக்கின்றனர். வீடுகளிலும் ஆணிடமே தலைமைப் பொறுப்புள்ளது. இதை பரம்பரைக்கு -அதாவது பிள்ளைகளுக்கு - அவனது பெயரை குடும்பப் பெயராகப் பாவித்தல், குடும்பத்தின் பொருள்தார ஆளுமை, முடிவெடுக்கும் உரிமை என்பவை தெளிவாக்குகின்றன. பெண்கள் மென்மையானவர்கள் ; புத்தி குறைந்தவர்கள் ; சமையல், குழந்தைபராமரிப்பு என்பவற்றை மட்டும் கவனிப்பவர்கள் ; பெண்கள் தலைமை தாங்கி குடும்பத்தை நடாத்துவதற்கு தகுதியற்றவர்கள் என்பதே பொதுவான கருத்து. இக் கருத்தை வழிமொழியும் பழமொழிகள் :

*'பெண் புத்தி பின்புத்தி'*
*'அடுக்களைக்கு ஒரு பெண்ணும் அம்பலத்திற்கு ஒரு ஆணும் இருக்கின்றதென்பார்'*
*'பெண் அப்பான வீடு பேரழிந்து போம்'*
*'அரசன் இல்லாத நாடு புருசன் இல்லாத வீடு'*



படிப்பகம்

ஆண்கள் எப்போதும் ஆண்மையுள்ளவர்கள் ; வலிமை, வீரமிக்கவர்கள். ஒரு பெண் எப்போதும் ஆணுக்குக் கீழ்படிந்து நடத்தல் வேண்டும். அவன் ஒருபோதும் அவளது பேச்சைக் கேட்கக் கூடாது. இதற்கு உதாரணமாக,

*'பெண்சாதி பேச்சைக் கேட்பவன் பேய் போல அலைவான்'*

*'தன்னை புகழ்வானும் சாட்சி சொல்லி நிற்பானும்*
*பொன் மிகத் தேடி புதைப்பானும் நல்லவர் தம்*
*நன்புத்தி கேட்பானும் நாணமில்லாதானும்*
*பெண்புத்தி கேட்பானும் பேய்'*

*'இளைத்தவன் பெண்டாட்டி எல்லார்க்கும் மைத்துனி'*

சொத்துரிமை சமூகத்தின் தோற்றம் முதல், குடும்பத்தின் வாரிசாக ஆணே இருக்கின்றான். அவன்தான் தொடர்ந்து தந்தையின் பெயரைச் சுமக்கிறான். உற்பத்திக்காரணியின் உரிமை வழியாக தந்தையின் வாரிசாக மகன் இருப்பான் என்ற கருத்துக்கமைய ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண்குழந்தை பிறக்காத பட்சத்தில் அக் குடும்பத்தின் பெயரைத் தொடர்ந்து நிலைநிறுத்த முடியாதென நினைக்கின்றனர்.

*'சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை வேண்டும்'*
*'ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆஸ்திக்கு ஒரு ஆணும்'*

அதேசமயம் பெண் குழந்தை தாயினது தொடர்ச்சியான பராமரிப்பில் இருத்தல் வேண்டும். அவள் பிறந்தநாள் முதல் திருமணம் முடிக்கும் வரை பெண்ணுக்குரிய 'பண்புகள்' என கருதப் படுபவையுடன் வளர்த்து பாதுகாப்பது ஒரு தாயின் தலையாய கடமை என்பதே எமது சமூகம் சொல்லி நிற்கும் பாடம். பிள்ளைகள் இழைக்கும் எந்தத் தவறுக்கும் தாய்மாரே பொறுப்பேற்க வேண்டியேற்படுகின்றது. தாயின் குணாம்சங்களை ஒத்தே மகளும் இருப்பாள் என்பதை பல பழமொழிகள் காட்டி நிற்கின்றன.

*'தாயை சந்தையிலே கண்டால் பிள்ளையை வீட்டிலையா பார்க்க வேண்டும்? '*
*'தாயைப்போல பிள்ளை நூலைப்போல சீலை'*

*'தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளு, பாலைப் பார்த்து பசுவைக் கொள்ளு'*

அடுத்து கருத்து ரீதியாக பெண்களை மாத்திரம் குறிக்காவிட்டாலும் பெண்களை இழிவுபடுத்தும் சொற்களால் அமைந்த சில பழமொழிகளைப் பார்ப்போம்.

*'ஆடத் தெரியாத தேவடியாள் மேடை கோணல் என்றாளாம்'*
*'முகத்துக்கு அஞ்சி வேசை ஆடுதல்'*
*'வாலையிலே ஆடிய தேவடியாள் வயதுசென்றும் காலை காலை ஆட்டுவாளாம்'*

இத்தகைய பெண்களை இழிவுபடுத்தும் பழமொழிகளினதும், சொற்பிரயோகங்களினதும் உபயோகத்திற்கெதிராக நாம் பெண்கள் என்ற ரீதியில் என்ன செய்யலாம்? இத்தனை காலமும் வழக்கில் வந்ததை எப்படி உடனே நிறுத்துவது? என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

தமிழ் இலக்கிய உலகத்தில் எழுத்துச், சொல் திருத்தம் பற்றிய கருத்துக்கள் ஏற்பட்டிருக்கும் இக் காலகட்டத்தில் பெண்களைப் பாதிக்கும் வகையில் அமையும் சொற்பிரயோகங்களை மாற்றியமைப்பது அல்லது மாற்றீடான சொற்களை இயற்றுதல், மற்றும் பழமொழிகளின் பாவனையை நிறுத்துதல் போன்றவற்றில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

முதலில் பெண்களாகிய நாம் இப் பழமொழிகள், சொற்பிரயோகங்கள் போன்றவற்றை உபயோகிப் பதை நிறுத்த வேண்டுமென்பதோடு, இவற்றைக் கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவைக் கெதிரான கண்டனக்குரல் எழுப்பவேண்டும். அப் பழமொழிகள், சொற்பிரயோகங்கள் என்பவை இயற்றப்பட்டதன் சமூகக் காரணிகள், பின்னணிகள், அவற்றின் கருத்து என்பவற்றை இனங்காணமுயற்சித்து, பிறருக்கும் புரியவைத்தல் வேண்டும். எந்தச் சீர்திருத்தமும், மாற்றமும் பாதிக்கப்படுபவர்களாலேயே உருவாக்கப்பட முடியும். ஆகவே இம் மொழி மாற்றத்தில் எமது பங்களிப்பின் அவசியத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்.

✘

www.padippakam.com



# குரல்

உரியவர் : வ.கீதா
வினவுபவர் : றஞ்சி (சுவிஸ்)

**தமிழ் நாட்டில் பெண்ணிய இயக்கங்களின் பலம், பலவீனம் மற்றும் அதன் செயற்பாட்டுத்திறன் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன? தமிழ்நாட்டில் எந்தளவு பெண்ணியம் சம்பந்தமான வேலைப்பாடுகள் அமைந்துள்ளன? இது எவ்வாறு சாதாரண பெண்களை சென்றடைகிறது?**

தமிழ்நாட்டில் தற்சமயம் இயங்கிவரும் பெண்ணிய இயக்கங்களை -ஒரு வசதிக்காக- மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

கட்சி சார்ந்த அமைப்புகள், ஏனைய அரசியல் கட்சிகளின் மகளிர் அணிகள். இவற்றுள் நெடுங்காலமாகக் செயல்பட்டு வரும் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கமும் (இது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு உடையது) அடங்கும்.

தன்னார்வக் குழுக்களின் முயற்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள மாதர் சங்கங்கள், பெண்கள் தலைமை தாங்கி நடத்தும் மகளிர் விடுதலை அமைப்புகள், மகளிரை மட்டுமே உறுப்பினராகக் கொண்டு இயங்கும் தன்னார்வ நிறுவனங்கள் ஆகியன இரண்டாவது வகை இயக்கத்தில் அடங்கும். இவற்றுள் பல அயல்நாட்டிலிருந்து பெறப்படும் உதவித் தொகை கொண்டு இயங்கி வருகின்றன. சில உள்நாட்டு நன்கொடைகள் திரட்டி செயல்பட்டு வருகின்றன.

மூன்றாம் வகை இயக்கத்தில் கட்சிசாரத, சுயாதீனமான வகையில் செயல்பட்டு வரும் பெண்கள் அமைப்புகள், ஒருங்கிணைப்பு முயற்சிகள் அடங்கும். இவற்றில் உறுப்பினர்கள் தாம் சம்பாதிக்கும் பணத்தின் ஒரு பகுதியை அமைப்புப் பணிகளுக்கு ஒதுக்குவர்.

பெண்ணிய இயக்கங்கள் கிராமப்புறங்களிலும், சில நகரங்களிலும், சிறு நகரங்களிலும் செயல்படுகின்றன. குறிப்பிட்ட பகுதிக்குரிய பிரச்சினைகள் -சுற்றுச்சூழல், சாதி, மதப் பிரச்சினைகள், கொத்தடிமை என்பன போன்ற பிரச்சினைகள்- முதல், பெண்கள் பெண்களாக இருப்பதால் எதிர்கொள்ளும் பிரத்தியேகப் பிரச்சினைகள் ஈறாக பெண்ணிய அமைப்புகள் பலவற்றில் தலையிட்டு பெண்விடுதலை, சமத்துவம் என்ற அடிப்படையில் தீர்வுகளை உருவாக்க முயற்சி செய்து வருகின்றன.

கோட்பாட்டளவில் ஒருமித்த கருத்துக்கள் மகளிர் அமைப்புகளுக்கிடையே இல்லை என்றாலும், பெண்கள் சகித்து வாழும் அன்றாட வன்முறைகள், பாலியல் பலாத்காரம், சாதி மதக் கலவரங்கள் உருவாக்கும் வன்முறைச் சூழல், சாதி— வர்க்கம் காரணமாக சில சமூக வகுப்புக்களைச் சேர்ந்த பெண்கள் எதிர்கொள்ளும் தனிச்சிறப்பான பிரச்சினைகள்/சுமைகள் ஆகியன குறித்த சில நிலைப்பாடுகள் ஏறக்குறைய அனைத்து அமைப்புகளுக்கும் பொதுவானவையாக உள்ளன. அதாவது பெண் பெண்ணாக இருப்பதால் சந்திக்கும் வன்முறை, பெண் தலித்தாகவும், முஸ்லிமாகவும் உழைக்கும் வர்க்கப் பெண்ணாகவும் இருப்பதாலும் சந்திக்கும் பொருளாதார, பண்பாட்டு, சமூக ஒடுக்குமுறைகள் ஆகியனவற்றை எதிர்கொண்டு புதிய விழுமியங்கள், புதிய உறவுகள் ஆகியவற்றை விளக்கும் ஒரு பெண்ணிய அரசியலின் தேவையை அனைத்து மகளிர் அமைப்புகளும் உணர்ந்து செயல்பட்டு வருகின்றன.



படிப்பகம்

பெண்கள் சந்திக்கும் அடக்கு/ஒடுக்குமுறைகள் அனைத்துப் பெண்களுக்கும் பொதுவானவைதான் என்றாலும், பெண்களும் கூட சாதி, மத, வர்க்கப் பிரிவுகளைக் கடந்தவர்கள் அல்லர் என்ற கருத்து பெண்கள் அமைப்புகளின் விவாதங்களில் விவாதிக்கப்பட்டு வருகிறது. சாதிப் பிரச்சினை, வர்க்கப் பிரச்சினை ஆகியவற்றுடன் தொடர்புடையது தான் பெண்கள் பிரச்சினையும் என்ற புரிதல் இன்று பல இடங்களில் காணப்படுகிறது. பல்வேறு வகையான, காரசாரமான, ஆனால் ஆக்கபூர்வமான விவாதங்கள் பெண்கள் அமைப்புகளில்/பெண்களுக்கிடையே நடைபெற்று வருவது எமது நாட்டு பெண்ணிய இயக்கத்தின் பலம்.

பலவீனம் : சில பொதுப் பிரச்சினைகளில் -வன்முறை, பஞ்சாயத்து, தேர்தலில் பெண்கள், பெண்களும் குடும்பக் கட்டுப்பாடும் (இதன் அரசியலை விமர்சித்தல்)- பெண்கள் அமைப்புக்கள் அவ்வப்போது இணைந்து செயல்பட்டாலும், தொடர்ந்து ஒரு அணியாக இயங்க முடிவதில்லை. இரண்டாவதாக, பெண்ணியம் பற்றிய கோட்பாட்டு ரீதியான விவாதங்கள் பெண்கள் அமைப்புகளிடையே நடைபெறாமை. குறிப்பிட்ட தலைப்பில்/குறிப்பிட்ட பிரச்சினையை ஒட்டி கருத்து, விவர பரிமாற்றங்கள் நடைபெற்றாலும், there is no serious and susatained dialogue on politics, power, sexuality.

**பெண்ணியம் சம்பந்தமான புதிய கோட்பாட்டுப் புரிதல்கள் அல்லது புதிய போக்குகள் தமிழகச் சூழலில் எந்தளவில் உள்ளன?**



'பழைய' வரலாற்று ரீதியான புரிதல்கள்கூட - எடுத்துக்காட்டாக, பெரியார், சுயமரியாதை இயக்கத்தினர் முன்வைத்த பெண்ணியக் கருத்துக்கள் - நமது கூட்டு நினைவில் தெளிவாக இடம்பெறாத நிலையில் புதிய புரிதல்களைப் பற்றி என்ன சொல்வது? சில தனிப்பட்ட நபர்கள், அமைப்புக்கள் முதலியன பாலியல், குடும்பம், ஆண்-பெண் உறவு, பெண்-பெண் உறவு/தோழமை குறித்து பேசியும் விவாதித்தும் வருகின்றனர். இருந்தாலும் இயக்கங்களின் செயல்பாட்டினை/செயல்பாடுகளை பாதிக்கும் அளவுக்கு இவ் விவாதங்கள் அமையவில்லை. பெண்கள் இயக்கங்களின் அக்கறைகள், செயல்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி அறியமாட்டாமல் சிலர் -குறிப்பாக ஆண் அறிவாளிகள் - 'புதிய' பெண்ணியக் கருத்துக்களை விவாதித்தும் அவற்றைப் பற்றி எழுதியும் வருகின்றனர். ஒரு பெண்ணிய அமைப்பின் உறுப்பினர் என்ற வகையில் இத்தகைய விவாதங்களின் அரசியல் பொருத்தப்பாட்டை என்னால் சரிவர உணரமுடியவில்லை. செயல்பாடும் சொல்லும் பின்னிப்பிணைந்த நிலையில் ஒன்றை மற்றொன்று வடிவமைக்கும் பெண்ணிய அரசியல் சூழலில், "சொல் அதுவே(வும்(?)) சிறந்த செயல்" என்ற கருத்து வினோதமானதாக எனக்குப் படுகிறது.

**உங்களுக்கும், தலித் பெண்ணிய அமைப்புகளுக்கும் இடையில் கூட்டு வேலைமுறைகள் ஏதாவது உண்டா?**

நான் சார்ந்து பணிபுரியும் 'சிநேகிதி பெண்கள் அமைப்பு' குடும்ப வன்முறைக்குப் பலியாகும்/சகித்து வாழும் பெண்களுக்கான ஆதரவு மையமாக இயங்கி வருகிறது. பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களின் -தலித் பெண்களின், வன்னியர் இனப் பெண்களின், ஆசாரி வகுப்பைச் சேர்ந்தவர்களின், பார்ப்பனப் பெண்களின், கிறிஸ்துவ, முஸ்லிம் பெண்களின், குடிசைவாழ் பெண்களின், நடுத்தர வகுப்புப் பெண்களின், 'பூர்சுவா' மேட்டுக்குடிப் பெண்களின்- வாழ்க்கை அவலங்கள், அன்றாட

www.padippakam.com

தொல்லைகள் குறித்து நேரடியாக அறிய வாய்ப்புப் பெற்ற எங்களுக்கு சாதி, மதம், வர்க்கம் ஆகியன எல்லாப் பெண்களையும் ஒடுக்கும் விதத்தைக் காணமுடிகிறது. உயர்சாதிப் பெண்கள், நடுத்தர வர்க்கத்துப் பெண்களுக்கு இது உடனடியாகப் பிடிபடுவதில்லை. தலித் இனப் பெண்களுக்கும், உழைக்கும் பெண்களுக்கும் இது ஒரு சாதாரண உண்மை. பெண்கள் என்ற அடிப்படையில் நாங்கள் ஒரு தோழமையை, கூட்டுறவை உருவாக்கி செயல்பட்டு வருகிறோம்.

சாதியைக் கடந்து வந்துவிட்டோம் என்று நான் கூறவரவில்லை. நான் எதிர்கொள்ளும் ஆணாதிக்கமும் தலித் பெண் ஒருவர் எதிர்கொள்ளும் வன்முறையும் ஒன்றாக இருக்க முடியாது. நான் அப் பெண்ணின் வேதனையை முழுமையாக உணரக்கூடியவளா என்பதுகூட எனக்குத் தெரியாது. எனக்கு வாய்த்துள்ள சலுகைகள், நான் சுவீகரித்துள்ள செல்வாக்கு (படிப்பு, வேலை) இவை என்னைப் பொறுத்தவரை merely accidental தான். எந்தவகையிலும் நான் என்னளவில் அவற்றுக்கு உரியவள் அல்ல. ஆனால் ஒரு பெண் என்ற வகையில், பிற பெண்களையொத்த உடலமைப்பை உடையவள் என்ற வகையில், என்னால் பிற பெண்களுடன் பாசம், நேசம், காதல், தோழமை கொண்டாட முடிகிறது. அவ்வாறு கொண்டாடுவதில் அடங்கியுள்ள ஆனந்தத்தை, நிம்மதியை சொற்களால் விவரிக்க முடியாது. சாதி, வர்க்க வேறுபாடுகள் கொண்ட சமுதாயத்தில் ஒரு சிறிய பெண்ணிய தோழமை உலகை உருவாக்குவதில் - a women's space- நானும் எனது தோழிகளும் முனைந்துள்ளோம்.

**குடும்பம் என்பது ஆணாதிக்கம் செயற்படும் ஒரு நிறுவனம் என்ற வகையில் குடும்ப அமைப்பு முறையை எப்படி எதிர்கொள்வது என்பதைக் கூறமுடியுமா?**

குடும்ப அமைப்பின் அடித்தளம் வன்முறை. ஆண்-பெண் உறவின், குறிப்பாக கணவன்-மனைவி உறவின், பாலியல் உறவின் தன்மை இவ் வன்முறையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆணாதிக்க குடும்ப அமைப்புக்குரிய பாலியல் தத்துவம் வன்முறையை தனது ஒவ்வொரு கோட்பாட்டிலும், செயலிலும், ஏன் மொழியிலும் கூட கொண்டுள்ளது. இத்தகைய வன்முறையை அடித்தளமாகக் கொண்ட சமூக அமைப்பானது பெண்ணை பாலியல் கருவியாகவும், சமூக பொருளாதார மறுஉற்பத்தியை சாத்தியப்படுத்தும், மிக அவசியமான (ஆனால் இழிச்செயலாகக் கருதப்படும்) குடும்ப உழைப்பை மேற்கொள்ளும் குடும்ப உழைப்பாளியாகவும் பாவிக்கிறது. இதை -குடும்பத்தை மாற்றி அமைப்பதும், எதிர்கொள்வதும் -requires nothing none or less than a war between the sexes. The family is the ultimate site of the class struggle and in the final analysis, every man has to fight this war with himself, with his masculinity, his patriarchal conscience- பெண்கள் தமது தோழமையின் அடிப்படையில், புதிய பாலியல் உறவுகளை (திருமணம் என்ற சட்டகத்துக்குள் புக விரும்பாத உறவுக்ளை) உருவாக்கிக் கொள்வதன் மூலம் இருக்கக் கூடிய குடும்ப அமைப்பை ஜனநாயகப்படுத்துவதன் மூலம் ஆணாதிக்கக் குடும்ப அமைப்பை எதிர்கொண்டு வருகின்றனர்.

**சமூகத்தில் பெண்கள் சம்பந்தமான மதிப்பீடுகள் மாற்றத்திற்குட்படாத நிலையில் குடும்பக் கலைப்பை முன்வைப்பது பெண்களை இன்னமும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளிவிடும் என்ற கருத்தில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?**

குடும்பம் பெண்ணை வதைக்கும் களம். ஆனால் வரலாற்றின் வினோத முரண் என்னவென்றால், இக் களம்தான் இன்றைய சூழலில் அவளுக்குள்ள புகலிடம். ஆனால் இப்போதுள்ள குடும்ப அமைப்பை அப்படியே பாதுகாக்க இது ஒரு வாதமாக பயன்படுத்தக் கூடாது. பெண்கள் அமைப்புக்கள் பெண்ணுக்கு ஆதரவும், தஞ்சமும் தரக்கூடிய மாற்றுக் களங்களாக அமையலாம்.



படிப்பகம்

**கருச்சிதைப்பை ஒரு சிசுக்கொலையாக உருவகிப்பது மதரீதியான மரபுவழிப்பட்ட சிந்தனையின் ஒரு தாக்கம் எனக் கொள்வதில் உங்களுக்கு முரண்பாடு உண்டா?**



கிறிஸ்துவ, இஸ்லாமிய மதச் சிந்தனையின் தாக்கம் பதிந்த சமுதாயங்களில் கருச்சிதைவு இவ்வாறு விவரிக்கப்பட்டு ஒரு மாபெரும் விவாதத்துக்கு வழிவகுத்துள்ளது. இந்தியாவைப் பொறுத்த வரையில் இங்கு முற்றிலும் வேறானதொரு politics of reproduction நிலவுகிறது. கருச்சிதைவானது குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரில் ஏழைப் பெண்களின் மீது திணிக்கப்படும் ஒன்றாக, பெண்கருவை அழிக்கும் முறையாக, ஆண்பிள்ளை ஆசையை நிவர்த்தி செய்ய (மறைமுகமாக) உதவும் வழியாகக் காணப்படுகிறது. இங்கு 'choice' politics என்பதற்கு என்ன பொருள் இருக்க முடியும் - முன்றில் ஒரு பெண்ணிற்குக் கூட தனது பாலியல் வாழ்வின் தன்மையை, போக்கை நிர்ணயிக்க இயலாத/முடியாத போது—?

**ஆண்களின் பாலாதிக்கத்திற்கு எதிராக ஓரினச் சேர்க்கையை முன்மொழிவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஓரினச் சேர்க்கை என்று மொழியாக்கம் செய்யப்பட்டு வரும் 'Homo sexuality' என்பது எல்லா நாடுகளிலும், சமுதாயங்களிலும், ஒரேபடித்தானதாக இருப்பதில்லை. இந்தியாவில், இந்தியாவின் பல்வேறு சமூக சூழல்களில் ஆண்களுக்கிடையே நெருங்கிய பிணைப்பும், நட்பும், பாலியல் உறவும் காணப் படுவதும், அவ்வாறு பெண்களுக்கிடையேயும் நெருங்கிய உறவும், தோழமையும் காணப் படுவதும் அதிசயமில்லை. We are a segregated society and our most intense, intimate relationships are usually learnt under one of our own sex.

**ஓரினச் சேர்க்கை என்பது ஆண்களைப் பொறுத்த வரை குதவழியான உடலுறவு முறையை பிரதானமாக உள்ளடக்கிய ஒன்று. எனவே ஓரினச் சேர்க்கை மூலம் ஒருவன் தன்னை ஒரே நேரத்தில் ஆணாகவும், பெண்ணாகவும் உணர முடியும் என்று சொல்லப்படுகிறது. பெண்களைப் பொறுத்தவரை இந்த உணர்வை நிறைவு செய்யமுடியுமா? முடியாது எனின், ஓரினச் சேர்க்கையை ஆண்கள் முன்மொழிவது என்பது கூட ஒரு ஆணாதிக்க வகைப்பட்ட சிந்தனைதான் என்று கொள்வதில் தவறு உண்டா?**

ஓரினச் சேர்க்கை என்பது ஆணை ஆணாகவும் பெண்ணாகவும் ஒரேசமயத்தில் அடையாளங் கொள்ள / உணர முடிகிறது என்ற கருத்து எனக்கு வியப்பூட்டுகிறது. பல ஆண் ஓரினச் சேர்க்கை யாளர்கள் அப்பட்டமான பெண் வெறுப்பாளராகவும் (Misogynists) இருக்கின்றனரே!

ஓரினச் சேர்க்கையோ, வேறு எந்தவகைச் சேர்க்கையோ ஒரு நபர் மேற்கொள்ளும் தேர்வுதானேயன்றி ஒரு பாலியல் நியதியல்ல. எவ்வகை உறவாயினும் அது (ஒருவரது) ஆதிக்கத்தை நிலைநாட்டக் கூடிய உறவாக உருமாற்றப்படலாம். சேர்க்கையின் வடிவத்தைக் கொண்டு பாலியலின் அரசியலை, அதன் 'முற்போக்கு', 'பிற்போக்கு' தன்மைகளை மதிப்பீடு செய்வதும் கூட உடலை -அதாவது மானுட உடலை- பொருள் தன்மையுறச் செய்வதற்கு (reification) ஒப்பாகும் என்பது என் கருத்து.

www.padippakam.com

**சாதியும் பாலியலும் சந்திக்கும் புள்ளியில் பெண் ஒடுக்குமுறையை அடையாளம் காண்பது எந்தளவில் சரியானது? இந்திய நிலைமையிலும் வளர்ச்சியடைந்த இந்த நாடுகளிலும் செல்லுபடியாகக் கூடிய ஒன்றா?**

சாதி என்பது ஒரு விதத்தில் நிறவெறி/இறுமாப்பு போன்றது தான். பெரியார் ஒருமுறை கூறியதுபோல், அது நம் எல்லோரிடையேயும் ஏணிப்படிபோல் காணப்படும் ஒன்று. இந்து -இந்திய சமுதாய- பொருளாதார அமைப்பினை, அதன் ஏற்றத் தாழ்வு களை, முரண்களை கட்டிக்காத்து ஒடுக்கப்படும் மாந்தர் அனைவரும் ஒன்றாக இணைவதை சாத்தியமற்றதாக்கியே சாதி செயல்படுகிறது. குறிப்பிட்ட சாதியின் அடையாளத்தை, 'மானத்தை', காப்பவள் / உறுதிப்படுத்துபவளாக இருப்பவள் பெண். அவள் சாதியின் கட்டுக்கோப்பை தகர்த்தெறிய முற்பட்டாலோ அல்லது அவள் சார்ந்திருக்கும் சாதியை இழிவுபடுத்த அயல்சாதி ஆண்கள் அவளை 'மானபங்கப்படுத்தினாலோ', உயர்சாதி ஆண்கள் தலித், பழங்குடியினப் பெண்களை பாலியல் வன்முறைக்கு ஆளாகினாலோ -இவை அனைத்தும் குறிப்பிட்ட சாதியின் கட்டுப்பாட்டைக் குலைக்கும் செயல்கள். எனவே சாதியும் பாலியலும் அதாவது சாதி அடையாளமும், சாதி சமுதாயத்தில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாலியல் பாத்திரமும் ஒன்றை மற்றொன்று சார்ந்து இயங்குவதால் இவை இரண்டும் சந்திக்கும் புள்ளியானது பெண்ணியப் போராட்டத்தின் முக்கிய களன்களில் ஒன்றாகிறது.

சாதியடையாளம் பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்துவதன் மூலம், அக் கட்டுப்பாட்டினூடாக உறுதி செய்யப்படுகிறது. அவ்வாறே சமய, பண்பாட்டு, தேசிய, இன, நிற அடையாளங்களும் நிலைநிறுத்தப்படுகின்றன. பொஸ்னிய முஸ்லிம்களுக்கு 'பாடம்' கற்பிக்க செர்பியர்கள் கையாண்ட வழிமுறை : முஸ்லிம் பெண்களின் மீது திணிக்கப்பட்ட மிக கோரமான பாலியல் வன்முறைச் செயல்கள்தான் என்பதை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

**ஈழத் தேசிய விடுதலைப் போராட்ட நிலைமையில் கவனத்திற்கொள்ளப்படுத்தப்பட வேண்டிய கேள்விகளில் ஒன்று இது. இன்று பெருமளவில் பெண்கள் ஆயுதம் ஏந்தியுள்ளனர். இது சமூக மதிப்பீடுகள் சிலவற்றை உடைத்து நொருக்கியிருந்தாலும் அடிப்படையில் பெண்கள் பற்றிய மதிப்பீடுகளை நொருக்கிவிடவில்லை குறைந்தபட்சம் கேள்விக்குள்ளாக்கியதாகக் கூட இல்லை. இந்த நிலைமையில் போராட்டம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபின் அல்லது இதிலிருந்து விலகிக் கொண்ட பெண்களை சமூக மதிப்பீடுகள் வஞ்சித்துவிடும் அபாயம் உள்ளது. இது பற்றி உங்கள் கருத்து?**

இன்று ஈழத்திலும் உலகின் வேறு பல இடங்களிலும் நடைபெற்று வரும் தேசிய இனப் போராட்டங்களில் பெண்கள் பல்வேறு நிலை களில் பங்கேற்று வருகின்றனர். ஒரு பெண் தன்னை 'பெண்ணாக' மட்டும் உணர்ந்து வாழ்வ தில்லை. குறிப்பிட்ட தேசிய இனத்தைச் சேர்ந்த வளாக, குறிப்பிட்ட மொழியைப் பேசுபவளாக, குறிப்பிட்ட மதசார்புடையவளாக, தன்னை உணர் கிறாள். எனவே தேசிய இனப் போராட்டங்களில் அவள் பங்கேற்பதில்,அப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திச் செயல்படுவதில், எந்த அதிசயமும் இருக்க முடியாது. ஆனால் போர், அது ஏற்படுத்தும் நாச விளைவுகள், அது உருவாக்கும் எதேச்சதிகார அரசியல், பெண்களை போர்ச் சூழல் பாதிக்கும் விதம் -இவற்றைப் பற்றிய பெண்ணிய மதிப்பீடுகள் அவசியம். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களால் -இன்றைய ஈழப் போராட்டச் சூழலில்- இதைச் செய்ய முடியாது என்றே எனக்குப் படுகிறது. ஏனெனில் ஈழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தன்மை, உள்ளடக்கம் முதலியவற்றை விமர்சித்தால் அன்றி மேற்கூறிய விமர்சனத்தை அவர்களால் மேற்கொள்ள முடியாது.

**இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் தேசத்தில் ஆணாதிக்கத்தால் ஒடுக்கப்படும் பெண்களுக்கு போராட்டம் என்பது இரட்டை நிலைப்பட்ட ஒன்று எனும்போது, தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் உதிரிகளாகச் செயற்படுவதா? அமைப்புகளாக கலந்து போராடுவதா சிறப்புடையதாக இருக்கும்?**

தமிழகத்திலும் சரி, ஈழத்திலும்சரி, தேசிய அடையாளம் என்பது 'இனமானம்' 'இனப்பெருமை' என்பன போன்றவற்றினூடாக வெளிப்படுவதாகக் கொள்ளப்படுகிறது. இங்கு 'மானம்' என்பது பெண்களின் 'கற்பு', 'மானம்' போன்றவற்றுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. தமிழகத்தை 'கன்னித்தாயாக' உருவகிக்கும் சொற்பிரயோகங்களைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். இவ்வாறு விளக்கப்படும் தேசிய அடையாளம் பெண்கள் ஏற்று தமதாக்கிக் கொள்ளக் கூடிய அடையாளமாக இருக்க முடியாது. ஏனெனில் பெண்ணின் பாலியலை குறிப்பிட்ட வடிகால்களுக்குள் செலுத்தி/முடக்கி செயல்படும் இவ் விளக்கம் பெண்களை அந்நியப்படுத்தும் ஒன்றாக விளங்குகிறது. எந்தவொரு சிந்திக்கும் பெண்ணாலும் இந்த அடையாளத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசிய இனப் பிரச்சைனை, அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை பெண்ணிய நிலைப்பாட்டிலிருந்து விளக்குவதும், தேசிய இனப்போராட்டத்துக்கு பெண்ணிய உள்ளடக்கம் வழங்குவதும் தான் பெண்களை ஆக்கப்பூர்வமான வகையில் போராட்டத்துடன் இணைக்க உதவும். ஆனால் இதற்கு முன்நிபந்தனையாகவும் போராட்டத்தின் போதும் குடும்பம், சாதி, மதம், 'தமிழ்ப் பண்பாடு' முதலியனவற்றை மறுவிளக்கம் செய்வதும் மாற்றியமைக்க முயற்சி செய்வதும் அவசியம்.

## நம்பிக்கைச் சித்திரம்

**ஓர் இலங்கைச் சிறுமி**
(பெயர் தெரியவில்லை
வயது – 13)

என்னிடம் ஒரு வர்ணப்பெட்டி இருந்தது
ஜொலித்துக் கொண்டு, தூக்கலாக.
என்னிடம் ஒரு வர்ணப்பெட்டி இருந்தது
சில சூடாக, சில சில்லிட்டுப் போய்.


அந்தக் காயங்களின் இரத்தத்தை வரைய
என்னிடம் சிவப்பு இருக்கவில்லை.
அந்த ஆதரவற்றவளின் துக்கத்தைத் தீட்ட
என்னிடம் கருப்பு இருக்கவில்லை.
அந்த செத்த முகங்களுக்கு உருக்கொடுக்க
என்னிடம் வெள்ளை இருக்கவில்லை.
அந்த தகித்துக் கொண்டிருந்த மணல்களை விவரிக்க
என்னிடம் மஞ்சள் இருக்கவில்லை.

ஆனால் என்னிடம் ஆரஞ்சு இருந்தது -
வாழ்க்கையின் ஆனந்தத்தை பிழிந்து காட்ட.
என்னிடம் நீலம் இருந்தது -
தெளிந்த வானத்தை பிரதிபலித்துக் காட்ட.
என்னிடம் பச்சை இருந்தது -
இளந்தளிர்களை படம்பிடித்துக் காட்ட.
என்னிடம் ரோஸ் இருந்தது -
நம்பிக்கை கனவுகளை சித்திரமாக்கிக் காட்ட

நான் உட்கார்ந்து வரையத் துவங்கினேன்
ச மா தா ன ம்

நன்றி : தலைப்புச் செய்திகள்
மூன்றாம் உலகக் குரல்
(வெளியீடு : சவுத் ஏசியன் புக்ஸ்)

www.padippakam.com



# வன்முறைக்கு ஆதரவு அளிக்கும் நீதியின் கரங்கள்.

- தேவா -

பெண்கள், பிள்ளைகள் வன்முறைக்குள்ளாக்கப்படுவது உலகின் எல்லா நாடுகளிலும் தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. இது புகலிடங்களிலும் வெகுவாகக் கடைப்பிடிக்கப்பட்டு அல்லது இன்னும் ஆணாதிக்கத்தின் பேரால் வளர்க்கப்பட்டு வருகின்றது என்றால் அது மிகையானதல்ல. 'அடிக்கிற கைதான் அணைக்கும்', 'புருஷன்தானே அடிக்கிறான்', 'இன்றைக்கு புருஷனும் பெண்டாட்டியும் அடித்துக் கொள்வார்கள் ; நாளைக்கு சேர்ந்து கொள்வார்கள்', 'நாமேன் இவர்களுக்குள் தலைப்போடுவான்' போன்ற மூடத்தனங்கள் வெகுவாகப் பரவியிருக்கின்றன. இந்தப் பிற்போக்குத்தனங்களுக்கு ஆதரவளிக்கும் ஆணாதிக்கத்தால் பெண் அடிமைத்தனம் வளர்க்கப்படுகின்றது. குடும்ப அமைப்பிலே அந்நியத் தலையீடு அநாவசியம் என்று ஒதுங்குதல், அங்கு நிகழும் வன்முறைகளை அறிந்திருந்தும் அதனை மூடிமறைப்பது, தெரியாதது போல் இருப்பது போன்ற முகங்களைக் கொண்டிருக்கிறது.

அதேசமயம் குடும்பத்துள் நிகழும் சச்சரவுகளை வேடிக்கை பார்ப்பது, யர்ரில் பிழையென கண்டுபிடிக்கும் ஆர்வம் (முடிவில் பெண்தானே ஒத்துப் போகவேண்டும் என்னும் பிடிவாதக் கொள்கையே மேவியிருக்கும்), பிரச்சினைகளை 'விமர்சித்தல்' ஆகியன அனேகமான எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது. படித்தவர்கள் மத்தியில் வேற்று குடும்பப் பிரச்சினைகளைப் பற்றி கதைப்பதோ, அல்லது அதுபற்றிய ஈடுபாட்டினைக் காட்டுவதையோ தேவையற்ற விடயமாக கருதுகின்றனர். பிரச்சினைப்படுபவர்களே, தம் பிரச்சினைகளைத் தீர்க்க முயல வேண்டும் அல்லது விடுதலையை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற நிலைப்பாடு மிக வசதியாக இவர்களால் முன்வைக்கப் படுகின்றது.

பெண்களுக்கு மேல் நடாத்தப்படும் வன்முறைகளை முறையீடு செய்ய காவல் நிலையங்கள் இருக்கின்றன. நீதி கிடைக்க நீதிமன்றங்கள் இருக்கின்றன. பொருளாதார உதவிகளுக்கு அரசின் சமூகநலப் பிரிவுகளும், அநாதரவான பெண்கள் தங்குவதற்கு இரங்கு நிலையங்களும் இயங்குகின்றன. இங்கு இடைக்கால தங்குமிட வசதிகள் செய்து தரப்படுகின்றன. (மேலே குறிக்கப்பட்ட அரசின் சமூகநலப் பிரிவுகள் தவிர சில ஆலோசனை நிலையங்கள் தனிப்பட்ட ரீதியாயும், பெண்கள் இரங்கு நிலையங்கள் மத அமைப்புகளின் கீழ் மேலைநாடுகளில் இயங்குகின்றன.) இத்தனை ஒழுங்குகளும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு செய்து தரப்பட்டிருக்கும் போது, பெண்கள் ஏன் இன்னும் ஓலமிடுகின்றனர் என்று கேட்கும் அறிவாளிகளும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றனர். அதேசமயம் சொந்த நாட்டில் உறவினர்கள் முன்னின்று சமரசத்திற்கு வழிகாட்டும் போதகர்களாக செயல்படுகின்றனர். இச் சமரசங்கள் எந்தளவுக்கு பெண்களுக்கு விடுதலை தேடித்தருவதென்பது வேறு விடயம்.

வன்முறைக்காளானோர் தம்மை மீட்சிக்கும் பணியில் எவ்வளவு தடைகளை தாண்டி வரவேண்டியிருக்கிறது என்பதை ஆராயவேண்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

நீதியின் தரப்பில் அதனுடைய நடைமுறைகள், கட்டுக்கோப்புக்கள் எத்தனை பெரிய மதிலாக பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு முன்னே வடிவெடுத்து நிற்கிறதென்பதைச் சொல்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

நண்பர்கள், உறவினர்கள் இதுவிடயத்தில் தலையிட்டு அவமான, ஆத்திரங்களை தாங்கள் சந்திக்க நேர்ந்து, அதனால் அவர்கள் ஒதுங்கி விடுவது இப் பிரச்சினையின் முதல் கட்டமாக இருக்கும். இதன் பின்வரும் பெண்ணின் மீட்சிக்குரிய வழிகள் பல இருக்கின்றனவே எனக் கூறுவது இதில் சம்பந்தப்படாதவர்களுக்கு சுலபமே. புகலிடங்களில் தமிழ்ப் பெண்கள் மூடிய கதவு, யன்னல்களுக்கிடையே தம் வாழ்வை ஓட்டுவதால் நான்கு சுவர்களுக்குள் வளரும் நாளாந்தப் பிரச்சினைகளுக்குள் தம்மைத் திணித்து வாழவேண்டியுள்ளது. தனியே வீட்டின் அன்றாட வேலைகளைச் செய்வது, பொருளாதாரத்தில் கணவனில் தங்கியிருத்தல் (வேலைக்கு போகும் பெண்ணும் தன் ஊதியத்தை கணவனுக்கு தெரியப்படுத்த கடமைப்பட்டவள், குடும்ப அமைப்பிலே கடன்களையும் தீர்க்க வேண்டிய கட்டாயத்துக்குட்பட்டவள்), சொந்த பந்தங்கள் அண்மையில் இல்லாமை, தனிமை, மொழி புரியாமை, தீர்மானங்களை முடிவெடுக்க முடியாத விதத்தில் வளர்க்கப்பட்டிருத்தல், சிறைபோன்ற புகலிட இல்ல அமைப்புகளும் அதன் கட்டுப்கோப்புகளுக்கு அமைய வாழ்வு நடத்தவேண்டிய நிர்ப்பந்தமும், தான் கணவனால் மோசமாய் நடத்தப்பட்டாலும் அதனை மூடிமறைத்து உற்ற நண்பர்களிடமோ உறவினரிடமோ கூட காட்டிக்கொள்ளக்கூடாது என வளர்க்கப்பட்ட போக்கு என்பன பாதிக்கப்பட்ட பெண்களின் விமோசனத்துக்குத் தடைபோடுகின்றன. பிரச்சினைகளுக்கு தீர்வு தேடி அவதிப்படும் பெண்ணுக்கு 'அவள் எதையும் தாங்கிக் கொள்ள வேண்டும்; பெண் பூமித்தாய் போல பொறுமையைக் கொண்டிருக்க வேண்டும்' போன்ற விதண்டா வாதங்கள் பல சமயங்களில் பலரிடமிருந்தும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

கணவனிடமோ தந்தையிடமோ தாயிடமோ சகோதரனிடமோ வன்முறைக்கு ஆளாகும் பெண்கள் தாம் இவ் வன்முறைக்கு ஆளாவது சரியானதே என நினைக்கும் மனநிலை கொண்டிருக்கின்றனர் (இவர்களில் பலரும் தன் பிள்ளைகளின் தவறுகளைக் கண்டிக்கும் போர்வழி என்று அவர்களை அடிப்பதிலும் தண்டனை தருவதிலும் ஆண்பாலாருக்கு சற்றும் சளைத்தவர்கள் அல்ல).

தங்கையொருவள் அண்ணனிடம் தானும் வேலைக்குப் போகவேண்டும் என்ற ஆசையை வெளியிட்டபோது 'எனக்கு சரியாக சமைத்துப் போடவே உனக்குத் தெரியவில்லை, நீ வேலைக்குப் போய் கிழிக்கப்போறாயா? இனி இப்படி ஒரு தடவை கேட்டால் கையை காலை முறித்துப் போடுவேன்' என்று நன்கு அடிகள் கொடுத்திருக்கின்றான் அண்ணன். இதை ஒரு சாதாரண நிகழ்ச்சியாக உள்வாங்குவோர் அவளை மேலும் வன்முறைக்குட்படுத்த உடன்படுகின்றோம் என்று சிந்திப்பதில்லை. உலகின் எல்லாப் பாகங்களிலும் பெண்ணை தொடர்ந்து அடிமைநிலையில் வைத்திருக்கும் முயற்சிகள், இப்படியான வன்முறைகளால், கருத்துச் சுதந்திரப் பறிப்பால் மேற்கொள்ளப் படுகின்றன. ஆண்கள் பெண்களுக்கும் பிள்ளைகளுக்குமான அதிகாரங்களை தங்கள் கைகளில் வைத்திருப்பதான எண்ணமே அவர்களை துன்புறுத்துவதற்குத் துணை புரிகிறது. உடம்பில் காயங்கள் ஏற்படுமளவுக்கு வன்முறை பெண்ணின் உடம்பில் காணப்பட்டால் தான் அதுபற்றி சிறிதளவு மற்றவர்கள் அக்கறை எடுக்கின்றனர். இதுபற்றிய கேள்வி எழுப்படும்போது 'இது என் குடும்பம். இதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை', 'நல்லாய் வாயடிக்கிறாள். இவள் பேச்சு ஆத்திரமூட்டக்கூடியது' என்று ஒருதரப்பு வாதமாக முன்வைக்கப்படுகிறது. (இதில் பரிதாபம் என்னவெனில் ஆண் கொள்ளும் கோபம் நியாயமானதாகவும், பெண் அடையும் ஆத்திரம் அற்பமானதாகவும் கணிக்கப்படுகின்றது.) இதனை முன்வைத்து வன்முறையை நியாயப்படுத்த முயற்சி நடக்கிறது. பெண்ணின் கருத்துக்கள் வெளிப்படும்போது அந்த முரண்பாட்டை தடுக்க அல்லது இல்லாமல் செய்ய அதிகாரவெறி வன்முறை உருவம் கொள்கிறது. அதிகாரத்தை மீறுதலுக்கு தண்டனை வழங்குதல் ஆணின் முழுமையான கடமையாக சமூகமும் ஒத்துக் கொள்கிறது.

குடும்பத்துள்ளே நடைபெறும் இத் தனிமனிதப் போராட்டங்கள் வைத்தியசாலையில் அல்லது சிறையில் வன்முறைகளின் உச்சக்கட்டத்தைத் தொடுகின்றன (ஐரோப்பிய நாடுகளில் மனைவியை



படிப்பகம்

www.padippakam.com

ஆயுதத்தினால் காயத்திற்குள்ளாக்கினால் - இதையும் அவள் தன் வாக்குமூலத்தில் கொடுத்தாள் என்றால்தான் - கணவன் சிறையில் அடைக்கப்படுவான்); அதன் நிஜங்களை புறஉலகுக்கு உணர்த்துகின்றன. மேலும் பிற பெண்களை, பெண்/ஆண் சிறுவர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தும் ஆண்களுக்கு தண்டனை பெற்றுத்தர முயல்வோருக்கும் கூட இதேபோன்ற கொடுமைகள் குடும்பத்துள் நிகழ்வது தெரிந்தும் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதன் காரணம் குடும்ப நிறுவனம் மிக அதிகாரம் கொண்டதாகவும் சட்டங்கள் அதற்கு இயைபாக உருவாக்கப்பட்டிருப்பதும் கண்கூடு. இக் குடும்ப நிறுவனத்தை ஊடுருவது சர்வாதிகாரமான அரசொன்றைத் தட்டிக் கேட்பது மாதிரியான செயலைப் போன்றது. பொலீசுக்கோ நீதிமன்றத்துக்கோ தனக்கு நடந்த துன்பங்களை தொடர்ந்தும் நடக்காமல் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு அங்கு முறையிடச் செல்லும் பெண் குடும்ப நிறுவனத்தை உடைக்கும் சமூக நியதிகளை மீறுபவளாக சமூகத்தால் கவனிக்கப்படுவது இன்னும் இருக்கிறது. வன்முறைக்கு ஆளாகும் பெண்கள் தம் வாக்குமூலத்தை காவல் நிலையத்தில் முறையிடச் சென்றால் அங்கு அவர்கள் மிகவும் மோசமான கேள்விகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். சம்பவங்கள் நடந்த இடங்கள், தேதி காலம், கூட இருந்தவர்கள் யார்? என்னமாதிரி நடைபெற்றது? போன்றவைகளை வாக்குமூலம் கொடுப்பவர்கள் ஆயத்தமாக்கிக் கொண்டிருக்க வேண்டும். பெண் சொல்வதை சந்தேகக் கண்ணோடு பார்ப்பதும் தெரிந்த கதைதான்.

மனைவி/ பிள்ளைகள்/ சகோதரிகள் மேல் ஆண் நடத்தும் ஒடுக்குமுறையின் ஒரு அம்சமான (அது பாலியலானதாயிருப்பினும்) கையால் தாக்குதல், தடியால் அடித்தல், ஆயுதத்தால் காயமேற்படுத்தல் -அதனால் ஏற்பட்ட காயங்கள், சிகிச்சைகள், மனோரீதியான பாதிப்புக்கள் என்பவைகளை மையமாய் வைத்தே நீதிமன்றங்களிலும் விசாரணைகள் செய்யப்படுகின்றன. மற்ற அம்சமான வீட்டுக்குள்ளே பூட்டி வைத்தல், பொருளாதார விலங்கு, உணவு தராமை, நிர்ப்பந்த வேலை, விருப்பமின்றிய உடன் வாழ்வு போன்றவைகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அடிக்கடி எதுவித காரணமுமின்றி வருடக்கணக்கான குடும்பத் தலைமைத்துவத்தின் துன்புறுத்தல்களுக்கு உள்ளானோர் அவற்றை காவல் நிலையத்தில் முறையிடுவதாயின் உடம்பின் எந்தப் பாகத்தில் அடி விழுந்தது? அடித்ததன் காரணம் என்ன? அடி தர வரும்போது/ கத்தியால் குத்த வந்தபாது நீ எங்கிருந்தாய்? உனக்கும் அவனுக்கும் என்ன இடைத்தூரம் இருக்கும்? கூட இருந்தவர்கள் தடுத்தார்களா? நீ தடுக்க முயன்றாயா? (பாலியல் சம்பந்தமான கேள்விகள் இன்னும் ஆழமாக்கப் படும்) துன்புறுத்தல் செய்யும் போது அவன் கொஞ்சமாய் அல்லது நிறைய குடித்திருந்தானா? (மது சிறிதளவு உபயோகித்திருந்தாலும் அதனைக் காரணம் காட்டி தவறு செய்தவன் தப்பித்துக் கொள்ள சட்டத்தில் இடமுண்டு) அவன் குடித்திருந்தது உனக்குத் தெரியுமா? என்ற விபரங்களை வைத்திருக்க வேண்டும். காயங்களின் அடையாளங்கள் சம்பவத்தின் முன்னைய பின்னைய மனோநிலை, வைத்திய அறிக்கை, பின்விளைவுகள் ஆகியவைகளை ஆதாரங்களோடு காட்ட வேண்டும். தள்ளிவிடப் பட்டிருந்தால் எவ்வளவு தூரத்தில் போய் விழுந்தாய்? உதைத்திருந்தால் எந்தக் காலால் உதைக்கப்பட்டது? உனக்கு எந்த இடத்தில் உதை விழுந்தது? (நிகழ்வு சொன்னதற்கு பொருத்தமாய் அமைந்திருக்க வேண்டும்.)

ஏற்கனவே துன்புறுத்தல்களுக்கு உள்ளான பெண்கள் இவைகளை முறையிட வரும்போது மேற்குறிப்பிட்ட கேள்விகளால் துளைக்கப் படுகின்றனர். இப்படி அவர்களை கேட்பது தமது கடமையென்றும், அவர்கள் தங்கள் கேள்விக்கணைகளால் திண்டாடும் போது தங்கள் கெட்டித்தனத்தை தாமே மெச்சிக் கொள்வதும் காவல்துறையினரின் இயல்பாகியிருக்கிறது. அதேசமயம் பெண் சொல்வதை நம்பாத தன்மையும் அவள் யாவற்றையும் மிகைப்படுத்துவதாக ஊகிப்பதும் நிகழ்கிறது. விசாரணைகளால் அவளைக் களைப்படையச் செய்வதால் அவள் முன்னுக்குப் பின் முரணாக பதில் கொடுக்கின்றாள் என்பதை விட இப்படி பதில் தர காவல் நிலையமே காரணமாய் இருக்கிறது என்பதே சரி.

புகலிடத்தில் பாடசாலைக்குப் போகும் சிறுமியொருத்தியிடம் ஒரு தடவை வாக்கு மூலம் பெறப்பட்டபோது, அவள் "அவர் அப்பாவா? அவருக்கு பேசவே தெரியாதே? அவர் என்னை, தம்பியை, அம்மாவை எந்தக் கேள்வியும் கேட்காமல் எந்த நேரத்திலும் அடிப்பார்." என்றாள்



படிப்பகம்

www.padippakam.com

நீதிமன்றம் அவளிடம் கேட்ட கேள்வி: ஒரு கிழமையில் உன்னை எத்தனை தரம் அடித்தார்? அதற்கு அவள் சிறிதும் தயக்கமின்றி நீதிமன்றத்தைப் பார்த்துத் திருப்பிக் கேட்டாள் "அவர் காலை நேரங்களில், பகல் நேரங்களில், இரவுகளில் எங்களை அடித்ததற்கு கணக்குப் போட்டுச் சொல்லவா? ". அவளிடம் கேட்கப்பட்ட அடுத்த கேள்வி: 'அப்பா உன்னை அடித்த போது அம்மா என்ன செய்தாள்? '. அவள் பதில் : 'அம்மா அதைத் தடுக்க வருவாள். அவளுக்கும் சேர்த்து அடிகள் உதைகள் விழும்.'

ஒரு பெண் தன் கணவனுக்கு வேறாருத்தி இருப்பதை அறிந்து அவனுடன் சண்டைபிடிக்க, அவன் கத்தியால் அவளை குத்தியிருக்கிறான். மருத்துவசாலையில் குணமாகியபின் காவல் நிலையத்திற்குப் போய் சம்பவத்தை முறையிடச் சென்றபோது அவளின் கத்திக் குத்து மட்டுமே பிரதான சம்பவமாகவும், அதற்கு முன் அவளுக்கு நடந்த பிரச்சினைகள் பாராமுகமாகவும் எடுக்கப் பட்டது. கேள்விகள் அவள் படிப்பறிவினை பரீட்சிக்கும் கட்டங்களாயும் அமைந்தன. ஆசிய நாடுகளிலிருந்து வந்திருந்தால் அவள் சொல்லும் விடயங்கள் கவனத்துக்கெடுக்கவே தேவையற்றவை என காவல் நிலையம் கருதுகிறது. 'ஆசிய நாட்டவர் தங்கள் பெண்களை மோசமாக நடத்துபவர்கள். இது இவர்கள் வழமை. எங்களுக்கு ஏன் வீண்வேலை' என்னும் மனோபாவங்களும் இனவாதமும் பாதிப்புற்ற இப் பெண்களை மேலும் தளர்வுறச் செய்கின்றன. (மேலைநாடுகளிலும் கணவன் மனைவியை பிள்ளைகளைத் துன்புறுத்துவதும் நிகழ்ந்து கொண்டுதானிருக்கிறது). தவிரவும் பாதிப்படைந்த பெண்களில் சிலர் கொடுத்த வாக்குமூலத்தை இன்னொரு நாள் வந்து 'என் கணவன் அப்படியொன்றும் செய்யவில்லை' என்று வாபஸ் பெறுவதும் உண்டு. ஒரு தடவை கணவனால் கத்திக்குத்துக்கு உள்ளான ஒரு பெண் அதற்காகச் சிறைப்படுத்தப் பட்டிருக்கும் தன் கணவனை விடுதலை செய்யும்படி (அவன் தெரியாத்தனமாய் அப்படிச் செய்ததாயும்) மனுப்பண்ணி நீதி மன்றத்துக்கு விண்ணப்பம் செய்த சம்பவமும் புகலிடங்களில் உண்டு.

கிறிஸ்தவ ஸ்தாபனங்களினால் நடாத்தப்படும் 'இடைக்கால தங்குமிட இல்லங்களில் ஆசியப் பெண்கள் வசிக்க நேரிடும் போது பல சிக்கல்கள் எழுகின்றன. உணவு தயாரித்தல், பிள்ளைகளைப் பராமரித்தல், கடைகண்ணிகளுக்கும் வேறு எங்கு செல்லவேண்டி யிருப்பினும் துணையோடு போகவேண்டியிருத்தல் (கணவன் தரப்பில் தொந்தரவுகள் ஏற்படலாம் எனபதால்) யாவற்றுக்கும் (புகலிடமே அந்நியமாய்த் தொடரும் நிலையில் இன்னொரு அந்நிய நிலையத்தில் தங்க நேரும்போது) ஸ்தாபனத்தின் அனுமதி, கட்டுப்பாடு போன்றவற்றால் அவதியுறும் பெண்கள் மீண்டும் உறவினரை நாடுவதும் இயல்பே. அவர்கள் குடும்பத்தை மீண்டும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் இறங்குவது தம் கடமையென நினைக்கின்றனர். பெண் தன் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ள என்னென்ன உதவிகள் தேவைப்படுகிறது என்று நோக்கப் படுவதில்லை. குற்றவாளிக்கு தண்டனை வாங்கிக் கொடுப்பதாலோ பாடம் கற்பிக்க முயற்சிப்பதாலோ பிரச்சினைகள் தீரவும் போவதில்லை. பாதிப்புற்ற பெண்ணின் உண்மையான பிரச்சினை என்ன? அதன் கனத்தைப் புரிந்து அதனைத் தீர்ப்பதற்கு அல்லது அவளுக்கு உதவுவதற்குரிய வழிவகைகள் சிந்திக்கப்பட வேண்டும். செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசோ மத நிலையங்களோ காவல் நீதிமன்றங்களோ பாரிய முயற்சி எடுத்து பாதிப்புற்ற பெண்களுக்குரிய தேவைகளை நிவர்த்தி செய்ய தயாராயில்லை என்பதே வெளிப்படை. புகலிடங்களில் துன்புறுத்தல் களுக்கு உள்ளாகும் பெண்களுக்கு சொந்த நாட்டிலிருந்து சுமந்து வந்த அவலங்களோடு இங்கு மேலும் அவர்கள்மீது பொதி ஏற்றப்படுகிறது. பிரச்சினைக்குள்ளான பெண்களுக்கு உதவும் நோக்கில் அரச சார்பற்ற தனியான நிறுவனங்களும் ஆங்காங்கோ செயற்படுகின்றனதெனினும், இவைகள் பற்றி போதியளவு தெரியப்படாததாய் இருப்பதும், பரந்தளவில் எல்லாப் பெண்களையும் அடையக் கூடியவாறும் இல்லாதிருக்கின்றன.

X

(12.04.96)



படிப்பகம்

www.padippakam.com

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
(லண்டன்)

# சினிமாவும் பெண்களும்

சினிமா உலகம் தனது நூற்றாண்டு பிறந்த தினத்தை 1995ம் ஆண்டி லிருந்து கொண்டாடுகிறது.

சினிமாவின் ஆதிக்கம் அரசியல், பொருளாதார, கலாச்சார, சமய ரீதியாக விரிந்து கொண்டு போகிறது. வியாபார மயமான சினிமா உலகம் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து எப்படித் தங்கள் பார்வையாளர்களை கவரலாம் என்று வேலை செய்கிறது.

மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஆத்மீக பலத்துக்கும் பரம்பரையாக உறுதுணையாக இருந்துவந்த எழுத்துத் துறையை இன்றைய சினிமா உலகம் மங்கவைத்து விட்டது.

சாதாரண ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் சினிமாவின் தாக்கம் ஏதோவொரு வகையில் திணிக்கப்படுகிறது. சினிமா மறைமுகமாக எத்தனையோ விஷயங்களைப் போதிக்கிறது. பெண்களின் கல்வி வளர்ச்சி எப்போதும் ஆண்களின் நோக்கிலும் தேவையிலும் தங்கியிருந்தது. இன்று ஆண்களின் பிடியிலுள்ள சினிமா மூலம் தங்கள் கருத்துக்களைத் திணிக்க சினிமாக் கதைகள், கமராக்கள், ஒலி, ஒளி என்பவற்றையும் பாவிக்கிறார்கள். கதைகளைப் பார்த்தால் பெண்களைத் திருப்திப்படுத்தும், பெண்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் படங்கள் மிகவும் குறைவே. இந்திய படத்துறை உலகத்திலேயே மிகவும் கூடிய படங்களை வெளியிடுகிறது. பெரும்பாலான படங்கள் ஆண்களின் வலிமையையும் வளர்ச்சியையும் பிரதிபலிப்பதாக இருக்கின்றன.

பெண் கதாநாயகிகள் பெரும்பாலும் 20 வயதுக்குக் கொஞ்சம் கூடிக் குறைந்தவர்களாகவும், ஆண் கதாநாயர்கள் பெரும்பாலும் 40 வயதைத் தாண்டியவர்களாகவும் இருப்பது சர்வ சாதாரணம். சம வயதில் வைத்துப் படம் எடுத்தால் ஜோடியின் கவர்ச்சி குறையுமா? அல்லது இந்த ஜோடி அமைப்பு சமுதாயத்தில் ஆண்களின் எதிர்பார்ப்பை பிரதிபலிக்கிறதா? பெண்கள் பெரும்பாலும் அசடுகளாக, வெகுளிகளாக (கல்லூரி மாணவி அல்லது பட்டிக்காட்டுப் பெண்ணாய் இருந்தால் வாயாடியாய்) படைக்கப்படுகிறார்கள். ஆண்களின் எதிர்பார்ப்பில் பெண்கள் அசடுகளாக, உணர்ச்சிக் குவியல்களாக, ஆண்களுக்காக உயிரையும் கொடுக்கும் தியாகிகளாக ஆண்களின் இச்சைக்கு இரைபோடும் கபரே டான்சராகப் படைக்கப் படுகிறார்கள்.

தமிழ்ப் படங்களைப் பார்ப்பவர்கள் பெரும் பாலானவர்கள் ஏழைகள். வேறு எந்தவிதமான பொழுது போக்குக்கும் வசதியற்றவர்கள். இவர்களின் உணர்வுகளைத் திசைதிருப்பி சமூகப் பிரச்சினைகளில் முகம்கொடுக்க வலிமையற்றவர்களாக்குகிறது இந்தப் படங்கள். மேற்கு நாடுகளில் வரும் தமிழர்களைப் பொறுத்தவரையில் மொழிப் பிரச்சினை காரணமாக அந்நிய கலாச்சாரத்தை அறியவோ அல்லது படிக்கவோ பெரும்பாலான தமிழர்கள் முன்வருவதில்லை. அத்துடன் இளம் தமிழ்ப் பெண்கள் வேலைசெய்து வந்த களைப்புத் தீர ஆறுதலாக இருந்து நேரத்தைச் செலவளிப்பதற்கு இந்த குப்பைத் தமிழ்ப் படங்களைப் பார்க்கிறார்கள்.

இந்தப் படங்களில் வரும் இளம் நடிகைகள் 'பாஷன்' களை அறிமுகப் படுத்துகின்றார்கள். இந்த அழகிய நடிகைகள் மூலம் 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற தாரக



படிப்பகம்

www.padippakam.com

மந்திரத்தை பிரதிபலிக்கும் கதைகள் திரையிடப்படுகின்றன. மேலை நாடுகளில் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை மிகவும் கடினமானது. தனிமையானது. எங்கள் கலாச்சாரத்தில் தனிமனிதப் பிரச்சினைகளை கலந்தாலோசிப்பது கௌரவக் குறைவாக கணிக்கப்படுவதால் பெண்கள் இந்தப் படங்கள் போதிக்கும் பாடங்களை பின்பற்றித் தங்கள் குடும்பப் பிரச்சினையை கடவுள் தலையில் கட்டி விடுகிறார்கள். லண்டனில் காளான் முளைப்பது போல் கோயில்கள் முளைக்கின்றன.

இந்தக் கோயிலை வேண்டி நிற்பவர்கள் பெரும்பாலானவர்கள் பெண்கள். திருமணப் பிரச்சினை மிகவும் பொல்லாத பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளுக்கு தமிழ்ப் படங்களில் கடவுளை நம்பி பூசை செய்வதும் கடவுள் பெண்களின் பிரார்த்தனைகளுக்கு இரங்கி கருணை காட்டுவதாகவும் எடுத்துக் காட்டப்படுகிறது. லண்டன் கோயில்களில் லட்சக்கணக்கான பணம் சேர்கிறது. நேர்த்திக் கடன்களும் அர்ச்சனைகளும் 'அமோ அமோ' என்று நடக்கிறது. அதே நேரம் தமிழ்ச் சமுதாயத்தில் இருதய நோய்களும் (Covonary heart diseases) மன வியாதிகளும் (Mental illnesses) கூடிக் கொண்டு வருகின்றன. புத்திரீதியாகப் பிரச்சினைக்கு முடிவுகட்டி வழிகாண தமிழ்ப் படங்கள் பெண்களுக்கு உதவாது. ஏனென்றால் ஆண்களின் பார்வையில் போக்கில் எப்படி பெண்களை இரண்டாம் பிரஜையாய் வைத்திருக்கலாம் என்ற தன்மையிலிருப்பது ஒன்றும் புதினமில்லை.

**தமிழ்ப் படங்களில் பெண் நடிகைகள் கவர்ச்சியாக வரும்போது ஆண் பார்வையாளர்கள் விசிலடிப்பார்கள். பார்வையாளர்களாக வந்திருக்கும் பெண்களுக்கு இதெல்லாம் ஒரு விதமான அபாய அறிவிப்பு. கதாநாயகி கதாநாயகனுக்காக உயிர் விடுவதும் கஷ்டப்படுவதும் எல்லாரையும் கண்ணீர் விடச்செய்யும் கட்டமாகப் படைக்கப்படுகிறது. லண்டனில் எத்தனையோ பெண்கள் தங்கள் சுகத்தைப் பார்க்காமல் வேலைக்குப் போய் குழந்தைகளைப் பராமரித்து கணவனைப் பார்த்து தேய்ந்து போகும் போது எத்தனை கணவர்கள் குழந்தைகளுக்கு நப்கின் மாற்றுகின்றார்கள்? சமைத்து வைக்கின்றார்கள்? மேற்கு நாடுகளில் வாழும் தமிழ்த் தாய்கள் இந்தப் படங்களையெல்லாம் பார்த்துத் தங்களைத் திரையில் கண்ட கதாநாயகிகளாக நினைத்து நடக்க முயலலாம். ஆனால் அவர்கள் பெண் குழந்தைகள் குழம்பிப் போக மாட்டார்களா? அவர்கள் வாழும் வீட்டுச் சூழ்நிலையும் வெளியில் காணும் சூழ்நிலையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டது. அந்தச் சூழ்நிலையில் வாழும் குழந்தைகள் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்க உதவி செய்வது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும்.**

**புலம்பெயர்ந்து வாழும் தமிழராகிய நாங்கள் எத்தனையோ விதத்தில் துர்பாக்கியவாதிகள். புலம்பெயர்ந்து வாழும் இந்தியர், பாகிஸ்தானியர் போல் நாங்கள் அடிக்கடி எங்கள் குழந்தைகளை எங்கள் தாய் நாட்டுக்குக் கூட்டிக் கொண்டு போய் இதுதான் எனது கலாச்சாரம் என்று சொல்லமுடியாது.**

**மேற்கு நாடுகளில் ஆடம்பரமாகக் கொண்டாடப்படும் 'பேர்த்டே பாட்டி'கள் மேற்கு கலாச்சாரத்தின் பிரதிபலிப்பு. கோயில் அர்ச்சனைகள் தத்துவரீதியாக விளக்கம் சொல்ல முடியாத நடவடிக்கைகள். 'அப்பாவின் சுகவீனத்துக்கு ஏனம்மா ஐயருக்கு காசு கொடுக்கிறாய்? அப்பா வீட்டில் மருந்தெடுக்க மறுக்கும் போது ஆண்டவன் உதவி செய்வானா? ' என்று தமிழ்க் குழந்தை கேட்டால் ஒரு தமிழ்த் தாய் என்ன மறுமொழி சொல்ல முடியும். சினிமா வீடியோ பார்ப்பது எங்கள் வீட்டு வேலைகளில் முக்கிய பங்கினை கொள்ளையடிக்கிறது. இவ்வளவு நேரம் செலவழித்து ஏன் எங்கள் தமிழ்ப் பெண்கள் குப்பைக் கருத்துகளைப் பார்த்து ரசிக்கின்றார்கள்? இது எதிர்காலத்துக்கு தேவையா?**

✘



படிப்பகம்

www.padippakam.com

# தீவிரப் பெண்ணியம்

நவீன பெண்ணியச் சிந்தனையின்
முக்கிய போக்குகள், அப் போக்குகளில் ஒன்றாகிய
**தீவிரப் பெண்ணியம் (Radical Femenism)**
மேலைச் சூழலில் தோன்றிய
வரலாறு, மற்றும் அதன் முக்கிய
கூறுகள், தமிழ்ச் சூழலில்
பெண்ணியச் சிந்தனைகளின்
முக்கியத்துவம் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுவது
இக் கட்டுரையின் நோக்கம்.

– விஜி –

-I-

## நவீன பெண்ணியச் சிந்தனையின் முக்கிய போக்குகள்

மார்க்சியம், அமைப்பியல் என்பனவற்றைப் போலவே பெண்ணியமும் ஒரு ஒற்றை அர்த்தமுடைய, ஒற்றைப் பரிமாணமுள்ள கருத்தாக்கமல்ல என்கிற நிலையை 1980 களில் எட்டியது. பெண்ணியம் என்பது ஒரு அரசியல் வகையினம் மட்டுமல்ல, ஒரு தத்துவார்த்தக் கருத்தாக்கமும் கூட. இதன் முக்கிய போக்குகளைச் சொல்லுமுன் இரண்டு எச்சரிக்கைகள் முக்கியம். ஒன்றுக்குப் பின் இன்னொன்று என்று காலரீதியான பாகுபாட்டிற்குள்ளோ, இது உயர்ந்தது– அது தாழ்ந்தது– என்கிற தர வரிசைக்குள்ளோ இவற்றை அடக்குவது என் நோக்கமல்ல. ஏனெனில் ஒரே சமயத்தில் இரு வேறு போக்குகள் சமமாக நிலவுவதைக் காணமுடியும். அதேபோல பெண்ணிய நோக்கிலான ஒரு கட்டுரை அல்லது விமர்சனத்தைக் கறாராக ஏதேனும் ஒரு போக்குக்குள் மட்டும் அடக்கிவிடுவதிலுள்ள சிரமத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எல்லாவிதமான கல்வி ரீதியான (Academic Categorisation) வகைப்படுத்தும் முயற்சிகளுக்கும் வருகிற சிரமம்தான் இது.

அரசியல் ரீதியாகப் பெண்ணியப் போக்குகளை மூன்றாகப் பிரிக்கலாம். அவை,

### அ. முதலாளியப் பெண்ணியம் (Liberal Feminism)

முதலாளிய அமைப்பிற்குள் சட்ட, உரிமை ரீதிகளிலான வேறுபாடுகளைக் களைந்து எல்லா மட்டங்களிலும் பெண்களுக்குச் சம உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் நிற்பது.

எ.டு.– ஆண்களைப் போல பெண்களுக்கும் வாக்குரிமைகளுக்காகப் போராடியது, சம கூலிக்காகப் போராடுவது முதலியன.

### ஆ. மார்க்சியப் பெண்ணியம் (Marxist Feminism)

பெண் மீதான ஒடுக்குமுறையை முதலாளியக் கட்டமைப்பின் ஓரங்கமாகவும், இதர சிறுபான்மையினர் மற்றும் பாட்டாளி வர்க்கங்கள் மீதான ஒடுக்குமுறையுடன் இணைத்துப் பார்க்கும் போக்கு. ஏற்றத் தாழ்வான சமூக அமைப்பு ஒழிவதென்பதைப் பெண் விடுதலைக்கான நிபந்தனையாகப் பார்த்தல்.

### இ. தீவிரப் பெண்ணியம் (Radical Feminism)

பெண்களை, ஆண்களிடமிருந்து முற்றிலும் வேறுபடுத்தி ஒதுக்கி பெண்களின் தனித்துவமான



படிப்பகம்

[illegible] தேவைகள் ஆகியவற்றுக்கான, ஆண்களை முற்றிலும் சார்ந்திராத பெண்கள் மட்டுமேயுள்ள சமூகங்களை உருவாக்க வேண்டும் என்கிற போக்கினர்.

## ஈ. பின்-அமைப்பியல் பெண்ணியம் (Post Structural Feminism)

பெண் மீதான ஒடுக்குமுறையைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் பெண் என்றும் ஒரு குழுவை ஆண் என்னும் இன்னொரு குழுவிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் நமது கலாச்சாரத்தின் மொழி ஒழுங்கை ஆய்வு செய்தாக வேண்டும் எனச் சொல்லும் போக்கு.

தத்துவார்த்தப் அடிப்படையில் பெண்ணியப் போக்குகளை சாராம்சப் போக்கு (Essentialist) எனவும் எதிர் சாராம்சப் போக்கு (Anti Essentialist) எனவும் இரண்டாகப் பிரிக்கின்றனர்.

### 1. சாராம்சப் பெண்ணியம்

அரசியல் ரீதியான வகைப்பாட்டில் சொன்ன முதல் மூன்று போக்குகளையும் (முதலாளியம், மார்க்சியம், தீவிரப் பெண்ணியம்) சாராம்சப் போக்குக்குள் அடக்கிவிடலாம். ஆண்கள் பெண்கள் என்கிற இரு குழுக்களுக்கு இடையில் சாராம்சமாகச் சில வேறுபாடுகள் உண்டு. இவை உயிரியல் ரீதியானவை. அன்பு, ஒழுங்கு, இரக்கம், மனித நேயம் போன்றவை பெண்மையின் இயற்கையான சாராம்சப் பண்புகள். தந்தை வழிக் கலாச்சாரத்தில் இம் மேன்மையான பெண்மைப் பண்புகள் மறைக்கப்பட்டு ஒடுக்கப் பட்டுள்ளன. மாறாக கடுமையான, இரக்கமற்ற, போட்டியின் அடிப்படையிலான தனிநபர்வாதப் போக்கு மிகுந்த ஆண்மைப் பண்புகளே சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இவ்வாறு ஒடுக்கப் பட்ட பெண்மைப் பண்புகள் என்பன சாராம்சமான மனிதாயப் பண்புகள் என்பதால் அவற்றை உயிர்ப்பித்து, கொண்டாடி, செயற்படுத்தலே சமூகத்தை முற்போக்கான திசையில் நகர்த்து வதற்கான வழி என்கின்றனர் சாராம்சப் பெண்ணியலாளர்கள். வர்க்கச் சமூகமும், லாப நோக்கமும் எவ்வாறு பெண்மைக் கூறுகளை ஒடுக்குகின்றன என்கிற அம்சங்களுக்கு மாக்சிசப் பெண்ணியலாளரும், கருக் குடும்பம் (Nuclear Family) கட்டாய ஆணாதிக்கம், வேறினப் புணர்ச்சி (Hetro Sexuality) முதலியவற்றின் மூலம் பெண்மைக் கூறுகள் மௌனமாக்கப் படுவதற்கு தீவிரப் பெண்ணியலாளர்களும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். முதலாளியப் பெண்ணியலாளரைப் பொறுத்த மட்டில் புரட்சிகரமான மாற்றத்தைக் காட்டிலும் பெண்களுக்கான சம உரிமைகளை வலியுறுத்தும் வகையில் சீர்திருத்தப் போக்கினராக உள்ளனர்.

### 2. எதிர் சாராம்சப் பெண்ணியம்

தந்தை வழிக் கலாச்சாரத்தில் பெண்ணின் தன்நிலை (Female Subjectivity) கட்டமைக்கப்படுகிற தன்மையை எதிர் சாராம்சப் போக்கு ஆய்வு செய்கிறது. தன்னிலை என்பது சமூகத்தால் கட்டமைக்கப்படுகிறது. இயற்கை யான சாராம்சமான பெண்மைக் கூறுகள் என எதுவும் இருக்க முடியாது.

பெண்மை என்பது தந்தை வழிச் சமூகத்திற்கு வெளியே உள்ள ஒன்றல்ல. தந்தை வழிச் சமூகத்தில் பிரிக்க முடியாத கூறு அது. பால் அடையாளம் (Sex Identify) மற்றும் தந்தைவழிச் சமூக ஒழுங்கு ஆகியவற்றுக்கிடையேயான தொடர்பிற்கு எதிர் சாராம்சப் பெண்ணியம் முக்கியத்துவம் அளிக்கிறது. பாலுமை (Sexuality) யும் தன்னிலையும் ஒரே சமயத்தில் கட்டமைக்கப் படுகின்றன. ஆண்கள் செய்கின்ற எந்த வேலையையும் பெண்கள் செய்துவிட முடியும் என்பதை வரலாறு நீருபித்து வருகின்றது. ஓட்டப் பந்தயம் முதலியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான இடைவெளி என்பது கூட வரலாற்று ரீதியாக ஏற்பட்டதுதான் என்பதை அந்த இடைவெளி படிப்படியாக குறைந்து வருவதிலிருந்து காண்கின்றோம். தாய்மை போன்ற கருத்தாக்கங்களுக்கு விஞ்ஞான ரீதியாக எந்த ஆதாரமும் கிடையாது. எனவே சமூக ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட ஆண்மை, பெண்மை, தாய்மை போன்ற வரையறைகளை யெல்லாம் தாண்டிச் செல்வதுதான் நமது நோக்கமென்றால் மனித உருவாக்கச் செயல்பாட்டிலேயே இந்தக் கட்டமைப்பு எவ்வாறு பதிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஆய்வு செய்தாக வேண்டும். இந்த ஆய்வு என்பது உளப்பகுப்பாய்வையும் உள்ளடக்கியதேயாகும். லக்கானின் தந்தைவழி மொழி ஒழுங்கில் தன்னிலை

www.padippakam.com

கட்டமைக்கப்படுதல் பற்றிய சிந்தனை இதற்குப் பயன்படும்.

லக்கானின் தந்தை வழிக் குறியியல் ஒழுங்கு (Symbolic Order) கற்பித ஒழுங்கு (Imaginary) என்கிற கருத்தாக்கங்களைப் பயன்படுத்தி ஜூலியா கிருஸ்தவா என்ற பெண்ணிய, அமைப்பியல் சிந்தனையாளர் பெண்ணியப் போக்குகளை விளக்குகிறார். அவர் கூற்றுப்படி தந்தைவழிக் குறியியல் ஒழுங்கை எட்டுவதில் சம உரிமை கோருவதே முதலாளியப் பெண்ணியம் ஆகும். சம உரிமைப் போராட்டங்கள், சமூகத்தில் பெண்மைக்கான தனிப் பாத்திரங்கள் உருவாக்கப் படுதலை (அப்பா ஆபீசுக்குப் போகிறவர், அம்மா சமைப்பவர்) விமர்சித்தல் ஆகியவற்றை இப் போக்கு நடைமுறையாகக் கொள்ளும். பெண்மை கட்டமைக்கப்படுவதில் முதலாளியப் பொருளாதார நிறுவனங்களின் பொருளாதார நலன்களைச் சுட்டிக் காட்டி அவற்றை எதிர்க்கும் செயல்பாடுகளை மார்க்சியப் பெண்ணியம் மேற்கொள்ளும். தந்தைவழிச் சமூகத்தின் குறியியல் ஒழுங்கை முற்றாக நிராகரித்து பெண்மையின் சிறப்புகளை தூக்கிப் பிடிப்பது தீவிர பெண்ணியம். குடும்பம், திருமணம், ஆண்துணை போன்ற கோட்பாடுகளை எதிர்த்து விமர்சனம் செய்வதும் பெண் சமூகம், பெண்துணை, ஓரினப் புணர்ச்சி (Lespramism) ஆகியவற்றை உயர்த்திப் பிடிப்பதும் தீவிரப் பெண்ணியத்தின் செயற்பாடுகள். ஆண், பெண் என்கிற வேறுபாட்டை இயங்காவியல் அனுகலாய் நிராகரிக்கும் பின் அமைப்பியல் பெண்ணியம் இந்த நோக்கிலான சமூகச் செயற்பாடுகளை விமர்சிப்பதோடு பாலியல் சாரா செயற்பாடுகளை ஊக்குவிக்கும்.

- II -

## மேலை நாடுகளில் தீவிரப் பெண்ணியச் சிந்தனைகளின் சுருக்கமான வரலாறு

பழைய பெண் விடுதலை இயக்கங்கள் 1920 களில் மரணத்தைத் தழுவின எனலாம். வாக்குரிமை, கல்வி உரிமை போன்ற சட்டரீதியான சம உரிமைகள் பலவற்றை இவ் வியக்கங்கள் பெற்றுத் தந்தனவென் றாலும் முழுமையான ஆண்-பெண் சமத்துவத்திற்கான கலாச்சாரத் தடைகளைப் பொறுத்த மட்டில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்பட்டுவிடவில்லை. அடுத்த முப்பதாண்டுகளுக்குப் பெண்ணிய இயக்கங்கள் உறைந்த நிலையில் இருந்தன எனலாம். விடு, குடும்பம், ஆண்துணை, தாய்மை என்கின்ற கருத்தாக்கங்கள் வலிமையுடன் கோலோச்சின. கருத்துக்களை உருவாக்கும், நிர்ணயிக்கும் மட்டங்களிலான உயர் பதவிகளைப் போரிலிருந்து திரும்பிய ஆண்கள் நிரப்பிக் கொண்டு பெண்களை கீழ்நிலை வேலைகளிலும், அடுப்பிற்குள்ளும் தள்ளினர். பெண்களின் திருமண வயது குறைந்தது.

தொழில் வளர்ச்சியின் விளைவாக நகர்ப் புறங்கள் அதிகமாயின. கருக்குடும்பங்களின் எண்ணிக்கையும் அதிகமாயின. குடும்ப வருமானத் தேவையை பூர்த்தி செய்யவேண்டி அதிகளவில் பெண்கள் வேலைக்குப் போயினர். எனினும் ஏற்கனவே சொன்னபடி கீழான வேலைகள், குறைந்த சம்பளம், நகர்ப்புற வாழ்க்கைப் பிரச்சனைகள், குடும்ப வேலைகளை பெண்களே கவனிக்க வேண்டிய நிலை ஆகியவற்றின் விளைவாக காதல், தாய்மை போன்ற இளமைக்கால கனவுகளின் உண்மைத் தோற்றங்களைப் புரிந்து பெண்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர். அதே சமயத்தில் அறுபதுகளின் பிற்பகுதியில் மாணவர், தொழிலாளர், சிவில் உரிமை எழுச்சிகள் உலகத்தை குலுக்கின. ஐரோப்பாவில் மாணவர் எழுச்சியாகவும், அமெரிக்காவில் போர் எதிர்ப்பு இயக்கமாகவும் இவை வெளிப்பட்டன. மாணவர், இளைஞர் ஆகியோரின் பங்கு இதில் முக்கியமானதாய் இருந்தது. இந்தச் செயற்பாடுகள் சமூக இயக்கங்களில் மட்டுமன்றி சிந்தனைத் துறைகளிலும் வெளிப்பட்டன.

இச் சூழலில்தான் இங்கிலாந்தில் (1966) ஜூலியட் மிட்செல்லின் பெண்- நீண்ட புரட்சி (Women The longer revolution) என்ற கட்டுரை வெளியாகிறது. பெண் விடுதலை தொடர்பான மார்க்சியக் கோட்பாடுகளை அது விமர்சித்தது. உயிரியல் அடிப்படையில் குழந்தை வளர்ப்பு போன்ற பணிகளுக்கே பெண் பொருத்தமானவள் என்கிற கருத்தும் மறுக்கப்பட்டது. உலகெங்கிலுமுள்ள எல்லாச் சமூகங்களிலும் பெண்விடுதலை என்பது (i) உற்பத்தி (ii) சமூகமயமாதல் (iii) மறு உற்பத்தி (iv) பாலமை என்கின்ற நான்கு சமூக



படிப்பகம்

www.padippakam.com

கட்டமைப்புகளைப் பொறுத்துள்ளது. இந்த நான்கும் மாறும் போது பெண் விடுதலை அடையமுடியும் என்கிறார் மிட்செல். ஏதேனும் ஒன்றில் மட்டும் மாற்றங்களை ஏற்படுத்தி விடுதலையைச் சாத்தியப் படுத்த முடியாது. எடுத்துக்காட்டாக மக்கள் சீனத்தில் மற்ற மூன்று கட்டமைப்புக்களையும் அப்படியே வைத்துக் கொண்டு உற்பத்தியில் மட்டும் பெண்களுக்கு அதிக பங்களிப்பு அளிக்கப்பட்டது. எனினும் அங்கே பெண் விடுதலை சாத்தியமாகவில்லை.

ஒரு புரட்சிகர பெண்ணிய இயக்கமானது இந்த நான்கு கட்டுமானங்களின் சமச்சீரற்ற வளர்ச்சியை ஆய்வு செய்வதோடு இவற்றில் பலவீனமான கண்ணியின் மீது தாக்குதலைத் தொடுக்க வேண்டும். மேலைச் சூழலில் முதல் மூன்று கட்டுமானங்களிலும் மாற்றங்கள் வேண்டும் என்கின்ற உணர்வு பெண்கள் மத்தியில் உருவாகவில்லை. ஆனால் பாலியலில் ஆதிக்கக் கருத்தியல்கள் ஆட்டம் காணத் தொடங்கியுள்ளன. திருமணம் என்கிற பழைய நிறுவனம் துருப்பிடிக்கத் தொடங்கிவிட்டது. எனவே பால்மை தொடர்பான கட்டுமானமே தாக்கப்பட வேண்டிய பலவீனமான கண்ணி என்கிறார் ஜூலியட் மிட்செல்.

இந்த அறிக்கை உலகெங்கிலும் பெண்ணிய லாளர்கள் மத்தியில் விரிவாய் விவாதிக்கப்பட்டது. 1966 இல் அமெரிக்காவில் பெட்டி பிரைடன் பெண்களுக்கான தேசிய அமைப்பை (National organisation of Women) உருவாக்கினார். 1967 இல் புதிய அரசியலுக்கான சிக்காக்கோ மாநாடு கூட்டப்பட்டபோது சிக்காக்கோவிலும், நியூயோர்க்கிலும் பெண்ணியக் குழுக்கள் உருவாயின. மர்வின் டிக்சன் பேன்றோர் பெண்கள் வட்டம் (Women circle) உருவாவதற்குக் காரணமாயினர். பெண்களுக்கான தீவிர செயற்பாட்டு திட்டத்திற்கான அமைப்பும் (WRAP) உருவாக்கப்பட்டது. பெண் விடுதலை இயக்கக்குரல் (Voice of the Women Liberation Movement) என்கிற பத்திரிகையும் தொடங்கப்பட்டது. ஓராண்டுக்குள் 'நியூயோர்க் தீவிரப் பெண்கள்' என்கின்ற குழு உருவாக்கப்பட்டது. 'எல்லாப் பழைய தத்துவங்கள், இலக்கியங்கள், கருத்தியல்கள் ஆகியவையும் ஆணாதிக்கத் தன்மையின் விளைபொருட்கள் என்பதால் நாங்கள் அவற்றை விமர்சிக்கிறோம்' என அவர்கள் அறிவித்தனர்.

1968 இல் பெண்கள் மாநாடு ஒன்று சிக்காக்கோவில் கூட்டப்பட்டது. மாநாட்டிலிருந்து திரும்பிய அலாமித் ஃபைர்ஸ்டோன் சிகப்புக் காலுறைகள் என்கின்ற அமைப்பைத் தோற்றுவித்தனர். இந்த தொடக்ககால குழுக்கள் யாவும் ஆண்கள் இல்லாத சுயேச்சையான பெண்கள் அமைப்பு என்கிற கருத்தாக்கத்தை வலியுறுத்தினர். ஆண்களின் முற்போக்கு அமைப்புகளிலிருந்தே அதிகாரத்துவ அமைப்பு முறைகள் ஒருவரை மட்டும் தலைவராகப் பிரித்து அதிகாரங்களை வழங்குதல் போன்ற மரபுவழிப்பட்ட அம்சங்களை ஒழித்தன. சிறுசிறு குழுக்களாக இருந்த பெண்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டுதலை களப்பணியாக மேற்கொண்டனர்.

பெண்கள் மத்தியில் ஏற்பட்ட இவ் விழிப்பு உணர்ச்சியின் விளைவாக 1968 இறுதியில் ஜனநாயகச் சமூகத்திற்கான மாணவர்கள் (Student for a Democratic Society) என்கிற ஆண்கள் அதிக அளவில் பங்கு பெற்றிருந்த புகழ்பெற்ற முற்போக்கு அமைப்பு பெண்விடுதலை குறித்து ஒரு அறிக்கையை முன்வைத்தது. இயக்கங்களில் ஆண் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்ட இவ்வறிக்கை பெண் விடுதலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. கூலியைக் குறைப்பதற்கான ரிசர்வ் பட்டாளமாக பெண்கள் ஆக்கப்பட்டிருப்பதுதான் பெண்ணடிமைத் தனத்திற்குக் காரணம் எனக் கூறிய இவ்வறிக்கை, பெண்கள் தங்களது விடுதலையை மட்டுமே மையமாக வைத்துப் போராடக் கூடாது எனவும் பெண்ணுரிமைக்கான போராட்டங்களைப் பெண்கள்தான் மேற்கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தை எதிர்க்க வேண்டும் எனவும் கூறியது.

பெண்கள் மத்தியில் இவ்வறிக்கை கடுமையாக விமர்சிக்கப்பட்டது. பெவர்லி ஜோன்ஸ், ஜுடித் பிரவுன் ஆகியோரால் எழுதப்பட்டு 1968/69 களில் பரவலாக விநியோகிக்கப்பட்ட ஓர் அறிக்கை பெண்களுக்கான, தனித்துவமான சுயேச்சையான இயக்கங்களின் தேவையை மீண்டும் வலியுறுத்தியது. ரோக்சானே டன்பார் (1969) திருமணம் என்கிற நிறுவனம் குறித்து மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கை கண்டுகொள்ளாததைக் கண்டித்ததோடு பெண்ணடிமைத்தனத்திற்கும் குடும்ப



படிப்பகம்

www.padippakam.com

அமைப்பிற்குமுள்ள உறவையும் சுட்டிக் காட்டினார். பெண்களுக்கான தனி வரலாறும் கலாச்சாரமும் இருந்து வந்துள்ளது என்பதையும் தன்பாரின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

1969 இல் நியூயார்க்கில் சிகப்புக் காலுறைகள் ஒரு அறிக்கை வெளியிட்டது. முதலாளியம் ஒழிந்தால் பெண்ணடிமைத்தனமும் அழிந்து விடும் என்கிற மார்க்சிசக் கருத்தை அது மறுத்தது. ஆதிக்கங்களிலேயே மிகவும் பழமையானதும் அடிப்படையானதும் ஆணாதிக்கம்தான். இனவெறி, முதலாளியம், ஏகாதிபத்தியம் என்பதெல்லாம் ஆணாதிக்கத்தின் நீட்சிதான் எனக் குறிப்பிட்ட இவ்வறிக்கை சகோதரித்துவம் (Sisterhood) என்கிற முக்கியமான கருத்தை முன்வைத்தது. அதைத் தொடர்ந்து நியூயார்க்கில் 'தீவிரப் பெண்ணியலாளர்கள்' என்கிற குழு உருவாக்கப்பட்டது. இது ஒரு முக்கியமான செயற்திட்டத்தை முன்வைத்தது. பெண் விடுதலை அணிகளை (Brigades) உருவாக்கியது. தொடக்கத்தில் பெண்கள் சிறு குழுக்களாக இணைந்து பெண் விடுதலையின் அரசியலை அறிதல், தீவிரப் பெண்ணியச் சிந்தனைகளை இதர போக்குகளுடன் ஒப்பிட்டு விவாதித்தல், அடிப்படைக் கொள்கைகளைப் புரிந்து கொள்ளுதல் போன்ற களப்பணிகளை முதல் மூன்று மாதகாலத்திற்கு மேற்கொள்ளுதல் எனவும் பின்னர் இவர்கள் தங்களுக்குள் விவாதித்து ஏதேனும் ஒரு பொருத்தமான பெண்ணியச் சிந்தனையாளரின் பெயரைத் தங்கள் குழுவிற்கு தெரிவு செய்து அவரைப் பற்றிய ஒரு சிறிய மலிவான அறிமுக வெளியீட்டைக் கொண்டுவருவது எனவும், ஆறு மாதங்களுக்குப்பின் ஒவ்வொரு உறுப்பினரும் நியூயோர்க் தீவிரப் பெண்ணியர் குழு அறிக்கையில் கையொப்பமிட்டு முதற் பிரதியைத் தேர்ந்தெடுத்து குழுவிற்கு அனுப்புவது எனவும் திட்டம் உருவாக்கப்பட்டது.

1970 இல் தீவிரப் பெண்ணியச் சிந்தனையின் சிறந்த தொகுப்பாய்வு என கருதப்படும் சுலாமித் ஃபைரஸ்டோனின் 'பாலியலின் இயங்கியல் (The Dialetic of Sex: The cause for feminist revolution) என்கிற நூல் வெளியாகியது. ஏங்கெல்சின் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்கிற முக்கிய நூலில் வெளிப்படும் மானிடவியல் கருத்துக்களில் சிலவற்றில் மாற்றம் கோரிய இந்நூல் உயிரியல் ரீதியான காரணங்களின் அடிப்படையில்தான் பெண் வரலாறு பூராவும் ஒடுக்கப்பட்டாள் என்பதை வலியுறுத்தியது. பொருளாதார வர்க்கங்களை ஒழிப்பதற்கு ஆகக் கீழான வர்க்கம் புரட்சிசெய்து தற்காலிக சர்வாதிகாரத்தை நிறுவி உற்பத்தி சக்திகளைக் கைப்பற்ற வேண்டும் என்பது போலவே பாலியல் வர்க்கங்களை ஒழிப்பதற்கு ஆகக் கீழாக உள்ள வர்க்கமாகிய பெண்கள் கிளர்ந்தெழுந்து மறுஉற்பத்தியைக் கைப்பற்ற வேண்டும். தங்களது சொந்த உடல்கள் மீது தங்களின் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். கருக்குடும்பத்தில் நிலவும் பெண்கள் மீதான உளவியல், பொருளாதாரம், அரசியல் ஒடுக்குமுறையானது காதல் என்பதை சாத்தியமற்றதாக்குகிறது.

இறுதியாகப் பெண்ணியப் புரட்சிக்கான நான்கு அவசியச் செயற்பாடுகளை ஃபைர்ஸ்டோன் பட்டியலிட்டார். அவை,

1. பெண்கள் மறு உற்பத்திக் கொடுமைகளிலிருந்து விடுதலை செய்து கொள்ளுதல் (சோதனைக் குழாய் கரு உற்பத்தி மூலம் கருச் சுமையிலிருந்து விடுதலை, குழந்தை வளர்ப்பை சமூக வேலையாக மாற்றுதல் போன்றவை மூலமாக)

2. பெண்கள் குழந்தைகள் ஆகியோருக்கு பொருளாதாரம் உட்படச் சகல அம்சங்களிலும் முழுமையான தன்னுரிமை பெறுதல்.

3. சமூக அமைப்பிற்குள் பெண்களும் குழந்தைகளும் எல்லா அம்சங்களிலும் அங்கமாதல்.

4. பெண்கள் / குழந்தைகளுக்கு முழுமையான பாலியல் சுதந்திரம்.

உற்பத்தி, மறுஉற்பத்தி, சமூகமயமாதல், பால்மை ஆகிய நான்கு துறைகளில் விடுதலை என்கிற ஜீலியட் மிட்செல்லின் கோட்பாட்டோடு இச் செயற்பாடுகள் இணைவது குறிப்பிடத்தக்கது.

மார்க்ரெட் பென்ஸ்டனின் பெண் விடுதலைக்கான அரசியற் பொருளாதாரம் 1971 இல் வெளிவந்தது. பண்ட உற்பத்தி மலிந்துள்ள ஒரு சமூகத்தில் குடும்பத்திற்குள்ளான பெண்ணின் பொருளியல் உற்பத்தி என்பது பணப் பொருளாதாரத்தோடு நேரடித் தொடர்பில்லாததால்



படிப்பகம்

www.padippakam.com

*ஆண்களே முதல் ஏகாதிபத்தியவாதிகள். அவர்கள் காலனியப்படுத்தியது பெண்களின் உடலைத்தான். உலகெங்கிலுமுள்ள எல்லா கலாச்சாரங்களுக்குள்ளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என தனித்தனிக் கலாச்சாரங்கள் உள்ளன. ஆதிக்கம் செலுத்தும் ஆண் கலாச்சாரத்தோடு பெண்கள் தங்களை அடையாளம் காண்பது பெரிய அவலம்!*

கேவலமாய்க் கருதப்படுவதைச் சுட்டிக்காட்டிய பென்ஸ்டன் கருக்குடும்ப அமைப்புக்களை ஒழித்தலையும், உணவு உற்பத்தி போன்ற வீட்டுப் பணிகளை தொழில் மயமாக்கிச் சமூக மயமாக்குதல் என்கிற தீர்வுகளையும் முன்வைத்தார்.

1971 இல் டெட்ராய்டில் வெளியிடப்பட்ட நான்காவது உலக அறிக்கை பெண்ணியம் எனும் பூதம் ஆணாதிக்கத்திலுள்ள முற்போக்கு இயக்கங்களை அச்சுறுத்தியுள்ளதைச் சுட்டிக் காட்டியது. ஆண்களே முதல் ஏகாதிபத்திய வாதிகள் ; அவர்கள் காலனியப்படுத்தியது பெண்களின் உடலைத்தான். உலகெங்கிலுமுள்ள எல்லா கலாச்சாரங்களுக்குள்ளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என தனித்தனிக் கலாச்சாரங்கள் உள்ளன. ஆதிக்கம் செலுத்தும் 'ஆண் கலாச்சாரத்தோடு பெண்கள் தங்களை அடையாளம் காண்பது பெரிய அவலம் என்பன போன்ற கருத்துக்களை இது முன்வைத்தது.

1970 களில் ஒரு முழுமையான வெளிப்பாடாக தீவிர ஓரினப்புணர்ச்சியாளர்களைக் குறிப்பிடலாம். (Radical Lespiances) லெஸ்பியன்கள் படிப்படியாகத் தீவிர பெண்ணிய இயக்கங்களோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டனர். நெடலாவிலிருந்து வெளிவரும் The Ladder என்கிற இதழில் வந்த 'பெண்கள் கண்டுபிடித்த பெண்கள்' என்கிற கட்டுரையை லெஸ்பியனிச அறிக்கையாகக் கொள்ளலாம். ஆணாதிக்கம் நிரம்பிய ஒரு பாலாதிக்கச் சமூகத்தில்தான் ஓரினப்புணர்ச்சியாளர்கள் உருவாக முடியும். ஆணுக்கு அடிமையான பாலியல் ரீதியாய் வரையறுக்கப்பட்ட செயல்பாடுகள் பெண்ணை கீழ்மை நிலைக்குத் தள்ளுகிறது. பாலியல் ரீதியாய் பாத்திரங்கள் (roles) வரையறுக்கப் படாத ஒரு சமூகத்தில், ஒரு பால் இன்னொரு பாலை ஒடுக்காத ஒரு சமூகத்தில் ஓரினப்புணர்ச்சி, மாற்றினப் புணர்ச்சி போன்ற வகையினங்கள் அர்த்தமற்றுப் போய்விடும் என இவ்வறிக்கை கூறியது. பெண்மை என்கிற கருத்தியலில் தூலமான மறுப்பாகவே லெஸ்பியனிசத்தைக் கருத வேண்டும். மரபு வழிப்பட்ட பார்வையில் ஓரினப் பெண் புணர்ச்சி யாளர்கள் என்போர் மையநீரோட்டத்திலிருந்து விலகிய குறையுடையவர்களாகக் கருதப் படுவர். ஆனால் தீவிரப் பெண்ணியலாளர்கள் மையநீரோட்ட மதிப்பீடுகளையே குறை யுடையதாகக் கருதுவதால், லெஸ்பியன்களைப் புரிந்து ஏற்றுக் கொள்கின்றனர். பெண்கள் பற்றிய சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள பல மதிப்பீடு களையும், சமூகக் கடமைகளையும் சவாலுக்கு அழைக்கும் லெஸ்பியனிசத்தை எதிர்க் கலாச்சார வெளிப்பாடாக வரவேற்பது தவிர்க்க இயலாது.

*பெண்மை என்கிற கருத்தியலில் தூலமான மறுப்பாகவே லெஸ்பியனிசத்தைக் கருத வேண்டும். மரபு வழிப்பட்ட பார்வையில் ஓரினப் பெண் புணர்ச்சியாளர்கள் என்போர் மையநீரோட்டத்திலிருந்து விலகிய குறையுடையவர்களாகக் கருதப்படுவர். ஆனால் தீவிரப் பெண்ணியலாளர்கள் மையநீரோட்ட மதிப்பீடுகளையே குறையுடையதாகக் கருதுவதால், லெஸ்பியன்களைப் புரிந்து ஏற்றுக் கொள்கின்றனர். பெண்கள் பற்றிய சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள பல மதிப்பீடுகளையும், சமூகக் கடமைகளையும் சவாலுக்கு அழைக்கும் லெஸ்பியனிசத்தை எதிர்க் கலாச்சார வெளிப்பாடாக வரவேற்பது தவிர்க்க இயலாது.*



படிப்பகம்

www.padippakam.com

- III -

## தமிழ்ச் சூழலில் பெண்ணியம்

பார்ப்பனீய இந்துமத சாதியப் பிடியில் இறுக்கமாய் சிக்குண்டு கிடக்கும் நாடு நம்முடையது. நவீன தொழில் வளர்ச்சிகள் இறக்குமதி செய்யப்பட்டாலும் சனநாயகமாகாத சிவில் சமூக அமைப்பைக் கொண்ட சூழல் நம்முடையது. இளமை மணம், விதவைக் கொடுமை, உடன்கட்டை ஏறுதல் – இவற்றிற்கு எதிராக முழங்கிய முதல்கட்ட உயர் சாதிச் சீர்திருத்தவாதிகளாகிய ராஜாராம், மோகன்ராய் போன்றோர் இந்து மதத்தையும் உயர்சாதிப் பெண்களின் கற்பொழுக்கங்களையும் காப்பதற்காகவே தாங்கள் இந்த சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதாக வாக்குமூலம் அளித்துள்ளனர். பெண்கல்விக்காக முயன்ற முதற்கட்ட சீர்திருத்தவாதிகள் மாறிவரும் சமூக சூழலுக்கேற்ற நல்ல இந்து மனைவியரை உருவாக்குவதற்காகவே தாம் பெண்கல்வி முயற்சிகளை மேற்கொள்வதாய் கூறியுள்ளனர். சாதிக் கொடுமை, இந்துமதம், கற்பொழுக்கம் போன்றவற்றுடன் இணைத்து பெண்ணடிமைத்தனத்தை முதன்முதலில் எதிர்த்தவர்கள் ஜோதிபா பூலேயும், பெரியாரும்தான். தனது கடைசி நூலில் பாலியல்சாரா மொழி நடையை பூலே பயன்படுத்தினார். இன்று முன்வைக்கப்படும் தீவிரப் பெண்ணியக் கருத்துக்கள் பலவற்றை பெரியாரிடம் காணமுடியும்.

சமீபத்தில் பாண்டிச்சேரியில் 'நிறப்பிரிகை' என்ற அரசியல் தத்துவச் சிற்றிதழ் (ஜூலை 7,91) நடத்திய பெண்ணியம் தொடர்பான கூட்டு விவாதம் தமிழ்ச் சூழலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்கு முன்வைக்கப்பட்ட கருத்துக்களில் நான்கு விதமான போக்குகள் காணப்பட்டாலும், விவாதத்தில் முன்வைக்கப்பட்ட தீவிர பெண்ணியக் கருத்துக்கள் பல சிந்தனையாளர்களின் முகச்சுழிப்புக்கு ஆளாகியுள்ளன. இடதுசாரி எனப்படுவோரிலிருந்து காந்தியவாதிகள், மனிதாபிமானிகள் என பலருக்குள்ளும் துயில் கொள்ளும் சனாதனப் பார்வைகளையும், ஒழுக்க வாதத்தையும் இவ் விவாதம் அடையாளம் காட்டிவிட்டது.

தமிழ்நாட்டிலுள்ள பெண்ணியக் குழுக்களும், பெண்ணிய இதழ்களும் படிப்படியாகத் தீவிரப் பெண்ணிய, பின்–அமைப்பியல் பெண்ணியக் கருத்துக்களை விவாதத்திற்குள் கொண்டுவரத் தொடங்கியுள்ளது வரவேற்கத்தக்கது. அண்மையில் திருச்சியில் (டிசம்பர் 92) நடைபெற்ற பெண்ணியக் குழுக்களின் இருநாள் மகாநாட்டில் ஆண்களுக்கு முற்றிலும் அனுமதி மறுக்கப்பட்டதோடு பெண்கள் சுயேச்சையாக தங்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக்கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது தமிழ்ப் பெண்ணிய வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல் எனலாம்

அடிப்படையான சனநாயக உரிமைகள் கூட நிறைவேற்றப்படாத இந்து பாசிசம் மறுஉற்பத்தி பெற்றுள்ள நமது சூழலில் பெண்ணியம் ஒரு வலிமையான மாற்றுக் கலாச்சாரத்தை முன்வைக்க முடியும். எந்த ஒரு குறிப்பிட்ட போக்கையும் முன்நிலைப்படுத்துவது என்றில்லாமல் சமஉரிமைப் போராட்டங்கள், பாலியல் வேறுபாடுகளை எதிர்த்தல், பாலியல்சாரா மொழிநடையைப் பயன்படுத்துதல், தாய்மை, கற்பு போன்ற கருத்தாக்கங்களையும் ஒழுக்க மதிப்பீடுகளையும் குழிதோண்டிப் புதைத்தல், குடும்பம் என்கின்ற ஒடுக்குமுறை நிறுவனத்தை தோலுரித்தல், பரஸ்பர நம்பிக்கையிலான திருமணம், பதிவு செய்தல் என்பன போன்ற நிறுவனமாய் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்ட ஆண்–பெண் இணைவுகளை ஊக்குவித்தல், லெஸ்பியனிசம் உட்பட தீவிரப் பெண்ணியக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தல், சாதிக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களோடு இணைந்து நிற்றல், ஆக ஒடுக்கப்பட்ட பிரிவினரான தீண்டத்தகாதவர்களோடு ஐக்கிய மாதல், பார்ப்பனியத்தை எதிர்த்தல், ஆண்களை முழுமையாய் விலக்கிய பெண்ணியக் குழுக்களைக் கட்டுதல் எனப் பல்வேறு பணிகள் தமிழ்ப் பெண்களை எதிர்நோக்கியுள்ளன.

இறுதியாக –

பெரியார்–பூலே வழியில் இங்கு பெண்ணியக் கருத்துக்களை முன்வைப்பதுதான் இந்தியச் சூழலில் நம் கடமையே தவிர முதற்கட்ட உயர்சாதிச் சீர்திருத்தங்களைப் பின்பற்றுவதல்ல என்கிற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

–விஜி

நன்றி : களம் புதிது (பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் -1994)



படிப்பகம்

www.padippakam.com

பாமதி
(கனடா)

# பரமபிதாக்களே!

எங்கள் பரமபிதாக்களே
ஆயிரமாயிரம் ஆண்டுகள்
விதைக்கப்பட்ட தளத்தில்
உங்கள் இருப்புக்கள்
பாதுகாக்கப்பட்டுள்ளது

காலங்காலமாய் வாழ்வு காக்கும்
அடிமை ஜென்மங்கள் நாம்
கைவிலங்கிடப்படாத கைதிச்சருகுகள்

எங்கள் மௌனத்தில்
எங்கள் உழைப்பில்
எங்கள் உதிரத்தில்
எங்கள் இரக்கத்தில்
விதைக்கப்பட்ட தளத்தில்
உங்கள் வாழ்வு
பத்திரமடைந்துள்ளது.

நாளை போரா[illegible]ம்
பல்லாயிரக்கணக்கான எம்மவரின்
கூடனில்
நிமிர்ந்த உங்கள் தளத்தில்
ஒரு படிக்கல்லையாவது நாம் நிச்சயம்
நகர்த்துவோம்

ஒரு விடியலில்
இத்தளம் மண்ணில் புதையுண்டு போகும்
அன்றைய நாளில்
பாதங்கள் மண்ணில் கால் ஊன்றும்

பரம பிதாக்களே!
அதன் பின்
எமது கருத்துக்களுக்கு அர்த்தங்கள்
உங்களுக்கு புரியும்!



படிப்பகம்

www.padippakam.com

ஒரு குடும்பத்தில் நிலவும் அன்பின் விளைவால் உருவாவது ஒரு குழந்தை. அந்தக் குழந்தை பால் வித்தியாசமின்றி அன்புடனும் ஆதரவுடனும் வளர்க்கப்பட வேண்டும். தாயும் தந்தையும் பெற்றெடுப்பதே ஒரு குழந்தை. அக் குழந்தை அவர்கள் இருவருடைய அன்பையும் பெறவேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தனக்கே உரித்தான தனித்தன்மையுடனே வளருகின்றது. பெற்றோர்கள் தமது குழந்தைகளின் வளர்ப்புக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பொறுப்பானவர்கள். அவர்கள் தமக்கு வேறெந்த வேலையிருந்தாலும் பிள்ளைகளின் தேவைகளுக்கே முன்னிடம் கொடுக்க வேண்டும். வழக்கமாக பிள்ளைகளை வளர்க்கும் முழுப்பொறுப்பும் தாய் மேலேயே சுமத்தப்படுகின்றது. தந்தையர்கள் குடும்ப வருமானத்திற்காக தொழில் செய்பவர்கள் என்ற காரணத்தினால் இப் பொறுப்புக்களில் இருந்து விலகிக் கொள்கின்றனர். இது தாய்மார்களின் வேலைப்பழுவை அதிகரிப்பதினால், அவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தம் பிள்ளைகளையும் பாதிக்கின்றது. சில பிள்ளைகளை வளர்ப்பது கஷ்டம். இப்படியான பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் அதீத கவனம் செலுத்த வேண்டும். பெற்றோர் அன்புடன் பழகுவதுடன் தமது குழந்தைகளையும் அன்புடன் பழக பயிற்றுவிக்க வேண்டும். பெற்றோரிடம் ஏற்படும் மனக்கசப்புகளுக்கு ஒருவர் மற்றவரைக் குற்றஞ் சாட்டுவதுண்டு. இது பிள்ளைகளையும் மனோரீதியாக பாதிக்கின்றது. பெற்றோர் சந்தோசமில்லாது இருக்கும் பொழுது குழந்தைகளுக்கு அலேர்ஜி, தோல் வருத்தங்கள், காது வருத்தங்கள், வாந்திபேதி ஆகிய நோய்கள் ஏற்படுகின்றன. பெற்றோர் பிள்ளைகளின் முன்பாக தமது பிரச்சனைகளை விவாதிப்பதையும், சண்டையிடுவதையும் தவிர்க்க வேண்டும். சந்தோசமான ஆரோக்கியமான பிள்ளைகளை உருவாக்குவதற்கு ஒழுங்கும் நிம்மதியும் நிறைந்த குடும்பப் பின்னணி அவசியமாகும். சாதாரண வாழ்க்கை முறையே நிம்மதியான குடும்ப வாழ்க்கைக்கு உதவும் முதற்படியாகும்.

# வளரும் குழந்தை

**– மல்லிகா –**

## உணவும் உடையும்

குழந்தைக்கு சத்துடைய சாதாரணமான உணவு வகைகள் ஒழுங்காகக் கொடுக்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கும் விருப்பு வெறுப்புக்கள் உண்டு. அவர்களுடைய உணவு சுவையானதாகவும். அதேசமயம் சத்துடையதாகவும் இருக்க வேண்டும். உணவிலுள்ள ஊட்டச்சத்துக்கள் சேதமடையாத வாறு உணவுகள் சமைக்கப்பட வேண்டும். கடைகளில் விற்கப்படும் போத்தல்களில் அடைக்கப்பட்ட உணவுகளைக் கொடுப்பதைக் காட்டிலும் வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளையே குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். விட்டமின், கல்சியம், இரும்புச்சத்து மற்றும் ஊட்டச்சத்துக்கள் ஆகியவை பிள்ளைகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. ஊட்டச்சக்தி ஆண், பெண் ஆகிய இரு குழந்தைகளுக்குமே அவசியமாகும். ஆண் குழந்தைகளுக்கு அதிக ஊட்டச்சக்தி கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்து தவறானதாகும். விட்டமின் ஏ, கீரை, மீன், முட்டை, கரட் ஆகியவற்றில் அடங்கியுள்ளது.

பிள்ளைகள் கழுவப்பட்ட பச்சை மரக்கறிகள் சாப்பிடப் பழக்கப்படுத்த வேண்டும். சமைப்பதனால் அதிகமான விட்டமின்கள் அழிக்கப்படுகின்றன. கரட், காய்கறிகள், கிழங்கு வகைகளில் விட்டமின்கள் தோலுக்கு அருகிலேயே இருக்கின்றன. உருளைக் கிழங்கு அவித்து பின் தோலுரிக்கப்பட வேண்டும். பச்சையாகத் தோலுரிப்பதனால் விட்டமின்கள் அகற்றப்படுகின்றன. பாலும் முட்டையும் வளரும் குழந்தைக்கு அத்தியாவசியமான உணவு வகைகளாகும். ஒரு குழந்தை பால் குடிக்க மறுத்தால் அதை வீணே எறிய வேண்டாம். அந்தப் பாலுடன் சிறிது சீனி அல்லது தேனையும் முட்டையையும் கலந்து 'புடிங்' செய்து பிள்ளைகளுக்கு கொடுக்கலாம். பிள்ளை அதை விரும்பிச் சாப்பிடுவதுடன் ஊட்டச் சத்துக்களையும் பெறும். குழந்தைகளுக்கும் மாற்றங்கள் அவசியம். உணவு வகைகளில் மாற்றங்கள் செய்வதும் அவசியமாகும். நீங்கள் தயாரிக்கும் அதே



படிப்பகம்

உணவுப் பதார்த்தங்களுடன் மேலதிக செலவில்லாமலே இதைச் செய்யலாம். பிசைஞ்ச சோறு அல்லது உருளைக் கிழங்கு கொண்டு ஒரு பறவையை பீட்றூட் சொண்டு, கரட்டில் செய்த சிறகு ஆகியவற்றைக் கொண்டு செய்து தட்டில் ஒரு பக்கத்தில் வைத்து பிள்ளைகளுக்கு விளையாட்டுக் காட்டியே உணவைக் கொடுக்க லாம். உணவு நூடுல்ஸ் ஆக இருந்தால் அதனால் ஒரு கூடு செய்து அதில் பறவையை வைக்கலாம். இப்படியாக விளையாட்டுக்களால் பிள்ளைக்கு உணவை ஊட்ட முடியும். பெரியவர்க்குச் செய்த உறைப்பான கறிவகைகளை கழுவி பிள்ளை களுக்கு கொடுப்பது தவறாகும். பிள்ளைகளுக்கென தனியான கறிகளையே சமைக்க வேண்டும். பிள்ளை களும் பெற்றோரும் ஒரே நேரத்தில் உணவருந்து வது நல்லது. பிள்ளைகள் தாமாகவே உணவருந்த சிறுபராயத்திலிருந்தே கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். சிறுபிள்ளைகள் தாமாகவே உணவருந்த உதவ வேண்டும். விட்டமின் சி அதிகமாக பழங்களில் உள்ளதால் குழந்தைகள் பழங்களைச் சாப்பிடும் பழக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சிறு குழந்தைகளுக்கு இறுக்கமில்லாத, சௌகரியமான உடைகளே உடுத்தப்பட வேண்டும். குழந்தைகளுக்கு தேவையற்ற அதிக உடைகளை உடுத்துவது கூடாது குழந்தைப் பருவம் சிறிது காலமே இருப்பது. அவர்களுக்குப் பெரியவர்களின் உடைகளை உடுப்பது தவிர்க்கப்பட வேண்டும். சிறிய பெண் குழந்தைகளுக்கு பெரிய பெண்கள் உடுக்கும் பஞ்சாபி போன்ற உடைகளையும், ஆண் குழந்தைகளுக்கு பெரியவர்கள் போன்ற கோட்சூட் உடைகளையும் விசேட தினங்களில் உடுத்துவதும் வேடிக்கையானது. இது அவர்கள் வினோத உடைப் போட்டிக்குத் தயாராக இருப்பது போன்ற காட்சியையே கொடுக்கின்றது. குழந்தைகள் வளர்ந்து இந்த உடைகளை உடுக்கலாம். குழந்தைகளாக இருக்கும் பொழுது குழந்தை களுக்கான உடைகளை உடுப்பதே அழகாக இருக்கும். குழந்தைகளுக்கான விசேட தினங்கள் குழந்தைகள் சந்தோசப்படும் விதத்திலேயே ஒழுங்கு செய்யப்பட வேண்டும். அதை விடுத்து பெரியவர்கள் கொண்டாடும் தினங்களாக இவற்றை மாற்றுவது கூடாது.

## தேகப்பியாசமும் விளையாட்டும்

தேகப்பியாசமும் விளையாட்டும் குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகும். பிள்ளைகள் தமது வயதிற்கேற்ப விளையாட அனுமதிக்கப்பட வேண்டும். அதீத பாதுகாப்புக் கருதி பிள்ளைகளை விளையாட்டுகளில் ஈடுபடாது தடுத்தல் கூடாது. சிறு குழந்தைகள் நிலத்தில் விழுந்தாலும், நிலத்தில் அடித்து குழந்தையின் மனதில் பழிவாங்குதல் அல்லது குற்றத்தை மற்றவர்களின் மேல் போடுதல் போன்ற மனப்பான்மையை வளர்த்தல் கூடாது. சிறு குழந்தைகளுக்கு சூரியஒளியிலிருந்து கிடைக்கும் விட்டமின் டி அவசியமாகும். குழந்தைகளை காலையில் பத்து மணிக்கு முன் வெளியே எடுத்துச் செல்வது அவசியமாகும். சிறு குழந்தைகளின் பின் கழுத்தில் சூரிய வெளிச்சம் படுவது தவிர்க்கப்பட வேண்டும். தொப்பி அணிவதன் மூலம் இதைத் தவிர்க்கலாம்.

## படுக்கை

குழந்தைகளின் படுக்கைகள் துப்பரவாக வும் சூடாகவும் சௌகரியமாகவும் இருக்க வேண்டும். குழந்தைகள் மென்மையான பொம்மைகளை தூங்கும் பொழுது வைத்திருக்கப் பழக்கப் படுத்தவேண்டும். இது குழந்தைகள் தனிமையாக இருப்பதில் ஏற்படும் பயத்தைத் தவிர்க்கும். சில குழந்தைகள் படுக்கையில் சிறுநீர் கழிப்பதுண்டு. இதற்காக குழந்தைகள் தண்டிக்கப்படக் கூடாது. குழந்தைகளின் மனோநிலைகள் பாதிக்கப் படுவதினாலேயே இது நிகழ்கின்றது. பிள்ளைகளின் முன்பு மற்றவர்களுக்கு இதுபற்றிக் கூறுதல் கூடாது. படுக்கைக்குச் செல்லுமுன் தண்ணீர்ப் பதார்த்தங்கள் கொடுப்பதைத் தவிர்க்கவும். ஒரு குழந்தை அதிக கவனத்தை ஈர்க்க விரும்பினாலோ அல்லது பயத்தினாலேயோ இது ஏற்படுகின்றது. இதற்கான காரணத்தைக் கண்டறிய முயற்சிக்கப்பட வேண்டும். பெரும்பாலும் இப் பழக்கம் தானாகவே நின்று விடும். இது நீண்ட காலத்திற்குத் தொடர்ந்தால் வைத்தியரின் ஆலோசனை கேட்பது அவசியமாகும்.

www.padippakam.com

## நோய்கள்

ஒவ்வொரு குழந்தைக்கும் அவசியமான நோய்த்தடுப்பூசிகள் போடுவது அவசியமாகும். குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல் சில தொற்று நோய்களுக்கு முன்னறிவிப்பாக இருக்கலாம். இப்படியான வேளைகளில் குழந்தைகளை நன்றாகக் கவனிக்க வேண்டும். இத் தொற்று நோய்கள் நன்றாகக் கவனிக்கபடாவிட்டால் பின்பு நியுமோனியா வருத்தங்கள் வரக்கூடும்.

## படிப்பும் பயிற்சியும்

பெற்றோரே குழந்தைகளின் முதலாவது ஆசிரியர்களாவர். சிறு பிராயத்திலேயே நல்வழி காட்டப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டால் பிற்காலத்தில் நல்ல பிரஜைகளாவார்கள். சிறு குழந்தைகளின் குழப்படிகளுக்கு ஆத்திரப்படுதல் கூடாது. குழந்தையை ஒழுங்காக்குவதற்கும் தண்டனை கொடுப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை அறிய வேண்டும். குழந்தையை அடித்து திருத்த முற்படக் கூடாது. 'கெட்ட பிள்ளைகள்' என்ற வார்த்தையைப் பாவிக்கக் கூடாது. கெட்ட பிள்ளைகள் என்று யாருமே கிடையாது. எல்லாப் பிள்ளைகளுமே நல்ல பிள்ளைகள் தான். அவர்கள் நல்ல பிள்ளைகளாகவும் கெட்ட பிள்ளைகளாகவும் வளருவது அவர்களின் வளர்ப்பிலேயே உள்ளது. குழந்தைகள் செய்வது சிறு தவறுகளேயாகும். அதற்காக அவர்களை குற்றவாளிகள் போல விசாரணை செய்வதும் தண்டிப்பதும் கூடாது. ஒரு குழந்தையைக் கொண்டு மற்றக் குழந்தையைத் தண்டிக்க பாவிக்க கூடாது. ஒரு விடயம் பற்றி நீங்கள் ஒரு தீர்மானம் எடுத்தால் அதைப் பிள்ளைக்கு விளங்கப்படுத்த வேண்டும். அதைப் பின்பு கடைப்பிடிக்க வேண்டும். 'இல்லை' என்றால் அது இல்லையாகவே இருக்க வேண்டும். 'ஆம்' என்று சொல்லி பின்பு ஏமாற்றக் கூடாது. அடிப்பதனால் பிள்ளைகள் முரண்டு பிடிப்பவர்களாகவும் ஆத்திரமடைபவர்களாகவும் உருவாகுகின்றார்கள். தாய் குழந்தையை திருத்த விரும்பினால் தானே அதைச் செய்ய வேண்டும். தந்தையிடம் அதை ஒப்புவிப்பது, குழந்தை தாயினால் ஒன்றும் செய்ய முடியாது என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. ஆண் குழந்தைகள் பெண் குழந்தைகளை துன்புறுத்தலைக் குறைக்க வேண்டும். ஆண் குழந்தைகள் தனது சகோதரிகளை தந்தையின் முன்னுதாரணத்துடன் அடித்துத் துன்புறுத்த முற்படுகின்றனர். பெண் குழந்தைகள் தமது சுயகௌரவத்தையும் இழக்கின்றனர். ஆண்ஒடுக்குமுறை இங்கேயே ஆரம்பமாகின்றது.

உங்கள் பிள்ளைகளுடன் உங்கள் தாய் மொழியிலேயே கதைத்துப்பழகுங்கள். உங்களுக்கு பரிட்சயமற்ற மொழியில் குழந்தையுடன் பேசிப் பழகாதீர்கள். மற்றைய மொழிகளை அவர்கள் பள்ளிக் கூடத்தில் படிக்கலாம். பிள்ளைகள் அவர்களுடைய வீட்டுப் பாடங்களில் உதவி யளிக்க வேண்டும். அவர்களுடைய பள்ளிப் பாடங்கள் மற்றைய வேலைக்குப் போகுமுன் (வெளியே போதல், கடைக்கு அழைத்து செல்லல்) முடிக்கப்பட வேண்டும். ஒரு பிள்ளை குறைந்த புள்ளிகள் பெற்றதற்காகவோ அல்லது பரிட்சையில் தேறாததற்காகவோ தண்டிக்கப் படக் கூடாது. பிள்ளைக்கு ஆறுதல் கூறுவதுடன் அடுத்த தடவை திறம்படச் செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டும். ஒரு பிள்ளையின் (IQ -Intelegence quotient) அறிவு பன்னிரண்டு வயது வரைக்கும் வளர்ச்சியடையும். ஆரம்ப வயதுகளில் படிப்பில் அக்கறை காட்டாத பிள்ளைகள் பன்னிரண்டு வயதிற்குப் பின் திறமையைக் காட்டவும் கூடும். ஆகையினால் ஆரம்பத்தில் மந்தமாக இருக்கும் பிள்ளையை இகழுவது கூடாது. படிப்பில் மந்தமாக இருக்கும் பிள்ளையை படிப்பில் கெட்டித்தனமாக இருக்கும் பிள்ளையுடன் ஒப்பிடக் கூடாது. அதிகமான பெற்றோர் ஆண் பிள்ளைகளே பெண் பிள்ளைகளைக் காட்டிலும் கெட்டிக்காரர் என எதிர்பார்க்கின்றனர். இது பெண் பிள்ளைகளை மனோரீதியாகப் பாதிக்கின்றது. பிள்ளைகள் டெலிவிசன் மற்றும் சினிமா பார்ப்பதில் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். பிள்ளைகளை மனோரீதியாகப் பாதிக்கும் படங்கள் தவிர்க்கப்படவேண்டும். பிள்ளைகள் உபயோகமாக ஓய்வு நேரங்களைக் கழிக்க பழக்கப்படுத்த

www.padippakam.com

வேண்டும். பாட்டுப் பாடுதல், படம் வரைதல் போன்றவற்றில் ஓய்வு நேரங்களைக் கழிக்க ஊக்கமளிக்க வேண்டும்.

## விளையாட்டுச் சாமான்கள்

பிள்ளையின் வயதிற்கமையவே விளையாட்டுச் சாமான்கள் கொடுக்கப்பட வேண்டும். சிறு குழந்தைகளுக்கு சிறு துண்டுகளாக உடையக்கூடிய விளையாட்டுச் சாமான்கள் கொடுக்கக் கூடாது. இவற்றை அவர்கள் வாயில் போடும் ஆபத்து உள்ளது. துவக்கு போன்ற விளையாட்டு ஆயுதங்கள் குழந்தைகளுக்குக் கொடுப்பதும் தவிர்க்கப்பட வேண்டும். அவர்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து விளையாடக்கூடிய விளையாட்டுச் சாமான்களையே அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். பெற்றோர் பெண் குழந்தைகளுக்கு சட்டி பானைகளையும் ஆண்பிள்ளைகளுக்கு மோட்டார்கார் போன்ற விளையாட்டுச் சாமான்களையும் சிறு வயதிலேயே வாங்கிக் கொடுத்து பெண் பிள்ளைகளை குசினி வேலைக்குப் பழக்கப்படுத்துவதும் உண்டு. இது தவறாகும்!

## வாசிப்பதால் மனிதன் முழுமையாகின்றான்

சிறு வயதிலிருந்தே பிள்ளைகளுக்கு வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்களின் வயதிற்கேற்ப புத்தகங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் வாசிப்பதில் அக்கறை கொள்வதற்காக, புத்தகங்களை பிறந்த நாள், மற்றும் விசேட தினங்களில் பரிசாகக் கொடுக்கலாம். கதைகள் கேட்பதில் பிள்ளைகளுக்கு அதிகம் ஆர்வம். ஆனால் பெரியவர்கள் பிள்ளைகளுக்கு பயம் தரும் பேய்க் கதைகள் மற்றும் பிள்ளைபிடிகாரர் பற்றிய கதைகளைச் சொல்லி அவர்களை மிரட்டுதல் கூடாது. இது அவர்களுக்கு பயத்தைக் கொடுப்பதுடன் அவர்கள் தனிமையாக இருக்கவும் பயப்படுவார்கள். இது அவர்களை பயந்தசுபாவம் உள்ளவர்களாக்கும்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் தேவைகளை அறிந்து அதற்கேற்ப அவர்களுக்கு உதவினால் அவர்கள் அக் குடும்பத்தின் அன்பான உறுப்பினர்களாக வளர்வார்கள். ஒவ்வொரு குழந்தையும் அவர்களுடைய தனித்துவத் தன்மைக்காகப் போற்றப்பட வேண்டும். பெற்றோராக இருப்பதும் குழந்தையாக இருப்பதும் இதனாலேயே பூரணம் பெறுகிறது.

மல்லிகா
17.01.96

---

பெண்களின் இன்றைய நிலைமையை எடுத்து விளக்கும், பெண்களின் பிரச்சினைகளைப் பற்றி பகுத்தறிவுக் கோட்பாட்டுடன் போராடும் பெண்களால் பெண்களுக்காக மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படும் இலங்கைப் பெண்களின் உரிமையான ஒரு சஞ்சிகை

**பெண்ணின் குரல்**

விபரங்களுக்கு,
பெண்ணின் குரல்
17 ஏ, பார்க் அவனியு
கொழும்பு -5
இலங்கை

பெண்களது சமுதாய முன்னேற்றத்திற்கு மட்டுமில்லாமல், அறிவுபூர்வமான ஒரு சஞ்சிகையையும் சமூக விஞ்ஞான நோக்கில் வெளியிட வேண்டும் என்ற இரட்டை நோக்கில் வெளிவரும் சஞ்சிகை

**நிவேதினி**

தொடர்புகட்கு,
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
17, பார்க் அவனியு
கொழும்பு -5
இலங்கை
582798



படிப்பகம்

www.padippakam.com

சற்றுமுன் லலிதா கூறிவிட்டுப் போனதை ஜானகியால் நம்பவும் முடியவில்லை ; நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

'இவருக்கு இந்த வயதில் புத்தி ஏன் இப்படிப் போகிறது.' என்ற யோசனையில் ஆழ்ந்து போகிறாள் ஜானகி.

'நான் அவருக்கு என்ன குறை வைத்தேன். நான் உண்பது உறங்குவது கூட அவர் விருப்பப்படி தானே... அவர் சொன்னதால் செய்து கொண்டிருந்த வேலையை விட்டு, அவர் விரும்பியவர்களிடம் பழகி, விரும்பாதவர்களிடம் இருந்து ஒதுங்கி... அவர் விரும்பிய போது சிரித்து, அவர் அழைத்த இடத்துக்கெல்லாம் நாய்க் குட்டியாய் ஓடி ... அப்பப்பா! எல்லாமே அவர் இஷ்டப்படிதானே நடக்கிறது. அதில் என்ன குறை கண்டு இப்படி வேறொருத்தியை நாட வேண்டிய தேவை ஏன் வந்தது? '

எனத் தொடர்ந்த சிந்தனையால் கண்களில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்து உதட்டில் உப்புக் கரிக்கிறது.

பெற்றோர் பார்த்து வைத்த திருமணம் தான் என்றாலும் இந்தப் பதினைந்து வருடமாக அவர் சுகம்தான் தன்சுகமென அவருக்காகவே மெழுகாய் உருகிக் கொண்டு ஒருத்தி இருக்கும்போது, இந்த நாற்பது வயதில் ஏன் இப்படி மாறிப்போனார் என ஜானகிக்குப் புரியவேயில்லை.

'நாற்பது வயதில் நாயக்குணம் என்பார்களே அதுதான் இப்படியோ...! என்னவென்றாலும் பதினைந்து வயதில் மகளொருத்தி வளர்ந்து நிற்கும்போது மகளையொத்த ஒருத்தியுடன் சுற்றுகிறாராமே... அப்படி என்ன அவசியம் வந்தது... மனைவியைப் பற்றி யோசிக்காவிட்டாலும் மகளைப் பற்றியாவது சிந்தித்திருக்கலாமே. ஏன் படித்தும் பண்பில்லாமல் இப்படி நடந்து கொள்கிறார்? '

எனத் தன்னைத் தானே கேள்விகளால் துளைத்துக் கொண்டபோது தலைவலி தான் மிஞ்சுகிறது. பக்கத்து வீட்டு லலிதா சொல்லிவிட்டுப் போனது மீண்டும் மீண்டும் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

''ஜானு, நான் சொல்றேன்னு தப்பா நெனைக்காத. உன்னைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். உன் புருஷன் விரும்பாததால நீ வெளில வர்றது கூட ரொம்பக் குறைவுன்னு எனக்குத் தெரியும்...''



# பச்சோந்திகள்

- ரோஷினி முத்தையா
(நாவலப்பிட்டி)



படிப்பகம்

என பலமான பீடிகை போட்டபோது ஜானகி புன்னகையால் இடைமறிக்கிறாள்.

"அதுக்கென்ன வலி, நமக்காக எல்லாம் செய்து தர அவங்க தயாரா இருக்கிறப்ப நாமளும் அவங்க விருப்பப்படி நடந்துக்குறது முக்கியமில்லா... அவங்க விரும்பாதத ஏன் செய்யனும்... அதுதான் நான் அவர் கூட்டிட்டுப் போனா தவிர வெளில வர்றதே இல்ல" என வெகுளியாய் சிரிக்கும் ஜானகியைச் சில நொடிகள் மௌனமாய் வெறிக்கிறாள் லலிதா.

"இந்தப் பெண் ஏன் இத்தனை வெகுளியாய் இருக்கிறாள்... கணவனைப் பற்றித் தெரிந்ததும் உடைந்து போய் விடுவாளே" என்றெல்லாம் மனதுள் ஓடிய எண்ணங்களால் சற்றுத் தடுமாறிய லலிதா, ஜானகியைப் பார்க்காமலேயே ஆரம்பிக்கிறாள்.

"ஜானு... நீ அவர ரொம்ப நம்பிட்டேன்னு நெனைக்கிறேன்... அவரு இப்பெல்லாம் அடிக்கடி ரோஸின்ற அவரோட செக்ரட்டியோட சுத்துறதா ரொம்பப் பேரு சொல்றாங்க... நானும் அத நம்பல... ஆனா ரெண்டொரு நாளா நானே அவங்கள கண்டுட்டேன்... உன்கிட்ட சொல்லாம இருக்கிறது சரியில்லன்னு தானேன்னு..." என முடிக்கும் வார்த்தைகளைத் தேடி லலிதா தடுமாற... ஜானகி 'விதிர்விதிர்த்து' நிமிர்கிறாள்.

கனவில் கூட நினைக்காத ஒன்றையல்லவா லலிதா கூறிவிட்டாள். மகள் நித்யா யாரையாவது காதலிக்கிறாள் என்று சொல்லியிருந்தால் கூட நம்பியிருக்கலாம். இந்தக் காலத்துப் பிள்ளைகள் அப்படித்தான் என சமாதானப்பட்டிருப்பாள். ஆனால்... ஆனால், லலிதா சொன்ன விடயத்தை ஜானகியால் ஜீரணிக்கவே முடியவில்லை.

ஆனால் லலிதா ஏன் பொய் சொல்லப்போகிறாள்...?

லலிதா வீணே ஊர் வம்பு பேசுகிறவளுமில்லையே... அவள் சொல்வது உண்மைதான். அவரது நடவடிக்கைகளில் கடந்த இரண்டு மாதங்களாக இலேசான மாற்றங்கள் தெரிகிறதுதான். நேரந்தவறி வீட்டுக்கு வருவது, சிலநாட்கள் வழமைக்கு மீறி குடித்திருப்பது, கொடுக்கும் சம்பளப்பணம் குறைந்திருப்பது, சனி ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் கூட விடு தங்காது ஓடுவது என ஒவ்வொரு மாற்றத்திற்கும் காரணம் இதுதானா? எனத் தனக்குள்ளேயே கேட்டுக் கொள்கிறாள் ஜானகி.

அவர் எது செய்தாலும் சரியாயிருக்கும் எனத் தலையாட்டிப் பொம்மையாய்த் தான் இருந்தது தவறோ என ஜானகி தவித்துப் போகிறாள்.

லலிதா எப்போது எழுந்து போனாள் என்பது கூடத் தெரியாது சிலையாகிப் போயிருந்த ஜானகிக்குப் பகலுணவிற்கான சமையல் இன்னும் பாக்கியிருப்பது நினைவில் வந்து உறுத்த, தளர்வாய் எழுந்து நடக்கிறாள் ஜானகி.

கைகள் வேலையிலிருந்தாலும் மனம் அந்த விடயத்திலேயே சிக்கி சுழன்று கொண்டிருக்கிறது.

"இந்தச் சமையலறையே கதியென நான் கிடந்தது தான் தவறோ... ஒரு மனைவிக்குரிய இயல்பான உரிமைகளைக் கூடப் பெற்றுக் கொள்ளாதது என் முட்டாள்தனம் தானே... அவர் நேரந்தவறி வரும்போதும், குடித்து விட்டு வரும் போதும் சம்பளப்பணம் குறையும் போதும் காரணம் கேட்டிருக்க வேண்டும். ஊமைச்சாமியாய் இருந்து விட்டேனே. ஐயய்யோ! இப்போது என்ன செய்யப் போகின்றேன். அம்மா, அண்ணனிடம் சொல்வதா. அவர்கள் மட்டும் என்ன செய்துவிட முடியும். சே! இவ்வளவு காலத்துக்குப் பிறகு கேவலமில்லையா" என பலவாறாக குழப்பிய எண்ணங்களால் கையைச் சுட்டுக் கொண்டது தான் மிச்சமாயிற்று.

நித்யாவும் பாடசாலையிலிருந்து வந்தாயிற்று. தலைவலி என அவளைச் சமாளித்து விட்டாலும் கணவனை நினைக்க பயம் வயிற்றைக் கலக்குகிறது. எதைக் கேட்டாலும் முன்கோபம் வந்து விடுமே என தான் தாழ்ந்து தாழ்ந்து போனதுதான் அவரது தான்தோன்றித் தனத்துக்கு காரணமோ...

இன்று என்னவானாலும் சரி, இதைப்பற்றி அவரிடம் கேட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்துடன் வலிய தைரியத்தை வரவழைத்துக் கொள்கிறாள் ஜானகி.

நேரம் இரவு எட்டைத் தொட்டபோதுதான் இலேசான விஸ்கி வாசனையுடன் களைப்பாய் வந்த கணவரைப் பார்க்க உள்ளூரக் கோபம் பொங்கினாலும், இதுவரை அவரை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசாது இன்று பேசப்போவதை நினைக்கப் பயமாகவும் இருக்கிறது. இயல்பாக இருக்க முயற்சித்துத் தோற்றுப் போகிறாள் ஜானகி. எப்படியானாலும் இது ஆறப் போடக்கூடிய விடயமல்ல என்பது உறைக்கிறது. வெகு சிரமப்பட்டுத் தன்னை அடக்கியபடி அவர் உடைமாற்ற முகம் கழுவ உதவி செய்து உணவையும் பரிமாறுகிறாள் ஜானகி.

இரவு உணவு முடிந்து டீ.வி யின் முன் அமர்ந்திருந்த கணவனிடம் வந்து மெதுவாக ஆரம்பிக்கிறாள் ஜானகி. 'ஏன் இப்பொல்லாம் லேட்டாகவே வாறீங்க..? ' என ஒரு கேள்வி கேட்பதற்குள்ளேயே வியர்த்துப் போகிறது அவளுக்கு. என்ன புதுசா கேள்விக் கணை! என்பது போலப் புருவம் சுருக்கி அவளை ஏறிடுகிறார் சிவநாதன். அந்த பார்வையைச் சந்திக்க முடியாது தடுமாறி எச்சில் விழுங்கியபடி எழுந்த ஜானகி வெகு பிரயத்தனப்பட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொள்கிறாள். இன்னும் கேள்விகள் கேட்கப் போனால் நிச்சயமாகக் கத்துவார் என்பது புரிய, அடுத்த வீட்டுக்குச் சத்தம் கேட்கக் கூடாதே என டேப்ரெக்கார்டரைச் சத்தமாக வைத்து விட்டு நிமிர்கிறாள் ஜானகி.

'நாற்பது வயதில் இன்னொரு காதல் வரும்... கவனம், புன்னகைவரை போ, புடவை தொடாதே...' என வைரமுத்து தன் வசீகரக் குரலில் மொழிந்து கொண்டிருக்கிறார். 'திக்' கென்று தூக்கிவாரிப்போட உடனே அதனை நிறுத்திவிட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்கிறாள் ஜானகி. இது எதிலுமே கவனம் இல்லாது டீ.வி யிலேயே ஆழ்ந்திருக்கும் சிவநாதனைப் பார்க்க கோபம் வருகிறது. 'ஊரைச் சுத்திட்டு வந்து கல்லுப்பிள்ளையாரப் போல இருக்க நாந்தான் தடுமாறிக்கிட்டிருக்கேன்' என்பதை நினைக்கவே கண்ணீர் மளுக்கென எட்டிப்பார்க்கிறது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்கிறாள் ஜானகி. டீ. வி இன்னும் அலறிக் கொண்டேயிருக்க சிவநாதன் எழுந்து போயிருந்தார். அவர் எப்போதுமே அப்படித்தான் ; எல்லாவற்றையும் ஜானகிதான் பொறுப்பாய் பார்த்து பார்த்துச் செய்ய வேண்டுமென எதிர்பார்ப்பாரேயொழிய சிறு துரும்பைக் கூட நகர்த்தியதில்லை.

டீ.வியை அணைத்து மூடிவிட்டு மெதுவாகப் படுக்கையறையினுள் நுழைகிறாள் ஜானகி. கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருக்கும் சிவநாதனை நெருங்கி 'நா ஒன்னு கேட்டா கோவிச்சிக்காதீங்க...' எனத் தயக்கமாய் வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்து,
'நீங்க ஒரு சின்னப் பொண்ணோட திரியிறதா எல்லாரும் சொல்றாங்க....' என மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்டே விடுகிறாள்.
சில நொடிகள் மௌனமாய் அவளை வெறித்த சிவநாதன் அவளது கேள்விக்குச் சிறிதும் சம்பந்தமற்ற மற்றொரு கேள்வியையே பதிலாக்குகிறார்.
'எத்தனை நாளா இந்த வேவு பார்க்கிற வேல.... ம்... பொம்பளையா லட்சணமா வீட்டுக்குள்ள வேலயப் பார்க்காம என் பின்னால மோப்பம் பிடிக்கிறியோ? '
என சிவநாதன் குரலெடுத்துக் கத்திய போது இயல்பான பயத்தால் ஜானகி அரண்டு போகிறாள். கூடவே கோபமும் சுருசுரு வெனக் கிளம்புகிறது.
தான் கேட்டவுடனேயே, 'ஐயையோ! யாரு சொன்னது. இந்த வயசுல எனக்கு இன்னொரு பொண்ணோட தொடர்பு தேவையா... யாரோ உன்ன நல்லாக் குழப்பியிருக்காங்க' என மறுத்துக் கூறுவார் என்றிருந்த கொஞ்ச நஞ்ச நப்பாசையும் அவர் பேச்சில் கரைந்து போய் அவரது அலட்சியப் பேச்சு வயிற்றில் புளியைக் கரைக்கிறது.

www.padippakam.com

'செய்யிறதையும் செய்துட்டு கல்லுளி மங்கனாட்டம் திமிரப்பாரு' என்ற ஆத்திரம் வார்த்தையாய்ச் வெடிக்கிறது.
'உங்களுக்கு நா என்ன குறை வச்சேன்னு இப்படி பண்றீங்க. வளர்ந்த பொண்ணையும் வீட்ல வைச்சுக்கிட்டு அவள் வயசுல ஒருத்தியோட சுத்துகிறதுக்கு உங்களுக்கு வெக்கமாயில்ல. நீங்க மனுசன்தானே...' என விம்மலோடு திணறியவளை ஓங்கி அறைகிறார் சிவநாதன்.
'நா மனுசன் தாண்டி. அதுலயும் ஆம்பள. நான் என்னென்ன பண்ணனும்னு எனக்குத் தெரியும். யாரும் சொல்லித்தர தேவையில்லை___ சமைச்சிப் போட்டமா விட்டக் கவனிச்சமான்னு இருக்கிற வழியைப்பாரு' எனக் கத்தி விட்டு படுத்துக் கொண்ட கணவனைப் பார்க்க ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது.
'ஆண்' எனும் திமிரில் எப்படிப் பேசுகிறார்? மனைவின்னா சமையலுக்கும் அவங்க தேவைகளைக் கவனிச்சிக்கிட்டும் அவங்க எது செய்தாலும் சகிச்சிக்கிட்டும் இருந்தாத் தான் 'சுற்புக்கரசி', சிறந்த மனைவின்னு பேர் கெடைக்குமோ. இப்படி கேடு கெட்ட மனுசனோட வாழ்ந்துதான் அப்படி பேரெடுக்கனும்னா அந்த புகழே தேவையில்லையே! என்ற எண்ணவோட்டத்தில் கண்ணீரில் கரைகிறாள் ஜானகி.

அடுத்து வந்த நாட்களில் அந்த வீட்டிலிருந்த அமைதி கொஞ்சம் கொஞ்சமாய் விடைபெற்றுக் கொள்ள தினந்தினம் சண்டை சச்சரவு அழுகை என்பதே வாடிக்கையாகிப் போகிறது. ஜானகியும் கெஞ்சலாய், அதிகாரமாய், மிரட்டலாய் என விதம் விதமாய் முயன்று பார்த்துத் தோற்றுக் களைத்துப் போய்விட்டாள். ஆனால் சிவநாதனின் போக்கில் மாற்றம் காணவே முடியவில்லை. பற்றாக்குறைக்கு, 'உனக்கு நாலு பேரோட நாகரீகமா பழக முடியுமா___ உடுத்தத் தெரியுமா. உன்கூடப் போனா நீ அம்மாவான்னு எல்லாரும் கேட்குறான். இவ்வளவு காலத்த வீணாக்கிட்டேன். இப்பதான் வாழ்க்கையையே ரசிக்க ஆரம்பிச்சிருக்கேன். உனக்கென்ன சாப்பாடு உடுப்பு கெடைக்குது தானேன்னு பேசாம கெடக்க வேண்டியது தானே' எனக் கேலியாகச் சிரித்த போது ஜானகிக்கு அழக்கூடத் திராணியற்றுப் போயிற்று.

அந்த மாதம் ஜானகி கையில் கிடைத்த சம்பளப்பணமும் கால்வாசியாகக் குறைந்து போயிருந்தது. 'என்னை விட்டால் உனக்கு வேறு கதியில்லை' என்று சொல்லாமல் சொல்லியது சிவநாதனின் செயல். குனியக் குனிய ஜானகிக்கு குட்டு விழுந்து கொண்டேயிருந்தது. ஜானகியின் நகைகளும் ஒவ்வொன்றாய் ரோஸியிடம் போவது தெரிந்தபோது தான் ஜானகி மெதுவாக நிமிரத் தொடங்கினாள். தனது கோழைத்தனத்தினால் மகளது எதிர்காலமும் இருண்டு போய்விடும் என்பது புரிந்த போது மாற்று வழியை மனம் நாடியது.
காலநூலில் தொண்ணூறு நாட்கள் புரண்டிருந்தது. ஆபத்பாந்தவனாய்க் கை கொடுத்த லலிதாவின் உதவியினால் 'ஓபிஸ்' ஒன்றில் தற்காலிக வேலையில் ஜானகி சேர்ந்திருந்தாள். மறந்து போயிருந்த பழைய திறமைகளைத் தட்டி எழுப்பி ஓரளவுக்கு வேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டபோது ஜானகிக்கு வாழ்க்கை இலேசானதானத் தெரிந்தது. சோதனைகள் தொடர்ந்து வரும்போது தான் தைரியமும் பிறக்கும் என ஜானகிக்குத் தோன்றியது.

காலையில் வேலை, மாலையில் விடுதி வாசம் என பழகிவிட்டிருந்த ஜானகியின் வாழ்க்கையில் அவ்வப்போது வரும் லலிதாவின் கடிதம் கணவனைப் பற்றிய கதை கூறும். அன்றும் கையில் கிடைத்திருந்த கடிதம் சொல்லிய செய்தியைக் காண ஜானகியின் மனம் குரூர திருப்தி கொண்டது. 'உன் கணவரோடு சுற்றிய ரோஸிக்கு அடுத்த வாரம் திருமணம். வெளிநாட்டு மாப்பிள்ளை. திருமணம் முடிந்த கையோடு கனடா பயணமாம்' எனச் செய்தி கூறிய கடிதத்தைப் பலமுறை வாசித்து வாசித்துத் திருப்தி காணுகிறாள் ஜானகி. ரோஸியின் செயல் ஒரு புறம் திருப்தியே



படிப்பகம்

www.padippakam.com

என்றாலும் மறுபுறம் அருவருப்பாயுமிருக்கிறது. ஐந்து மாதமாய் ஒருவனுடன் சுற்றித் திரிந்து விட்டு வேறொருவனுடன் திருமணமா? சே! என்ன பெண் இவள்? என அவள் மீது வெறுப்பு ஏற்பட்டாலும், சிவநாதன் போன்ற ஆண்களுக்கு இப்படிப்பட்ட பெண்கள் கொடுப்பது தான் சரியான தண்டனை எனவும் தனக்குள் திருப்திப்பட்டுக் கொள்கிறாள் ஜானகி.

சலனமற்ற நீரோடையாய் மேலும் ஒரு மாதம் ஓடியிருக்க வழமைபோல் காரியாலயத்தில் வேலையில் மூழ்கியிருந்தவளை யாரோ காண வந்திருப்பதாக பியூன் வந்து கூறிவிட்டு அகல்கிறான். புதிய இடத்தில் இவ்வளவு நாளும் தன்னைத் தேடி யாருமே வந்ததில்லையே..... யாரு லலிதாவாயிருக்குமோ? என்ற ஆவலாய் ஓட்டமும் நடையுமாய் வெளியில் வருகிறாள் ஜானகி. அந்த நீண்ட வரவேற்பறையில் தூரத்தில் வரும்போதே, தலையை கைகளில் புதைத்தபடி அமர்ந்திருக்கும் சிவநாதன் தெரிய ஒரு கணம் தயங்கி நின்று, திரும்பி விடுவோமா என எழுந்த எண்ணத்தை உதறுகிறாள்.

'தவறு செய்தவரே தைரியமாய் வந்திருக்கும் போது நமக்கென்ன' என்ற தைரியத்தில் விரைப்பாக அவர் எதிரில் வந்து அமர்கிறாள் ஜானகி. மெதுவாக நிமிர்ந்து நோக்கிய சிவநாதனிடம் எங்க வந்தீங்க? என்கிறாள் அழுத்தமான குரலில். பேசாது மௌனம் சாதித்த சிவநாதனின் கோலம் முகத்திலறைகிறது. இரண்டு வாரத் தாடியும் எண்ணெய் காணாது வாரப்படாத தலையும், கசங்கிய அழுக்குச் சட்டையுமாகப் பரிதாபமாக விழிக்கும் கணவனைப் பார்க்க மனம் பதறிப் போகிறது. என்றாலும் 'எனக்கு வேலை நிறைய இருக்கு. வந்த விசயத்தைச் சொல்லுங்க' என்கிறாள் விம்பாக. கண்களில் நீர் தழும்பி நிற்க 'ஜானு என்ன...... மன்னிச்சிரும்மா...... வா விட்டுக்குப் போகலாம்' என்கிறார் மெதுவாக,

'நீங்க கூட்டிட்ட நேரம் வரவும் போடின்னா போகவுந்தா நானா' என அந்த ஓபீஸே அதிரும்படி கத்த வேண்டுமென எழுந்த ஆத்திரத்தை வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு சிரிக்கிறாள் ஜானகி. ஏன் ரோஸி உங்கள விட்டுட்டு கனடா போட்டாளா..... இந்த ஆண்களுக்குத் தான் ஒரு பொண்ணு துணை இல்லாம இருக்க முடியாதே என்கிறாள் கேலியாக.

'நா செய்ததெல்லாம் தப்புதான் ஜானு. ப்ளீஸ் என்ன மன்னிச்சி நாசெய்ததெல்லாம் மறந்துட்டு வா போகலாம்' என்கிறார் கெஞ்சலாக.

'தேவையான நேரம் நினைக்கவும் மறக்கவும் நா ஒண்ணும் இயந்திரமில்ல. உணர்ச்சியுள்ள மனுசி. உங்களைப் போல நேரத்துக்கு நிறம்மாற என்னால முடியாது' என்கிறாள் கண்டிப்பான குரலில்.

'அப்ப எனக்கு மன்னிப்பே இல்லியா? ' என்ற சிவநாதன் அழுது விடுவார் போலிருக்க, ஜானகி கல்லாய் அமர்ந்திருக்கிறாள்.

'இப்படித்தானே நானும் எத்தனை தரம் அழுது கெஞ்சியிருப்பேன்..... அதை அனுபவித்தால் தான் அவரவர்க்குப் புரியும்' என்ற எண்ணத்தோடு ஜானகி தனது விரல் நகங்களை ஆராய்ந்தபடி அமர்ந்திருக்கிறாள்.

தன்னைச் சமாதனப் படுத்துவாள் என எதிர்பார்த்து ஏமாந்து போன சிவநாதனே தொடர்கிறார். 'நான் ஒனக்கு செய்த துரோகத்திற்கு எனக்குத் தண்டனை கெடைச்சிருச்சி..... காசு, வேலை, நல்லபேரு எல்லாத்தையும் இழந்துட்டு நிற்கிறேன்...... வா ஜானு போகலாம்' எனப் பேசிக் கொண்டே போனவரை இடைமறிக்கிறாள் ஜானகி.

'புரியாத வயசுல தவறு செய்தா மன்னிக்கலாம்....... தெரிஞ்சே தவறு செய்யறவங்க அதுக்கான தண்டனையும் அடைஞ்சே தீரணும்..... ஆண்கள் தவறு செய்துட்டு வர்றப்ப எல்லாம் பெண்கள் மன்னிச்சி ஏத்துக்கிறதால தான் அவங்களுக்கு அதுவே வாடிக்கையாய்ப் போச்சி. இந்த பொம்பளைகளுக்கும் வேற வழியில்லாமத்தான் உங்களையெல்லாம் ஏத்துக்கிறதா அலட்சியமா நெனச்சிக்கிட்டு நீங்க நடத்துறீங்க..... அப்படிப்பட்டவங்களுக்கு இது ஒரு பாடமா இருக்கட்டும்.....



படிப்பகம்

www.padippakam.com

பெண்களுக்கு தனியான விருப்பு வெறுப்புகள் இருக்குன்னு இனியாவது புரிஞ்சிக்குங்க. பதினைஞ்சி வருசமா உங்களுக்காகவே வாழ்ந்திட்டிருந்த எனக்கு என்ன கிடைச்சிச்சி. அதனால இனிமிருக்கப் போற காலத்தையாவது என் இஷ்டப்படி எனக்காகன்னு என் வாழ்க்கையை வாழப்போறேன்— நீங்க போகலாம். ஏன்னா 'தீக்குளி'ன்னு சொன்ன உடனேயே தீக்குளிக்க நா ராமாயண கால ஜானகியும் இல்ல; திரும்பி வந்த கணவனுக்காக மதுரையை எரிக்க கண்ணகியும் இல்ல. நீங்க என்ன விட்டுட்டுப் போனது போன மாதிரியே இருக்கட்டும். இனி என்னத் தேடி வந்து தொந்தரவு செய்யாதீங்க' என நீளமாகப் பேசி முடிந்தவளுக்கு மூச்சிரைக்க குரல் கரகரத்துப் பிசிறடிக்கிறது. சுய பச்சாதாபத்தில் வந்து விழத் துடித்துக் கொண்டிருந்த கண்ணீரை அடக்கியபடி 'விருக்'கென எழுந்து உள்ளே நடக்கிறாள் ஜானகி. நிமிர்ந்த அவள் நடையில் தெரிந்த உறுதியே அவள் பழைய ஜானகியில்லை என்பதை உணர்த்த— தளர்வாய் எழுந்து வெளியேறுகிறார் சிவநாதன்.

மகள் நித்யாவுக்கு நல்ல கணவனைத் தேடித் தர முடியாமல் போனாலும் நல்ல கல்வியைத் தேடித் தருவதில் உறுதியாய் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அலுவலக வேலைகளில் மூழ்கிப் போகிறாள் ஜானகி.

✗

---

# என்ன செய்யலாம்?

– [illegible] –

பாலியல் துஷ்பிரயோகம், வன்முறை, பலாத்காரம் என்பன பற்றி நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருந்தாலும், இதுபற்றிய போதியளவு கலந்துரையாடல்களும், விவாதங்களும் எம்மிடையே இடம்பெறுவதில்லை. அப்படியான ஒரு கலந்துரையாடலையும், இந்த வன்முறைகளுக்கு எதிராக நாம் என்ன செய்யலாம், என்னென்ன சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பன பற்றிய விவாதத்தையும் மேற்கொள்வதன் ஒரு ஆரம்பமாகவே இந்தக் கட்டுரை எழுதப்படுகின்றது.

ஆணாதிக்க சமுதாயமும் அதிலுள்ள அதிகாரப் படிநிலையும் இப்படியான விவாதங்கள் எம்மிடையே இடம்பெறாததற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. பாலியல் துஷ்பிரயோகம் என்பது ஒருவர், சிறுவர்/சிறுமியரின் அறியாமையை அவர்களது நம்பிக்கையை அல்லது அவர்கள் இந் நபர் மீது தங்கியிருத்தலை உபயோகிப்பதுடன் இச் சிறுவர்/சிறுமியர் மீது உடல்ரீதியானதும், உளவியல் ரீதியானதுமான வன்முறையைப் பாவித்து தங்களது பாலியல் இச்சையைத் தீர்த்துக் கொள்ளுதல் ஆகும். இச் சந்தர்ப்பங்களில் இச் சிறுவர்கள் தெரிவிக்கும் எதிர்ப்புக்கள் பயமுறுத்தல்களால் முறியடிக்கப்பட்டு விடுகின்றன. உலகில் கிட்டதட்ட நாலில் ஒரு பங்கு சிறுமியும், பன்னிரண்டில் ஒரு பங்கு சிறுவனும் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர். இதனைச் செய்யும் வன்முறையாளர்களாக 90 வீதம் ஆண்களும், 10 வீதம் பெண்களும் இருக்கின்றார்கள். அதிகமான சிறுமிகள் (பெண்கள்) தங்களது குடும்ப அங்கத்தவர்களான தந்தை, மாற்றுத் தந்தை, பாட்டன், சகோதரன், மாமன் போன்றவர்களாலும், சிறுவர்கள் (ஆண்கள்) அவர்களது சுற்றாடலில் உள்ள போதகர், ஆசிரியர், இளைஞர் குழுத்தலைவர், சாரணர் குழுத்தலைவர் போன்றவர்களாலும் இவ் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். 20 சதவீதமானோர் 0-4 வயது குழந்தைகளும் 39 சதவீதமானோர் 5-8 வயதுக்கு உட்பட்டவர்களுமாவர்.

இந்த வன்முறையானது பலாத்காரம் செய்தல், Phono படங்களைக் காட்டுதல், சிறுவர் சிறுமியரை வைத்து Phono படங்கள் எடுத்தல், நிர்வாணமாக நடக்க வைத்தல் போன்ற பல வகைகளில் செயற்படுத்தப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாலியல் வன்முறை பற்றி குடும்பத்திலோ, நண்பர்களுடனோ கதைக்க முடியாத நிலை. ஒருபுறம் இதுபற்றிக் கதைத்தால் குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் ஏற்படும் என்ற பயத்தினாலும், மறுபக்கம் இவ்விடயம் பற்றி மற்றவர்களுடன் கதைப்பது சரியா? இவர்கள் தம்மை நம்புவார்களா? என்ற சந்தேகத்தினாலும் பெண்கள் வருடக்கணக்காக இந்த உண்மையை தம்முடனே மறைத்து வைத்துக் கொள்கின்றார்கள். (ஏனெனில் எமது சமுதாயத்தில் பெண்கள் தமக்கு ஆண்களால் இழைக்கப்படும் வன்முறைகளை சுட்டிக்காட்டும் போது சமூகம் இவர்களை நம்புவதில்லை என்பது நாம் காலம் காலமாக கண்ட உண்மை) இப்படி யான ஒரு நிலைமை மேலும் தொடராது இருக்க பெண்களாகிய நாம் துணிந்து இதுபற்றி நண்பர்க ளுடனோ மற்றவர்களுடனோ கதைக்கவும், இதற்கு எதிராக என்ன செய்யலாம் என்ற உதவிகளைப் பெறுவதற்கும் முன்வரவேண்டும். இன்று ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரையில் ஒரு மாணவி தனது பாடசாலை ஆசிரியரிடம் இப்படியான பிரச்சினைகளைக் கதைத்தால், இம் அவர்கள் இம் மாணவியின் பிரச்சினையை கவனத்தில் எடுத்து உடனடியாக அவளுக்கு உதவிசெய்ய வேண்டியது ஆசிரியரின் கடமை.

பெண்களுக்கு வன்முறை எந்த வடிவத்தில் ஏற்பட்டாலும் அவர்களுக்கு ஆலோசனை கூறவும், அவர்கள் வன்முறையாளரிடமிருந்து தப்பித்து மறைமுகமாக வாழவும், அவர்களுக்கு வைத்திய சிகிச்சைமுறை அளிக்கவும் என பல நிறுவனங்கள் இங்கு ஐரோப்பாவில் உள்ளன. இங்குள்ள பெண்கள் அமைப்புகள் தான் முதன்முதலில் மக்களிடையே சிறுமிகள்/பெண்கள் மீதான பாலியல் வன்முறை பற்றி விவாதங்களையும், கலந்துரையாடல்களையும் நடத்தினார்கள். ஆரம்ப த்தில் இங்கும் மக்கள் இப்படியான வன்முறைகள் தங்களது சமூகத்திலோ குடும்பங்களிலோ இல்லை என மறுத்து விட்டார்கள். ஆனால் இங்குள்ள பெண்கள் அமைப்புகளோ சலிப்படைந்து போகாமல் பாலியல் வன்முறைக்கு ஆளாகிய சிறுமிகள், பெண்கள் அனைவரையும் இணைத்து கூட்டங் களையும் ஊர்வலங்களையும் நடத்தினார்கள். (பத்திரிகை, தொலைக்காட்சி போன்றவற்றில் பெண்கள் துணிந்து தங்களுக்கு நடைபெற்ற சம்பவத்தை எடுத்துக் கூறினார்கள்.) இதன்மூலம் இவர்கள் காட்டிய எதிர்ப்பின் விளைவாகத்தான் இன்று பாலியல் வன்முறைச் செயல்கள் இங்கு ஒரு தற்செயலாக நடைபெறுகிறது அல்லது ஒரு சாதாரண குற்றமற்ற செயல் என விடப்படாமல் விசாரணைகளும் வழக்குகளும் நீதிமன்றங்களில் நடைபெறுகின்றது.

இங்குள்ள பெண்கள் அமைப்புகள் நடத்திய/நடத்துகின்ற போராட்டத்தின் ஒரு விளைவாகத் தான் இங்கு Frauenhäuser, Mädchenhäuser, Frauennotrufe என்பன ஆரம்பிக்கப்பட்டன. உதாரணமாக ஜேர்மனி, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளைப் பொறுத்தவரையில் இவை Mädchen Haus, Frauen Haus, Zufluchts Wohnung, Mädchen Notruf, Frauen Kreisen Telefon என பலவிதமான அமைப்புகளாக உள்ளன. இந் நிறுவனங்களில் பெண்கள் மாத்திரமே வேலை செய்கிறார்கள். இவர்களது வேலையில் முக்கிய அம்சமாக Parteilichkeit für Mädchen (அங்கு வரும் பெண்களுக்கு அவர்களது பிரச்சினையை அறிந்து, அவர்களில் நம்பிக்கை வைத்து அவர்களுக்கான ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்குதல்) என்ற வேலைமுறை இருக்கும். அத்துடன் குற்றவாளி (எதிரி) யுடனோ வன்முறையாளர்களுடனோ சேர்ந்து வேலைசெய்வதில்லை. உதாரணமாக இவ்விடங்களுக்கு பெண்கள் உதவி தேடி வந்தால் இவர்கள் பற்றிய தகவல்கள் அனைத்தும் இரகசியமாகவே வைத்திருக்கப்படும். மொழிப் பிரச்சினை இருக்குமிடத்து இவர்கள் பெண் மொழிபெயர்ப்பாளர்களை ஒழுங்கு செய்வார்கள்.

Frauenhaus, Mädchenhaus போன்றவை பெண்களுக்குப் பாதுகாப்பும் வசிப்பதற்கு இடமும் ஒழுங்கு செய்வார்கள். அதிகமான இந்த நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங் கள் ஆகும். Frauenhaus, Mädchenhaus போன்றவற்றின் தொலைபேசி இலக்கம் மாத்திரம் முதலில் கிடைக்கும். இந்தத் தொலைபேசியில் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். பெண்களிடம் இந்தத் தொலைபேசி இலக்கம் இல்லாதவிடத்து இவர்கள் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தங்களுக்கு நடக்கும்/நடந்த வன்முறை பற்றிக் கூறினால், பொலிசார் இவர்களை Frauenhaus, Mädchenhaus இற்கு கூட்டிச் செல்வார்கள். இங்கு பெண்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு தங்குவதற்கான வசதிகள் உண்டு. ✘

www.padippakam.com

" இன்றைய காலம்
சிவப்பாய் போன போதும்
தொலைத்த நாட்களின் கனவுகள்
தீப்பற்றி சாம்பலாய்
உன் முகத்திலேயே படிந்த போதும்
இருள் மண்டிக்கிடக்கும்
வானத்தில் இருக்கும் ஒரு நட்சத்திரமாய்
நம்பிக்கை கொள்! "

**அர்த்தங்கள்**

பாமதி
(கனடா)

தலைக்கு மேல் வானமும்
கண்ணுக்கு எட்டிய வரை நிலமும்
உன் பிறப்பிற்கு ஓராயிரம் அர்த்தங்களை
பிரகடனப்படுத்தும்

பிஞ்சு மகரந்தங்கள் எரிகின்ற பொழுது
இரத்தம் சிந்திய உன் மண்ணில்
இறக்கை தொலைத்தவர்களின் முனகல்
கேட்கும் வரை
உன் பிறப்பு மிகவும் அர்த்தம் கொண்டது

உயிர் அணுக்களையும் உதிரத்தையும் விதைத்து
படைத்தோம் யுகத்தினை
இன்றைய காலம்
சிவப்பாய் போன போதும்
தொலைத்த நாட்களின் கனவுகள்
தீப்பற்றி சாம்பலாய்
உன் முகத்திலேயே படிந்த போதும்
இருள் மண்டிக்கிடக்கும்
வானத்தில் இருக்கும் ஒரு நட்சத்திரமாய்
நம்பிக்கை கொள்!
உன்னைப் போன்று
நூற்றுக்கணக்கான குப்பி விளக்குகள்
அக்கணத்திற்காய் காத்துக்கிடக்கும்.

படிப்பகம்